Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

தரமான
உதிரிப்பாகங்களைக்
கொண்டு தயாரிக்கப்படும்
நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்.

மலர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு கார்த்திகை மீ 18 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 22 (03-12-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY கிரகம்: 36

செய்திச் சாரம்

பெனுஸிர் சத்தியப்பிரமாணம்

இஸ்லாமபாத், டிச. 3

திருமதி பெனுஸிர் பூட்டோ நேற்று பாகிஸ்தானின் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

உலகிலேயே வயதில் குறைந்த பிரதமர் என்ற பெருமையும் பெனுஸிருக்குக் கிடைத்துள்ளது.

திருமதி பெனுஸிரை வாழ்த்தி இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பிரதமர் பிரேமதாஸாவும் நேற்றுச் செய்திகள் அனுப்பினர். (உ-எ)

சீமெந்து உற்பத்தி பாதிப்பு

காங்கேசன்துறை, டிச 3

காங்கேசன் சீமெந்து ஆலையில் மின்தடை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சீமெந்துக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தினமும் பெரும் எண்ணிக்கையான லொறிகள் சீமெந்தைப் பெறுவதற்காக கியூவில் காத்து நிற்கின்றன. (ஒ-68)

ரயில் பாதை தகர்ப்பு

கொழும்பு, டிச 3

தொடர்ந்துவைக்கும் ஹிக்கடுவைக்கும் இடையே ரயில் பாதை இனந்தெரியாதவர்களினால் நேற்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது

இதனால் தென்மாகாணத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் ரயில் தாமதமாகச் செல்ல வேண்டி ஏற்பட்டதாக அரசு நேற்று அறிவித்தது. (உ-எ)

உப தலைவர் உயிரிழந்தார்

கொழும்பு, டிச 3

ஜனாதிபதி வேட்பாளர் ஒஸி அபய குணசேகரா மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவர் இலங்கை மக்கள் கட்சியின் உபதலைவர் தேவபண்டாரா சேனரத்தும் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயம் சேனரத் மேடையில் பேசிக்கொண்டிருந்தார். (உ-எ)

நியூஸிலாந்து 228 ஓட்டங்கள்

ஹைதராபாத், டிச. 3

நியூஸிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையேயான மூன்றாவது இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நேற்று ஹைதராபாத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 6 விக்கட்டுகளை இழந்து 228 ஓட்டங்களை எடுத்து இருந்தது. (உ-எ)

ஒருதலைப்பட்சமாக

ஒப்பந்தம் ரத்தானால் பாரதூரமான விளைவு!

பிரேமா, சிறிமா இருவருக்கும் தூதர் டிக்ஸிற் எடுத்துரைப்பு

கொழும்பு, டிசம்பர் 3

இலங்கை— இந்திய ஒப்பந்தம் ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்யப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் நினைத்துப் பார்க்க முடியாதவையாக — பாரதூரமானவையாக— இருக்கும்.

இந்த நிலையை பிரதமர் பிரேமதாஸாவுக்கும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் நான் நேரில் எடுத்துக் கூறிவிட்டேன்.

கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கக் கூட்டத்தில் அவர் பேசினார். அப்போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக ரத்துச் செய்வது பற்றி பேசப்படுகிறது புதிதாக வரும் ஜனாதிபதி ஒப்பந்தத்தை ரத்துச் செய்யமுடியும். ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டால் மறுதரப்பினரும் சுதந்திரமாக - எதற்கும் கட்டுப்படாமல் செயற்படக் கூடிய நிலை உருவாகும். இதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ,

ஐ. நா. கூட்டம் ஜெனிவாவில்

ஐ நா, டிச. 3

பலஸ்தீனம் பற்றிய விவாதத்தை நடத்த ஐ நா சபையின் விசேட பொதுக் கூட்டம் இம்மாதம் 13முதல் 15ஆம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது

நியூயோர்க்கில் நடைபெறவிருந்த ஐ நா சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுவதற்காக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் அமெரிக்கா வருவதற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

ரஷ்ய நாட்டு விமானம் இஸ்ரேலுக்கு கடத்தல்!

மாஸ்கோ, டிச. 3

ரஷ்யாவின் உள்நாட்டு போக்குவரத்து விமானம் ஒன்று இஸ்ரவேல் தலைநகரான டெல் அவிவிற்கு கடத்தப்பட்டது.

இஸ்ரவேலுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படாத ரஷ்யாவில் தங்கி உள்ள யூதர்கள் இவ் விமானத்தைக் கடத்தி இஸ்ரவேலுக்குச் செல்ல முயற்சித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று பாடசாலைக் குழந்தைகளைச் சிறைபிடித்து, அவர்களைப் பணயக்கைதிகளாக வைத்துக் கொண்டு இந்த விமானத்தைக் கடத்தி செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த விமானம் டெல் அவிவ் விமான நிலையத்தில் இறங்குவதற்குஇஸ்ரவேல் அனுமதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தச்செய்தி எழுதப்படும் வேளையில் அவ்விமானம் டெல் அவிவ் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. (உ-எ)

தேர்தல் பணிக்கு வருமாறு வடபகுதி அரச அதிகாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிச. 3

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் அதிகாரிகளாகக் கடமையாற்ற வருமாறு வடபகுதியில் உள்ள சகல அரச அதிகாரிகளுக்கும் அரசு பணிப்புரை விடுத்திருக்கிறது.

பொது நிர்வாக அமைச்சு இது தொடர்பாக சகல அரச அலுவலகங்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

வடபகுதியில் உள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அதிகாரிகள் தமது பெயர்ப்பட்டியல்களை மூன்று பிரிவாகத்தயாரித்து, அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அந்த சுற்று நிருபத்தில் கோரப்பட்டிருக்கிறது.

எனினும் வடபகுதியில் உள்ள பல அரச அதிகாரிகள் தேர்தல் அதிகாரிகளாகக் கடமையாற்ற பின்நிற்பதாகத் தெரிய வருகிறது.

வடபகுதியில் உள்ள பல அரச அலுவலகங்களில் வாகன வசதிகள் இல்லை இதனால் தேர்தல் கடமையில் ஈடுபட முடியாது எனவும் —

(4ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு தீவிரம்

டெல்அவிவ், டிச. 3

டெல்அவிவ் பென் குரியன் விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் ரபின் விமான நிலையத்தில் பாதுகாப்புப் படைத் தளபதிகளுடன் விமானத்தின் வரவை எதிர்பார்த்து நிற்கிறார்.

அம்புலன்ஸ்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. (ஒ-எ)

சிப்பாய் உட்பட 4 பேர் பலி!

கொழும்பு, டிச. 3

தென்பகுதியில் மொனருகலை, அம்பாறை, அஹங்கம, கெக்கிராவை ஆகிய இடங்களில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்தனர் என்று ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ)

வர்த்தகர் சுட்டுக் கொலை

பச்சிலைப்பள்ளி டிச 3

சாவகச்சேரி மீன் சந்தைக்குமுன்பாக எண்ணெய் வியாபாரி ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று மதியம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

4 லட்சம் மாணவர்கள் பாதிப்பு:

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கிடைப்பதில் தாமதம்

கொழும்பு, டிச,3

ஆறும், ஏழாம் வருட வகுப்புக்களுக்கு அனுமதி கோரும் சுமார் 4 லட்சம் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளிவரத் தாமதமாவதால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் தாங்கள் விரும்பிய முன்னணி பாடசாலைகளில் சேர்ந்து கொள்ள முடியும்.

முடிவுகள் வரத்தாமதமாவதால் அவர்களும் முன்னணிப் பாடசாலை (4 ஆம் பக்கம் பார்க்க)

பாணந்துறையில் 3 தீவிரவாதிகள் பலி

கொழும்பு டிச 3

பாணந்துறை பள்ளிமுல்லையில் நேற்று இடம்பெற்ற மோதலில் ஒன்றில் மூன்று தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

இரண்டு பொலீஸார் காயமடைந்தனர்.

காவலில் நின்ற இரண்டு பொலீஸ்காரர்களிடம் இருந்து துப்பாக்கிகளைப் பறிக்க பத்துபேர் கொண்ட இனந்தெரியாதகோஷ்டி ஒன்று முயற்சித்தது

அப்போது சிவில் உடையில் இருந்த பொலீஸார் அவர்களில் மூவரைக் கத்தியால் குத்தி கொலை செய்தனர் வேறு சிலர் காயமடைந்தனர். (உ-எ)

ஐஸ் விலையேற்றம்! இருல் விலை இறக்கம்!!

குருநகர், டிச 3

ஒரு அந்தர் ஐஸ் கட்டியின் விலை யாழ்ப்பாணத்தில் 125 ரூபாவாக அதிகரித்துள்ளது. மின்சாரப் பற்றாக்குறையே இதற்குக் காரணம்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஐஸ் விலை 50 ரூபாவாக இருந்து வந்தது.

இதேசமயம் இருவின் விலை குடாநாட்டில் திடீரென்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இருல் ஏற்றுமதி செய்து வந்த நிறுவனங்கள் ஐஸ் தட்டுப்பாடு ஏற்பட்டதைக் காரணம் காட்டி இருலின் விலையைத் திடீரென்று குறைத்து விட்டதாக அறிவிப்படுகிறது

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள இவ்வேளை இருவின் விலை குறைந்துள்ளதால் எரிபொருளைப் பயன் படுத்தி இருல் தொழில் செய்து வந்த தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-51)

மாகாண சபை; முதற்கூட்டம் திருமலையில் திங்களன்று நடைபெறும்

கொழும்பு, டிச. 3

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலாவது கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை திருகோணமலை நகர மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மாகாணசபை உறுப்பினர்கள் அப்போது ஆளுநர் முன்னிலையில் விசுவாசப்பிரமாணஞ் செய்து கொள்வார்கள்.

இத்தகவல்களை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரான லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்தினா நேற்றுக் கொழும்பில் வெளியிட்டார். (உ - எ)

ஒஸியை ஆதரிக்க ஈ. பி. ஆர். எல். எவ். முடிவு

கொழும்பு டிச 3

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் கட்சி வேட்பாளரான திரு. ஒஸி அபேகுணசேகராவை ஆதரிப்பதற்கு ஈ. பி ஆர். எல். எவ் முடிவு செய்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. ஏ. வரதராஜப் (4 ஆம் பக்கம் பார்க்க)

சிறிமாவின் கூட்டத்தில் எலி ஏற்படுத்திய கிலி!

கொழும்பு, டிச. 3

சிறிமா பண்டாரநாயக்காவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எலி ஒன்று பெரும் கிலியை ஏற்படுத்தியது.

மருதானை, டஞ்சிகாவத்தையில் கடந்த திங்கள் இரவு 9.30 மணியளவில் இக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இரவு 9. 30 மணி திரளான மக்கள் "இப்போது திருமதி சிறிமா (4 ஆம் பக்கம் பார்க்க)

காரைநகர் வலந்தலையில் ஒருவர் சூட்டுக்குப் பலி

காரைநகர், டிச. 3

காரைநகர் வலந்தலையில் நேற்று முன்தினம் ஊரடங்குச் சட்ட நேரத்தில் நடமாடியதாகக் கூறப்படும் ஒருவர் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி மரணமானார்.

மரணமானவர் வலந்தலையைச் சேர்ந்த திரு. (4 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா இராணுவ பாதுகாப்புடன்

வடபகுதிக்கான தபால்கள் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம் டிச. 3

வடபகுதிக்கானதபால் பொதிகள் ஸ்ரீலங்கா இராணுவப் பாதுகாப்புடன்கொழும்பில்இருந்து விசேட பஸ் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை கொழும்பு பிரதமதபால் அலுவலகத்தில் இருந்த 600 தபால் பொதிகளும் விசேட பஸ்ஸில் அனுப்பப்பட்டன.

வவுனியாவுக்கு தபால் பொதிகள் வந்து சேர்ந்ததும் யாழ்ப்பாணத்துக்கான 450 தபால் பொதிகளும் மற்றொரு பஸ்ஸில் இங்கு எடுத்துவரப்படும் என தபாலா உயரதிகாரிஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் தேங்கிக்கிடந்த தபால் பொதிகள்அனைத்தும் விசேட பஸ் மூலம் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

3 - 12 - 1988
கார்த்திகை 18
சனிக்கிழமை

சுபநேரம்:-
3-15 முதல் 4-45வரை
ராகுகாலம்:-
9-15 முதல் 10-45வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

7ஆம் திகதி பல்கலைக்கழகம் திறக்கப்படும்

கொழும்பு, டிச 3

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் எதிர்வரும் 7-ஆம்திகதி புதன்கிழமை மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதியில் தங்கும் மாணவர்களை எதிர்வரும் 6ஆம் திகதி விடுதிக்குச் சமுகம் அளிக்குமாறு பல்கலைக்கழக துணைவேந்தர் கேட்டுள்ளார். (ஒ

பக்மையும் எழிலும் பல்சுவை வார இதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு சில்லறை விலை கிலோ 40/- தொடர்பு: அ. யோகானந்தா, தபால் நிலைய அருகில், சாவகச்சேரி (8015)

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards). திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஐவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/357)

தேவை

பிளேட்டின் மெசின், றூலிங் மெசின் உடனடியாகத் தேவை விலை விபரங்களுடன் தொர்பு கொள்ளவும் இல. 398, C /பா, உதயன். யாழ்ப்பாணம். (8027)

ஆங்கில/ சிங்கள வகுப்பை ஸ்தாபிப்பதிலும், நிர்வகிப்பதிலும், இலைப்பறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு பக்க உதவியாக இருக்கக்கூடிய பெண்களும், அதற்கான சிறு இடமும் தேவை. அத்துடன் இலைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு தங்குமிடமும் முடியுமாயின் சைவ உணவு வசதியுடன் தேவை. தனிப்பட்ட ஆங்கில/ சிங்கள வகுப்பு நடத்தக்கூடிய இடம் விரும்பத்தகாது 396/, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8023)

ஆண்டு 3, 5இல் கற்கும் பிள்ளைகளுக்கு வீட்டில் வந்து பாடங்கள் கற்பிப்பதற்கு பெண்பிள்ளை ஒருவர் தேவை. தொடர்பு:- 397, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (8024)

பணமன்தேவை

அரசாங்க பிரஸ்லையில் உள்ள யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் இந்து வேளாளர்குல 37 வயதுக் கன்னிப் பெண்ணுக்குப் பொருத்தமான வரன் தேவை. தகுந்த சீதனம் எழுங்கப்படும். தொடர்பு: 342, C/o உதயன், யாழ்ப்பாணம். (7929)

மணமகள் தேவை

பிராமணகுல டாக்டர் பையனுக்கு அதே குலத்து மணமகள் தேவை. அழகும் நிறமும் கல்வித் தகைமையும் உடையவராக இருத்தல் வேண்டும். மணமகன் தாரமிழந்தவர் இருகுழந்தைகள் உண்டு வயது 35 செவ்வாய்தோஷம் உண்டு. புகைப்படம், சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. K லைத்தீஸ்வரக் குருக்கள் வில்லூன்றிப் பிள்ளையார் கோவில், கொட்டடி. (7771)

வேலை தேவை

ஆங்கிலத்தில் கருக்கெழுத்து தட்டெழுத்து கணக்கியல் மற்றும் ஆங்கில மொழி ஆகியவை படிப்பிக்கக்கூடிய ஒருவாக்கு வேலை தேவை 394, C/O உதயன், யாழ்ப்பாணம். (8017)

தவறிவிட்டது

சின்னத்துரை கோபாலகிருஷ்ணன் என்பவருடைய 5432223 35V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை சுன்னாகத்தில் தவறிவிட்டது சண்டு எடுத்தவர்கள் சுன்னாகத்தில் துர்க்கா பேப்பர் கடையில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (8026)

சேவை

பல்கலைக்கழக மாணவர்களால் G C E O/L விஞ்ஞானம் (89 Feb 89 Dec) கற்பிக்கப்படும் தனிப்பட்ட முறையிலோ, குழுக்களாகவும் கற்பிக்கப்படும். மற்றும் கார்சாரதிகள் தேவைப்படுவோரும் தொடர்பு கொள்க விளம்பர இல: 8 C/o உதயன். யாழ்ப்பாணம். (7779)

வகுப்புக்கள்

சேக் ஐரிங், ஜெனரல் குக்கரி வகுப்புக்கள் பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோர்க்கும். இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். காலம்:- 2 மாதம் ஆரம்பம்: 14-12-88 தொடர்பு: Arullananda, 11/2, லைமன் வீதி, நல்லூர். (8033)

ஆங்கில / சிங்கள வகுப்புகள்

இலைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினரால் எமது ஸ்தாபனத்திலும் வேறு ஸ்தாபனங்களிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும் இருபாலாரும் விண்ணப்பிக்கவும் ஆங்கில / சிங்கள ஆசிரியர். I E T. 11B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி) [8001]

Spoken and Written ஆரம்ப அறிவிலிருந்து உடனடியாக ஆரம்பிக்கப்படுகிறது தொடர்பு: I E T Institute 11B, Stanley Road, Jaffna. (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி) (8022)

A/L 89 இரசாயனம்

108 Brown Road A/L 89 பௌதிக இரசாயனம் "சமநிலை" ஆரம்பம் (3-12-1988) சனி 3.15 P M (சனி ஞாயிறு 3 15-4 15 P M) 4 15 6 00 P M (இரசாயனம் பிணைப்பு சேதன இரசாயனம்) ஆசிரியர்: சத்தீஸ் 8016

சமூகக்கல்விப் பயிற்சிகள்

ஆண்டு 11 10. 9. 8, 7 6 வகுப்புக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள் வினா விடைகள் வெளிவந்துவிட்டன. ஆக்கியோன்: க. குணராசா- எம் ஏ. விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7715)

For Two Years Lease

Spacious modern house in safe, secluded area, Pandateruppu. Partly Air Conditioned Swimming pool Garden, produce For terms Contact:- Joachim 'Padua' Pandateruppu 8014

A.T. STUD

Pure bred alsatian splendid Specimen, moderate terms Transport provided Joachim 'Padua'' Pandateuppu (8018)

கஜோ ரவல்ஸ்

அமெரிக்கா (America) விற்குப் பிரயாணம் செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது செல்ல விரும்புவோர் தாமதியாது 7ஆம் திகதிக்குப் பின்னர் கஜோ ஸ் ஸ்தானம், இல 21, வேம்படிவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/863)

[Attention]

Engineering Students & Those who are in Engineering Trade

ENGINEERING COUNCIL EXAMINATION
(LONDON
Part I — May 89/90

CITY AND GUILDS OF LONDON INSTITUTE
Telecommunication & Electrical Engineering Technicians

Weekend classes are just started. Few more vacancies to be filled immediately on

'First come first serve basis''

No application will be entertained after **08 01-89.**

Contact:
S Thavachelvan,
(Director)
Westinghouse Institute of Technology
Premises
Northern Construction Consortium Ltd., (NCCL)
15, Vellan Theru,
(Near Felanadu Office)
JAFFNA.

(7773)

BECON

156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்
A/L 89
DAY CLASSES

(முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்)

பொருளியல்:-	வரகராஜன்
அளவையியல்:-	S. S மனோகரன்
வர்த்தகம்:-	ரட்ணம்
கணக்கியல்:-	மரியதாஸ்
தமிழ்:-	தாஸ்
இந்துநாகரிகம்:-	ஜோதீஸ்வரன்

ஆரம்பம்:- 05 12 - 1988
திங்கள் 7.00 A. M

A/L 90 பிரிவு 4

சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்:- 4-12-1988
ஞாயிறு 8.00 A. M

(C848)

FORTUNA ENTERPRISES
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

1. தைவான்
தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம்— ரூபா 12 000/ +
இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது- 22 - 32

2. குவைத்
தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD— 3300 +
இருப்பிட வசதி

3. சிங்கப்பூர்
SINGAPORE: Mould Makers
(அச்சு அமைப்பாளர்)
சம்பளம் S $. 500/=— Rs. 24000/- +
இருப்பிட வசதி

நாடவேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

இ. விஸ்வேஸ்வராயன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
சங்கரத்தை. (C/851)

Jaffna English Academy
(A LUX IN TENEBRIS)

NCE (Elementary) Examination.
LONDON CERTIFICATE

London Examination held at Jaffna English Academy
The local Examination Centre for Pitmans.

Assessment of Answerscripts and
Award of Certificates from Pitmans-London.

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்றுப் புலமை பெறவும் London Certificates பெறவும் அரியதொரு சந்தர்ப்பம்.

விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில்
10-30 a.m. to 12-30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக்கட்டணம்: ரூபா 350/- மட்டும்
தொடக்கம்: 4-12-88

TOEFL:

More past papers will be done. Intensive Coaching to help students to achieve success.

விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில்
8-30 a.m. to 10-30 a.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக்கட்டணம்: ரூபா 300/- மட்டும்.
தொடக்கம்: 4-12-88

விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்
9, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

J.M.J
உங்கள் பயண அமைப்பாளர்

கனடா ✶ ஜெர்மனி ✶ பிரான்ஸ் ✶ சுவிஸ் ✶ இத்தாலி

மேற்கு நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம். எமது குழுக்கள் பிரதிவாரமும்

கனடா, ஜெர்மனி, பிரான்ஸ்
ஆகிய நாடுகளுக்கு
எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.
இது ஓர் அரிய சந்தர்ப்பம்

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கின்றேன்

● முக்கிய குறிப்பு
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்

S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

C/796

மீண்டும் வழமைபோல் விற்பனைக்கு உண்டு!!

கீல்ஸ் (KEELS) நிறுவனத்தின் பதப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள்

Keels Products

Mutton, Beef, Chicken, Pork Sausages
Bacon, Meat Balls etc .....
Carnivel Ice Cream
('காணிவல்' ஐஸ்கிறீம்)

பமிலி புளக் (Family Block), கப்ஸ் (Cups), பலவகையான சுவைகளில் .....

Andreiz Products

உடைத்த இறால், சிங்கறால், கணவாய், கணவாய்முட்டை, அறுக்குளா, பாரை மீன் etc .....

Eggs முட்டை

Broilers

புறொய்லர் கோழி இறைச்சி

விநியோகஸ்தர்:

மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சறி
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு:
ஜெனரேட்டர் உதவியுடன் மின்சாரம் பெறப்படுவதால் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்படுகின்றது. (C,835)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

புதிதாக ஆரம்பித்துள்ள நகைக் கடைக்குப் பெண் உதவியாளர் தேவை. ஓளவு கணக்கியல் அறிவு தெரிந்திருப்பது விரும்பத்தக்கது
விண்ணப்ப முடிவு திகதி 10.12.88.

இல.395, C/o. உதயன்,
யாழ்ப்பாணம். (8156)

+
J M J

உங்கள் பயண அமைப்பாளர்

எஸ். பி. அன்ரன்

வழங்கும்

வெளிநாட்டுப்பயண ஒழுங்குகள்

வெளிநாடுகளில் வீட்டுப்பணிப் பெண்களாக பணியாற்றுவதற்கு

- U. K.
- FRANCE
- GREECE
- SINGAPORE
- KUWAIT
- ABUDHABI
- DUBAI

முதலிய நாடுகளில் கண்ணியமான குடும்பங்களில் வீட்டுப் பணிப்பெண்களாகப் பணிபுரிவற்கு துரிதகதியில் ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு உடனே நேரில் வரவும்.

உங்கள் பயண அமைப்பாளர்:

S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-850)

இன்று தொடக்கம்!

பிரயாணிகளுக்கு வசதியான தங்குமிட ஒழுங்குகள்!

BELLA CASA

BOARDING & LODGING

126, மவுண் கார்மேல் ரோட்,
(பிரதம தபாற்கந்தோர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C/466)

THE EXPRESS INSTITUTE KOPPAY
A BOON TO STUDENTS

A/L 90

(2 ஆவது புதிய பிரிவு)

டிசம்பர் 02 இல் ஆரம்பம்

தூய / பிரயோக கணிதம்:	திரு. வெக்டர்
இரசாயனவியல்:	திரு. சண்முக சுந்தரம்
பௌதீகவியல்:	திரு. சோதிலிங்கம்
விலங்கியல்:	திரு. ஈசன்
தாவரவியல்:	திரு. பாலா

சகல பாடங்களும் வலகு 01 இல் இருந்து ஆரம்பிக்கப்படும்.

10 ஆம் திகதிக்குப் பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

(C-830)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி சிந்துஜா
(3-12-88)

புலோலி கிழக்கு விஸ்வதல ஒழுங்கை பருத்தித்துறையைச்சேர்ந்த சிவநேசன் ஜெயகௌரி தம்பதியினரின் செல்வப் புதல்வி சிந்துஜா தனது முதலாவது பிறந்த நாளை (3-12-88) இன்று குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அமமா, அப்பா, அப்பம்மா அம்மம்மா, பெரியப்பாமார், பாறின் பெரியப்பா, பெரியம்மாமார், மாமிமார், மாமாமார், சித்திமார், சித்தப்பா (பிரான்ஸ்), அண்ணன்மார், மச்சாள், மச்சான்மார் உற்றார், உறவினர்கள் பல்கலையும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

நண்பர்கள்.

(7772)

விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

கலை, வர்த்தக

89 மீட்டல் DAY CLASSES

ஆரம்பம்: 05.12.1988 (காலை 8.00)

90 பிரிவு - 3 ஆரம்பமாகிவிட்டன.
[சனி, ஞாயிறு காலை 8. 00]

முக்கிய குறிப்பு:

I எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம்.
II வாரத்தில் ஐந்து நாட்களும் சகல பாடங்களும் நடைபெறும்.
III மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்
IV மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(C/823)

RADIANT INSTITUTE

Punkankulam - Ariyalai

கடந்த G. C. E O/L - July 88 பரீட்சையில் எமது மாணவர்கள் மூவர் 8D பெற்றுள்ளமையும், 90% மாணவர்கள் சித்தியடைந்தமையும் யாவரும் அறிந்ததே.

கல்வியாண்டு - 1989

ஆண்டுகள் 7, 8, 9, 10, 11 வகுப்புகள்
ஆரம்பம்: 10-12 88 பி. ப. 3 மணி

- எமது A/L ஆசிரியர்கள்
  கலாகரன், S S. மனோகரன்,
  தனபாலசிங்கம், இராட்ணம்,
  செல்வி மீரா, ஜோதீஸ்வரன்.

(8157)

ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்- ஆனால் தவறுகப் பேசி விடுவோமே என்ற தயக்கம்-

இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு

BRIGHT TRAINING CENTRE

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்,
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க.

BRIGHT TRAINING CENTRE

P O. Box 162, Colombo.

(7983)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பகவதி மகேந்திரன்

மலர்வு: 1946 - 03 - 01 உதிர்வு: 15 - 12 - 1987

எங்கள் குடும்ப விளக்காய்த் திகழ்ந்து அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் இருந்த எமது அருமைத்திருமகளே! ஆண்டுகள் பல மறைந்தாலும் உங்கள் நினைவு எம் இதயத்தை விட்டு என்றும் அகலாது இருக்கும்.

கணவர், மகள் (ரஞ்சினி)
மருமக்கள், உறவுகள்.

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்
குறிகாட்டுவான் வீதி,
புங்குடுதீவு—3

(7985)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள் கோழிக்கடைகள், சந்தைக்கடைகள் ஆகியவற்றை அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01-01 1989 ஆம் திகதி முதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 14-12-1988 புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்,

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப் பிணையும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 50/-உம் செலுத்துவதன் பேரில் 12 12-1988 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் யாழ் மாநகராட்சி மன்றத்தால் வழங்கப்படும். உத்தியோக பூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் கேள்விப்படிவங்கள் யாழ் மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 14-12-1988 புதன்கிழமை 12 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்

இக் கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தின் நாளுவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: மேற்படி குத்தகை தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட சகல அறிவித்தல்களும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது சந்தைகளுக்கு ஏற்கனவே கேள்விப் பத்திரங்கள் பெற்றவர்களும். கேள்வி சமர்ப்பித்தவர்களும் புதிதாக கேள்விப் பத்திரம் பெற்று கேள்வி சமர்ப்பித்தல் வேண்டும். இவர்களுக்குக் கேள்விப் பிணை, படிவக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

அன்ரன் அல்பிரட்.
மாநகர அணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
30-11-1988.

அட்டவணை

குத்தகை விபரம் (சந்தைகள்)	குத்தகைக் காலம்	கேள்விப் பிணை	நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை
1. பெரியகடை மரக்கறி சந்தை	1 வருடம்	2000 / -	234, 000, 00
2. குருநகர் சந்தை	1 வருடம்	2000 / -	465 000, 00
3. செங்குந்தா சந்தை	1 வருடம்	2000 / -	270 000, 00
4. நாவாந்துறை சந்தை	1 வருடம்	2000 / -	70, 000, 00
5. பாசையூர் சந்தை	1 வருடம்	2000 / -	60 000, 00
6. கொட்டடிச் சந்தை	1 வருடம்	2000 / -	9 000, 00
7. அரியாலை சந்தை	1 வருடம்	2000 / -	9, 000, 00
8. கொழும்புத்துறைச் சந்தை	1 வருடம்	500 / -	2, 000, 00
சந்தைக் கடைகள் (நாவாந்துறை சந்தை)			
9. கடை இல. 11 மீன், இறைச்சி பாதுகாக்கும் குளிர்சாதனக் கடை	5 வருடம்	2500 / -	10, 000, 00
10. கடை இல. 12 மீன், இறைச்சி பாதுகாக்கும் குளிர்சாதனக் கடை	5 வருடம்	2500 / -	10 000, 00
11. கடை இல. 13 கருவாட்டுக் கடை	5 வருடம்	2000 / -	5, 000, 00
இறைச்சிக் கடைகள்			
நாவாந்துலற ஆட்டிறைச்சி கடை இல. 9	1 வருடம்	1500 / -	1, 500, 00
நாவாந்துறை கோழிக் கடை, கடை இல. 10	1 வருடம்	1500 / -	1, 500, 00

(C/829)

31ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி

திருமதி செல்லத்துரை மாரிமுத்து
(குழந்தை)

மலர்வு: 21-12-1921 உதிர்வு: 03-11-1988

எமை அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து ஆதரித்த அன்புத் தெய்வமே! குடும்பமே கோயிலாக, கோயிலே குடியாக எல்லோர்க்கும் வழிகாட்டியாக, எளியவராக, இனியவராக, அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் வாழ்ந்து, எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு, திடீரென எம்மை விட்டுப் பிரிந்த எம் குலவிளக்கே! எங்கு தான் சென்றீரோ? கண்ணீரில் மிதக்கின்றோம் அம்மா!

தங்களின் ஆத்மா அம்பிகையுடன் சங்கமமாகிச் சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். சகோதரர்கள்,
சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

(7993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருப்பள்ளியெழுச்சி,
திருவெம்பாவை"
20 மில்க்வைற் நில சோப்
மேலுறைகளை அனுப்பி
"திருப்பள்ளியெழுச்சி, திருவெம் பாவை"
என்ற நூலையும்
"சிவ சிவ" ஸ்ரிக்கர்
ஒன்றையும்
பரிசாகப்
பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் யாழ்ப்பாணம்.

சஞ்சிவி

03 - 12 - 1988 சனிக்கிழமை

மில்க்வைற்
சோப் மேலுறைகளை
சேகரித்து அனுப்பிப்
பெறுமதி வாய்ந்த
★பரிசுகளைப் பெற்றுப்★
பயனடையுங்கள்.
மில்க்வைற் யாழ்ப்பாணம்

ஐ. நா. கூட்டம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றேகன் நிர்வாகம் விஸா வழங்க மறுத்தது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே ஐ. நா. பொதுச் சபை இம்முடிறை எதிர்த்து உள்ளது. (உ-எ)

தேர்தல்..

(1ம்பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் பற்றுக் குறைநிலவுவதால் தமது சேவை அலுவலகத்தில் அத்தியாவசியமாக இருப்பதாகவும் —

இதுபோன்ற காரணங்களினால் தேர்தல் நடவடிக்கைகளில் அதிகாரிகளாக பங்குபற்ற முடியாது என்றும் பல அதிகாரிகள் தெரிவித்து வருவதாக அறிய வருகிறது. (உ-10)

வடபகுதிக்கான..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து வரும் பஸ் மூலம் இந்தப் பொதிகள் அனுப்பப்படும்

வவுனியாவுக்கு வந்து சேரும் தபால்பொதிகள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை அடுத்து திங்கட்கிழமை முதல் குடாநாட்டில் தபால் சேவைகள் வழமைபோல் நடைபெறும் என நம்பப்படுகிறது. (ஒ-10)

ஒலியை--

பெருமாள் இத்தகவலை வெளியிட்டார்.

தென்பகுதியிலுள்ள அரசியல் கட்சிகளில் இலங்கை மக்கள் கட்சி மட்டுமே இனக் கொள்கையில் நியாயமான போக்கை கடைப்பிடிக்கிறது.

நீண்டகாலமாக இக் கட்சி, தமிழ் மக்களுக்குச் சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என கோரி வந்துள்ளது என்றும் திரு. லதராஜப் பெருமாள் கூறினார். (ஒ)

காரைநகர்---

எஸ் பத்மநாதன் (வயது 45) எனத் தெரியவந்துள்ளது

இதே வேளை வலந்தலைச் சந்தியில் முகாமிட்டுள்ள இந்திய அமைதிப் படையினர் வியாழன் இரவு 8.45 மணி அளவில் திடீர் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்தனர் என்றும் "பரா" வெளிச்சக் குண்டுகளும் சரமாரியாக ஏவப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சொத்து மதிப்பீட்டு சட்டம் 19இற்கு முன் நிறைவேறும்

கொழும்பு, டிச. 3

"சொத்து மதிப்பீட்டு சட்டமூலம்" எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிகிறது.

இந்தச் சட்டத்தின் படி அரசியல்வாதிகளும், பொதுவாழ்வில் ஈடுபடுவோரும் தமது சொத்து விவரங்களையும், அவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் நீதி மன்றத்திலேயே வெளியிடவேண்டி வரும்

டிசம்பர் 19ஆம் திகதியின் பின்னர் நாடாளுமன்றம் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்பதால் அவசர அவசரமாக நிறைவேற்றப்படும் சட்டமூலங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ 3)

எம். ஜி. ஆர். சிலை

சென்னை நகரில் எம். ஜி. ஆருக்குச் சிலை நிறுவ பிரதமர் ராஜீவ் காந்தியின் அனுமதியை ஜானகி தலைமையிலான அ. தி. மு. க கோரியிருக்கிறது.

லோக சபையில் உள்ள ஜானகி அணி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான திரு எஸ். ஜெகத்ரட்சகன் பிரதமரை நேரிற்சந்தித்து இது சம்பந்தமாக மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

சிறிமா

பண்டாரநாயக்கா பேசுவார்"—இப்படி ஒலி பெருக்கியில் அறிவிக்கப்பட்டது

அந்த வேளை ஒருசிறுமி திடீரென அலறினாள்.

பாதுகாப்புப்படையினர் மேடையைச்சுற்றி வளைத்தனர். மேடையில் இருந்தோர் இறங்கி ஓடமுற்பட்டனர். பாதுகாப்புப்படையினரில் சிலரும் ஓடத்தொடங்கினர்.

அந்த நேரம் மீண்டும் ஒலிபெருக்கியில் ஓர் அறிவிப்பு.

"ஓடாதீர்கள் எலி ஒன்றைக்கண்டே சிறுமி அலறிவிட்டாள். அமைதியாக இருந்து அம்மாவின் பேச்சைக் கேளுங்கள்"—இந்த அறிவிப்பைத் தொடர்ந்து கூட்டம் தொடர்ந்தது

வாசகர் கவனத்துக்கு

இன்றைய சஞ்சீவி சஞ்சிகையின் 3, 4, 5, 6 ஆம் பக்கங்களில் 12 11 - 88 திகதி பொறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பக்கங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட திகதியில் சஞ்சீவியை வெளியிட முடியவில்லை. ஆதலால் அந்நான்கு பக்கங்களையும் இன்றைய சஞ்சிகையில் இணைத்துள்ளோம். என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

புலமைப்..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கள் நடத்தும் அனுமதிப்பரீட்சையை எடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகப்பட்டுள்ளனர்.

இது பற்றி கொழும்பில் கல்வி அமைச்சுப் பேச்சாளர் சொன்னதாவது,—

இது சம்பந்தமாகப் பெற்றோர்களின்முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பிராந்திய கல்வி அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் முடிவுகளை அனுப்ப அமைச்சினால் முடியவில்லை பரீட்சைத் திணைக்களம் முடிவுகளை அமைச்சுக்கு அனுப்பி விட்டது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தபால்சேவைசீர்குலைந்து உள்ளது. போக்குவரத்துச் சேவையும் சீர்குலைந்து உள்ளது.

இதனால் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர்கள் கொழும்புவந்துபரீட்சை முடிவுகளை பெற்றுச் செல்வது கஷ்டமான காரியம்.

இதனால் புலமைப்பரிசில் சோதனையில் சித்தியடைந்தவர்கள் கூட பாடசாலைகள் நடத்தும் அனுமதிப்பரீட்சையையே எடுக்கவேண்டியுள்ளது.

இச் சூழ்நிலையில் அடுத்த ஆண்டு பாடசாலைகளில்மாணவர் சேருவது இலகுவானதாக இருக்காது- இப்படி அவர் சொன்னார். (உ-எ)

மரண அறிவித்தல்கள்

செல்வன் வாமணன்
செல்வி ஜானகி

செல்வன் வாமணன் (7 வயது), செல்வி ஜானகி (6 வயது) ஆகியோர் 24- 11- 88 ஜெர்மனியில் அகால மரணமடைந்தார்கள். இவர்கள் தைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தேவராசா பூதகரியை பிறப்பிடமாகக் கொண்ட ராசேஸ்வரி ஆகியோரின் அன்புப் பிள்ளைகளும், மயூரனின் சகோதரர்களும், கோவிந்தர் திரு திருமதி சோமசுந்தரத்தின் பேரப்பிள்ளைகளும் ஆவார்கள். இவர்களின் ஈமக்கிரியைகள் 29- 11- 88 அன்று ஜெர்மனியில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கனகரத்தினம்
பணிக்கர்வளவு,
திருநெல்வேலி. (7782

பஸ் சேமன்
சின்னத்துரை குணரத்தினம் (குணம்)

(பிரபல வர்த்தகரும், Transport Agentம், கிருஸ்ணா சோ மில் உரிமையாளரும்)

சின்னத்துரை குணரத்தினம் (குணம்) 1- 12- 88 அன்று அகால மரணம் அடைந்து விட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3- 12- 88 சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
தாய், மனைவி, மக்கள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

"விஷ்ணு மஹால்"
பஸ். (C/866)

திருமதி. சின்னத்தம்பி நாகமுத்து

நெடுந்தீவு கிழக்கு 11 -ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலம் சென்ற சின்னத்தம்பியின் மனைவி நாகமுத்து 02 - 12 - 88 -இல் காலமாகிவிட்டார். இவர் சண்முகநாதன். காலம் சென்ற குகதாஸ், சபாநேசன் ஆகியோரின் தாயாரும், பத்மராணி, செல்வி ரனிமா (ராணி), புவனரஞ்சிதம் ஆகியோரின் மாமியாரும், கவிதா, கார்த்திகா, ராகுலன், தேவானந். ஜனப்பிரியன், ஜனேந்திரன், டர்மிளா. டர்சினி, டர்சன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03 - 12 - 88) நெடுந்தீவில் நடைபெறும்.

தகவல்:
சி. சண்முகநாதன்
நெடுந்தீவு 11.
(8167)

திருமதி ரேஸ் மாக்கிரட் அன்ற்று (நல்லம்மா)

திருமதி ரேஸ் மாக்கிரட் அன்ற்று (நல்லம்மா) இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற யோசவ் அன்ற்று (4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்) அவர்களின் பாரியாரும், திருமதி E. கருணாவதி அகஸ்ரின், திருமதி J பிரேமாவதி பெனடிற்ற் ஆகியோரின் பிரிய அன்னையும், A S. அகஸ்ரின் (ஆசிரியர், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி), சாமுவேல் பெனடிற்ற் (ஆசிரியர், பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பண்டத்தரிப்பில் 4-12-1988 ஞாயிறு காலை 9-00 மணிக்கு நடைபெறும்

ஜசிந்தா லொட்ஜ்.
பண்டத்தரிப்பு. (8166)

திருமதி. இரத்தினம் கண்ணம்மா

உரும்பராய்தெற்கு செல்வதுரை வீதியைச் சேர்ந்த இரத்தினம் கண்ணம்மா காலமாகிவிட்டார். அன்னார் செல்வநாயகம், தங்கராசா (பாப்பா), ஆகியோரின் தாயாரும், இரதினா, சந்திராதேவி, ஆகியோரின் மாமியாரும், வத்சலா, கலோஜனா, சியாமளன், சிமித்திரன், செல்வகுமார், வாசுகன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்குநாளை காலை10மணிக்குஅவரதுஇல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தங்கராசா.
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (7786)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான
கம்பியூட்டர் கல்வி
Computer Programming in Basic Language
ஆரம்பம்: 5. 12. 88
பயிற்சிக்காலம்: 1 1/2 மாதம்
கட்டணம்: 950/-
(இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)
COMPUTER PROGRAMMING IN dBASE III+
ஆரம்பம்: 6. 12. 88
பயிற்சிக்காலம்: 2 மாதம்
கட்டணம்: 1250/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I B. M. (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
UNIKCO COMPUTER CENTRE
No: 5, POWER HOUSE Rd, 2 nd LANE, JAFFNA.
(Near Sub - Post Office)
(C/834)

உஷா தையல் மெஷின் தொடர்
ஊஷா ஏற்றுமதி சின்னம்
டொமெஸ்டிக் டிலிபூக்ஸ் (நேரான தையல்) ட்ரெஸ் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும். ரூ.பா 1850/-
தையற்காரர் மொடல் ரூ. 4000/-
எக்ஸெலா 30 (கிசாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-
சிக் சாக் எக்ஸெலா 55
பிக்கோட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலங்கரிப்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன.
ரூபா. 7650/-
சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள ஊஷா விற்பனையாளரிடம் இன்றே விசாரியுங்கள்.
விநியோகத்தர்:
ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
68, அத்தியட்சகர் ரோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381
Mel Ads 9353

உஷா
பெருமிதமாக அறிமுகப் செய்யும் பலனிதமான சீலிங் மின்விசிறிகள்

ஊஷா ஸ்டான்டர்ட்
விலை: ரூபா 1500 முதல் 1575/-வரை
ஊஷா அலங்கார விசிறிகள்
பெரன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1750/-முதல் 1975/-வரை
36", 42", 48", 56" அளவுகளில்
9ரு அடி நீளமான தேக்கு, இணைப்பு வகைகள் இரும்பு, புளிமரி 2 வகைகள், 5 வேக ரெகுலேட்டர் எல்லாவற்றுடன் பூர்த்தி னாது.
தேவைக்கேற்ப கண்ணாடி கவசமுடன் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
கோன்வடிவ பிளாஸ்டிக்
மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குழாய் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.
தயாரிப்பு விநியோகம்
ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிடெட்
68, அத்தியட்சகர் ரோட், ரத்மலானை
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381
அண்மையிலுள்ள ஊஷா விற்பனையாளரிடம் இன்றே விசாரியுங்கள்!
தொலைவாக்கு கொள்வனவு செலவோருக்கு விலைக்கழிவு

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி சிங்கராசா கேங்கா [யமுனா]

(கொக்குவில் கிழக்கு)

மலர்வு:- 07- 04- 1969 உதிர்வு: 15- 12- 1987

திதி: 03 - 12- 88

அம்மா,

சிமை சென்ற அண்ணன்மார் தமிழ்நாடு வாருங்கள் பார்த்து விட்டு மாதகாலத்தில் திரும்பி வருவேன் என்று கூறிச்சென்றாயே. எங்கே சென்றாய்?

அழகி அவள், காவல்காக்க இயலாது. அவன்கள் (அண்ணன்மார்) கையில் கொடுத்து விட்டு வருகின்றேன் என அழைத்துச் சென்றாள் உனது அம்மா.

அண்ணன்மார் நால்வர், அருமைக்கு ஓர்தங்கை, அவளை இழக்கவா அவன்கள் சிமை சென்றார்கள். இல்லை, இல்லை, விதி தான். அவன்கள் உனக்குக் கடமை செய்ய வேண்டுமென்ற விதியே உன்னையும் ஜோர்மெனிக்கு அழைத்ததோ?

என்விடு கவனம், பொருட்கள் கவனம் என் "ரோசி" கவனமெனப் "போனம்" சொல்லிப் புறப்பட்டாயே, உன் உயிருக்குப் "போனம்" கிடைக்கவில்லையே அம்மா! உன் ஆத்மா சாந்தி அடைவதாக.

உன்பிரிவைத் தாங்கவியலாத
உன் கண்ணாடி மாமா, கண்ணாடி அக்கா,
ஆனந்தி அக்கா, யாமினி, தாரணி,
சுகந்தி அக்கா (சுவிஸ்),
சிறிதாஸ் அத்தான் (சுவிஸ்)
தம்பி (கனடா).

"ஆனந்தம்"
கோவில் வீதி,
கொக்குவில். (7769)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு காசிப்பிள்ளை தியாகராஜா

(இளைப்பாறிய மருத்துவ பரிபாலனவு அத்தியட்சகர்)

தோற்றம்: 6 6-1911 மறைவு: 3-12-1987

திதி: 21.11.1988

உயிர் போகும் போதும் — பிற
உயிர் வாழ நினைத்தாய்
உயர்வே உன் பிரிவால் — எம்
உளம் என்றும் வாடும்.

உங்கள் நினைவில் வாழும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் அச்சகத்தில் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Private) Limited, 292/2, Nallur Road, Jaffna on Saturday 3rd December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION

★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.

ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

MACK TRAVELS
Jaffna.

சுவரொலி சஞ்சிகை

03-12-1988 சனிக்கிழமை

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.

MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road,
Jaffna.

மலேசியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி

இந்தியப் பிரதமரைப் போலவே மலேசியப் பிரதமர் மகாதீர் முகம்மது 'தூய்மையான, நம்பகமான, திறமையான' ஆட்சியை ஏற்படுத்துவதாகச் சொல்லிக்கொண்டு பதவிக்கு வந்தார்.

பல்வேறு மக்கள் பிரிவினர்களின் கருத்தொற்றுமைப்படியும், சிறுபான்மை இனங்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டும், ஜனநாயகத்தையும் பேச்சு சுதந்திரத்தையும் மதித்தும் அவர் நடந்து கொள்வார் என்று மலேசியர்கள் நினைத்தனர்.

ஆனால் மகாதீரின் ஏழாண்டு கால ஆட்சியில் இந்தக் கனவும் நம்பிக்கையும் தவிடு பொடியாகிவிட்டன.

நாட்டில் அச்சமும் சந்தேகமும் தலைவிரித்தாடுகின்றன.

மலேசியா பெயரளவுக்கு ஜனநாயக நாடாக இருக்கிறதே தவிர, மற்றப்படி சர்வாதிகார முறையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

சீன, இந்திய வம்சாவளியினருக்கு இன்றுபோல் வேறு எச்சமயத்திலும் இவ்வளவு பந்தோபஸ்துக் குறைவு ஏற்பட்டதில்லை.

பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் 'ஒத்து வாழ முடியாத சீனரையும் இந்தியரையும் பெருவாரியாக' மலேசியாவில் குடியேற அனுமதித்தது மகாதீர் சடுமையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

ஆனால் மகாதீரின் ஏழாண்டு கால ஆட்சியில் இந்தக் கனவும் நம்பிக்கையும் தவிடு பொடியாகிவிட்டன.

நாட்டில் அச்சமும் சந்தேகமும் தலைவிரித்தாடுகின்றன.

மலேசியா பெயரளவுக்கு ஜனநாயக நாடாக இருக்கிறதே தவிர, மற்றப்படி சர்வாதிகார முறையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

சீன, இந்திய வம்சாவளியினருக்கு இன்றுபோல் வேறு எச்சமயத்திலும் இவ்வளவு பந்தோபஸ்துக் குறைவு ஏற்பட்டதில்லை.

பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் 'ஒத்து வாழ முடியாத சீனரையும் இந்தியரையும் பெருவாரியாக' மலேசியாவில் குடியேற அனுமதித்தது மகாதீர் சடுமையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

கேரளத்திலிருந்து வந்து குடியேறிய ஒரு குடும்பத்தின் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவரான அவரே இவ்வாறு பேசியிருப்பது அருவருக்கத்தக்கதாகும்.

'ஒராங் அஸ்லி' என்ற பழங்குடியினர் மலேசியாவின் ஆதி மக்களாவர்; அவர்கள் இன்னமும் காடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள் எல்லோருமே வெளியேயிருந்து வந்து குடியேறியவர்கள்தாம்.

தென் சீனாவிலிருந்து சீனர்களும், தென்கிழக்கு இந்தியாவிலிருந்து இந்தியர்களும்; தாய்லாந்து, போர்னியோ, செலிபீஸ், ஜாவா, சுமத்ரா பிரதேசங்களிலிருந்து மலாய் இனத்தினரும் வந்தார்கள்.

இந்தப் பின்னணி காரணமாகவும், இம்மூன்று இனங்களிடையே இருந்துவரும் நாசூக்கான உறவு நிலை காரணமாகவும், மகாதீர் இவ்வாறு பேசியிருப்பது விவேகமானதல்ல.

கூட்டணியில் பிளவு

மலேசியா 1957 இல் விடுதலை பெற்றது முதல், ஐக்கிய மலாய் தேசிய ஸ்தாபனம் (WMNO), மலேசிய சீனர் சங்கம், மலேசிய இந்தியர் காங்கிரஸ் என்று மூன்று கட்சிகளின் தேசியக் கூட்டணி ஆட்சியை நடத்தி வருகிறது. இவற்றுள் மலாய் ஸ்தாபனமே பெரியது.

இப்போதுதான் முதன் முதலாக, 160 லட்சம் மக்களில் சுமார் 54 சதவீதத்தினராக இருக்கும் மலாய் முஸ்லிம்கள் ம. தே. ஸ்தாபனத்திலிருந்து விலகிச் செல்லத் தொடங்கியுள்ளனர். அண்மையில், முன்னாள் தொழில் - வர்த்தக மந்திரி தெங்கு ரஜாலேக், முன்னாள் வெளியுறவு மந்திரி ரைஸ் யாத்தின் உட்பட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டணியிலிருந்து விலகி, சுயேச்சையாளர்களாக அவையில் இடம் பெற்றுள்ளனர்; இன்னும் சிலர் இவ்வாறே விலகுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆறு மாதங்களுக்குமுன் ஜோஹோர் பாரு தொகுதியில் நடந்த உபதேர்தலில், மகாதீரின் கூட்டணி வேட்பாளரை தாத்துக் ஷாரீர் அப்துல் சமத் படுதோல்வி அடையச் செய்தார்.

மகாதீரின் ஆட்சியில் மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர் என்பதை இத்தேர்தல் முடிவு காட்டுவதாக ஐ. ம. தே. ஸ்தாபனத்தின் அதிருப்தியாளர்கள் கூறுகின்றனர்;

ஆனால் ஆளும் கோஷ்டியோ இது 'வெறும் துணைத் தேர்தலே' என்று அலட்சியமாகப் பேசுகின்றனர்.

ஷாரீரை 'ஜனநாயக செயல் கட்சி' (DAP) ஆதரித்த போதிலும், மலாய் இன வாக்காளர்கள் அவரை வெறுக்கவில்லை.

மகாதீரின் யதேச்சாதிகாரத்துக்கு எதிர்ப்பு வளர்த்துவருவதை ஷாரீரின் தேர்தல் வெற்றி எடுத்துக் காட்டுகிறது என்பதை மறுக்க முடியாது. ஜனநாயகச் செயல் கட்சியின் தலைவர் லிம் - கித் - லியாங்கும் அதன் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும், 'தேசிய பந்தோபஸ்துச் சட்ட'த்தின் கீழ் சிறை வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அக் கட்சிக்கு மக்களிடையே ஆதரவு வலுத்து வருகிறது - நபர்களை விசாரணையின்றிக் காவலில்

> **மலேசிய அரசியல் பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது. எழுதியவர்: கமலேந்திரன்வர்.**

வைக்க அதிகாரம் அளிக்கும் சட்டம் இது.

நீதிமன்றங்கள் மீது தாக்குதல்

ஆனால், மக்களின் மரியாதையைப் பெற்றுள்ள நீதி பரிபாலனப் பிரிவை ஒடுக்குவதற்கு மகாதீர் அரசு மும்முரமாக நடவடிக்கை எடுத்து வருவதுதான், மற்ற எல்லாக் காரணங்களையும் விட அதிகமாக மக்களை உலுக்கியிருக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம், ஐக்கிய மலாய் தேசிய ஸ்தாபனத்தை ஒரு 'சட்டவிரோத ஸ்தாபனம் என்றும், சிறிதளவு பெரும்பான்மையுடன் அதன் தலைவராக மகாதீர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அப்போது முதல் நீதி பரிபாலனப் பிரிவை அவர் வெறுத்துவருகிறார்.

நீதிமன்றத் தீர்ப்பை முறியடிப்பதற்காக 'புதிய' ஐக்கிய மலேய தேசிய ஸ்தாபனம் என்ற கட்சியை அவர் அமைத்தார்.

இந்தப் புதிய கட்சிக்கு எதிராக 11 அதிருப்தியாளர்கள் தொடர்ந்த வழக்கை விசாரிக்க 9 நீதிபதிகளின் குழுவை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி முகம்மது ஸாலே அப்பாஸ் நியமித்தார். உடனே அவர் மீது மகாதீர் போரைத் தொடங்கினார்.

பிரதமரையும் மற்ற மந்திரிகளையும் குறை கூறி நாட்டின் அதிபரான மன்னருக்கு நீதிபதி ஸாலே ஒரு கடிதம் எழுதியிருந்ததைக் காரணமாகக் காட்டி அவரை ஆகஸ்ட் 6 ஆம் திகதி பதவியிலிருந்து நீக்க மகாதீர் ஏற்பாடு செய்தார். இந்தப் பிரச்சினையில் அரசின் நடவடிக்கையைத் தடுக்க முயன்ற உச்ச நீதிமன்றத்தின் வேறு ஐந்து நீதிபதிகள் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பகிரங்க நிர்ப்பந்தமாக நீதிபதி ஸாலே விலக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சி அதிருப்தியாளர்களின் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டதில் ஆச்சரியமில்லை.

நீதி பரிபாலனப் பிரிவின் சுதந்திரம் இவ்வாறு நேரடியாகத் தாக்கப்பட்டதால் மக்களுக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பத்திரிகைகள் ஒடுக்கப்பட்டிருப்பதாலும் ஏழு எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறை வைக்கப்பட்டிருப்பதாலும் ஆளும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் கைதூக்கிகளின் பெரும்பான்மை பலம் இருப்பதாலும் அரசின் யதேச்சாதிகாரத்துக்கு எதிராகத் தங்களுக்கு அரண் எதுவும் இல்லை என்பதை மக்கள் கண்டுகொண்டனர். ஜோஹோர் உப தேர்தலில் ஷாரீரின் அமோக வெற்றிக்கு இதுவே முக்கிய காரணம்.

பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு

மலேசியப் பத்திரிகைகளுக்கு எப்போதுமே கட்டுப்பாடுகள் உண்டு. எனினும் ஓராண்டுக்கு முன்புவரை 'ஸ்டார்' (ஆங்கிலம்) 'ஸின்-சியூ-ஜித்-போ' (சீன மொழி) 'வதன்' (மலாய் மொழி) என்ற பத்திரிகைகள் ஓரளவு சுயேச்சையுடன் இயங்கி அரசின் எதேச்சாதிகாரத்தை மட்டுப்படுத்தி வந்தன.

மலேசியாவின் முதலாவது பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் 'ஸ்டார்' பத்திரிகையில் அரசின் கொள்கைகளை விமர்சித்துக் கட்டுரைகள் எழுதிவந்தார். மக்கள் அவற்றைப் பெரிதும் பாராட்டினர்.

உலக உலா

மகாதீர் கட்சியின் 'நியூ ஸ்டெரியிட்ஸ் டைம்ஸ்' பத்திரிகையின் விற்பனை வேகமாகச் சரிந்தது. இதனால் பீதியடைந்த பிரதமர் மேற்சொன்ன மூன்று பத்திரிகைகளின் பிரசுர உரிமத்தைத் தற்காலிகமாகப் பறித்துவிட்டார்.

இரண்டு மாதங்களுக்குப் பின் மறுபடி உரிமம் வழங்கப்பட்டபோதிலும் அரசுக்குப் பணியாவிடில் கடையைக் கட்ட வேண்டியிருக்கும் என்பது சுயேச்சைப் பத்திரிகைகளுக்கு உணர்த்தப்பட்டது. அதனால் இப்போது யதேச்சாதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் காவல் நாய்களாக மலேசியப் பத்திரிகைகள் பணிபுரியமுடியவில்லை.

மகாதீரைத் தட்டிக் கேட்காவிட்டால் மலேசியாவில் சிவில் உரிமைகள் நிலைத்திருக்க முடியாது என்று தோன்றுகிறது.

ஆணவத்தைக் கைவிட்டால் அவர் சிறந்த தலைவராக விளங்கமுடியும். ★

ஜீவனி

உங்கள் குழந்தையின் உயிர் காக்கும்.

உங்கள் குழந்தையின் உடலில் இருக்க வேண்டிய நீரும் உப்புகளும் வயிற்றோட்டத்தினால் குறைகின்றன. இது உடல் உலர்ச்சியடைவதற்கு வழிசெய்யக்கூடும். சரியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் உங்கள் குழந்தை மரணமடையவும் இடமுண்டு. இலங்கையில் தினமும் 6 குழந்தைகள் வரை உடல் உலர்ச்சியினால் மரணமடைகின்றன.

எனவே, உடல் உலர்ச்சி அடைவதைத் தடுக்கும் வழிகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.

வயிற்றோட்டம் ஏற்பட்டதும் உங்கள் குழந்தைக்கு நீர், பொரி அரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, உப்புக் கலந்த எலுமிச்சம் பழச் சாறு, சாயம் குறைந்த தேநீர் போன்ற நீராகாரங்களைப் போதிய அளவு குடிக்கக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானால் தொடர்ந்து பால் ஊட்டல் முக்கியம். புட்டிப் பால் கொடுப்பதானால் வழக்கத்தைவிட இருமடங்கு நீரில் பால் மாவைக் கரைத்து ஊட்டவும்.

இவ்வளவு செய்தும் வயிற்றோட்டம் தொடர்ந்து நீடித்தால் உடல் உலர்ச்சியடைய இடமுண்டு. உடல் உலர்ச்சியின் முதல் அறிகுறி கடும் தாகமாகும்.

இந்த நிலை ஏற்படின், உடனடியாக ஜீவனியைத் தயாரித்து வழங்க வேண்டும் உடல் இழந்துவிட்ட உப்புக்களையும் நீரையும் ஜீவனி மீள அளிக்கும்.

ஜீவனி பானம் தயாரிக்கும் முறை

ஜீவனி பக்கெட்டுக்குள் காணப்படும் இரண்டு பைகளிலுமுள்ள தூள் முழுவதையும் ஒரு லீட்டர் குடிநீரில் கரைக்கவும், (ஒரு லீட்டர் நீர் என்பது 400 மில்லி லீட்டர் அளவுள்ள 2½ சோடாப் போத்தல்களில் அல்லது ஜீவனிப் பக்கெட்டுடன் வழங்கப்படும் பிளாஸ்டிக் கோப்பை போன்ற 5 கோப்பைகளில் அடங்கக்கூடிய அளவு நீராகும்.)

ஜீவனி பானம் கலந்து 24 மணிநேரம் கடந்துவிட்டால், எஞ்சியுள்ள பானத்தை வீசிவிட்டு புதிதாகக் கலந்தெடுக்கவும்.

ஒரு பக்கெட்டின் விலை: ரூ. 5/- மட்டுமே.

ஜீவனியை உங்கள் கூட்டுறவுக் கடையில் அல்லது அண்மையிலுள்ள மருந்துக் கடையில் வாங்கலாம்

JWT UF 261

உயிர் காக்கும் ஜீவனி

சொர்சிலம்பம் போட்டி இல: 90

பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு;

முதலாவது பரிசு:
நா. நாகநந்தினி,
முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

இரண்டாவது பரிசு:
சி. சிவச்செல்வன்,
மே/பா வே. சிவநேசன்,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

மூன்றாவது பரிசு:
திருமதி சந்திரா சண்முகசுந்தரம்,
மருதடி, வித்தனை,லேன்,
வல்வெட்டித்துறை.

பொது அறிவுப்போட்டி இல: 17

இப்போட்டியின் முடிவு திகதி 14. 12. 1988 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சொர்சிலம்பம் போட்டி இல: 91

இப்போட்டியின் முடிவு திகதி 07.12.1988 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக் குட்டி

அண்ணி கூறுகிறார்

உங்களை மாதிரித்தான் எல்லாரும், 'என்னை ஒரு மாதிரிப் பார்க்கிறதோட, 'இந்த மரத்தடியிலே, இவன் என்ன முண்டு குடுக்கிறானோ?' என்டும் நினைக்கினம்.

இந்தப் பழுப்பேறின நாலு முழக் காவி வேட்டியோட இந்த மரத்தடியில வந்து குந்துற என்னைப் பாத்து வேற எப்பிடி நினைக்கிறது?

என் இந்த நிலைமைக்கு யார் காரணம்? முடிவை நீங்களே சொல்லுங்கோ.

சின்னவயதிலே இருந்தே வீட்டில எனக்கும் தம்பிக்கும் இடையில வேற்றுமை வளர்ந்தது.

முத்தவன் எண்ட முறையில நானும் கடைசிப்பிள்ளை என்ற முறையில அவனும் வேறு வேறு விதமாகத்தான் கணிக்கப்பட்டோம்.

அவனோட நான் ஒத்துப் போக நினைச்சாலும், அவன் என்ன மதிக்கிறேல்ல கடைசிப் பிள்ளை எண்டதால செல்லம் கூடி குட்டிச்சுவராய்ப் போனான்.

நான் பேருக்கும் குடும்பத்தக் காப்பாற்றவுந் தான் தலைமகன். மற்றப்படி எல்லாம் அவன்தான். அவன்ர நடத்தைகளைச் சொல்லித் திருத்தப்போனா அது தவறாப் போகும். பெத்தவளே பிரியின காட்டேக்கே... நான் என்ன செய்யிறது?

அப்பாவினுடையதும் என்னுடையதும் உழைப்பால இரண்டு தங்கச்சிமாரையும் கரைசேர்த்தாச்சு.

சேமிப்பெண்டால் வீட்டில மருந்துக்கும் கிடையாது. அம்மாவுக்கு அலர்ஜிக். தங்கச்சிமார் முயற்சித்தாலும் என் அருமைத் தம்பி முந்தி விடுவான். சேர்க்க ஒண்டு இருந்தால் அழிக்க ஒண்டு இருக்குந்தானே.

அவன் செய்த செலவு...— கடவுளே!

ஏதோ ராசா வீட்டுப் பிள்ளை என்ற நினைப்பு அவனுக்கு ...

இரண்டு கல்யாணமும் முடிஞ்ச பிறகுதான் தெரிஞ்சுது நான் எவ்வளவு கடன் பட்டிருக்கிறனெண்டு.

நாளாக ஆக எனக்கும் அவனுக்கும் இடையில வாக்கு வாதம் முத்தி வரும் அம்மா புகுந்து அவனுக்காகக் கதைக்க நான் அடங்கவேண்டி வரும்.

கடைசியில் என் தர்மபத்தினியின் யோசனைப்படி தனிக்குடித்தனம் போனோம்.

சொஞ்சக்காலம் வீட்டாருக்கும் எனக்கும் தொடர்பில்லை பட்டகடனை அடைச்சுக் கொண்டு நிம்மதியா வாழந் தோம்பிறகுபழையபடிவேதாளம் முருக்கமரத்தில ஏறின கதைதான்.

முதலில் அப்பா பென்சன் எடுத்திட்டார், செலவுக்கு வேணுமென்று வந்த அம்மா, போகப் போக தம்பி அதுக்கு வேணுமாம் இதுக்கு வேணுமாம் எண்டு வரத்தொடங்கி விட்டால் என்ன செய்யிறது? பிறந்த குற்றத்துக்காக மிச்சம் பிடிச்சுக் குடுத்து வந்தன்.

மாமி மருமகள் சண்டையைப்பற்றி கேள்விப்பட்டிருப்பீங்கள். எனக்கு வந்து சேர்ந்தாள் ஒருத்தி...

நான் சிலவேளை நினைக்கிறனான், என் வாழ்க்கையிலும் இந்த சண்டை வராதோ என்று. நான் இல்லையெண்டாலும், அம்மாவின் வார்த்தைகளை நம்பிக் கடன் வாங்கி என்றாலும் குடுக்கிற மாமி பக்தை என் மனுசி. எல்லாம் என் தலையெழுத்து.

நீங்களே சொல்லுங்கோ என் உழைப்பு எனக்கும் மனுசிக்கும் நாலு பிள்ளைகளுக்கும என்னென்று போதும்? ஏத்தாயவிறுக்குத் துரோகம் செய்யேல்ல. இப்படிக் குசேலர் வாழ்க்கை வாழுறன் நான், அந்த மன்மதராயனுக்கு எப்படி சொகுசாவே உருவாக்க முடியும்? மகிழ்ச்சியாக இல்லாட்டாலும் மனநிறவோட எங்கட வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

அது கூடப் படைச்சவனுக்குப் பிடிக்கல்லப்போல. என் அருமைத் தம்பிக்கு வெளி நாடு போகக்காசு வேணுமாம்! எங்கள் நிலையை எவ்வளவு விளக்கியும் அம்மா கேட்கவில்லை. அவாவுக்குத் தெரியும் எனக்குச் சினேகிதர் கனக்க என்று. வாய் கூசாமல் சொல்லிப்போட்டா அவர்களிடம் கடன் கேக்கட்டாம். நிலைமையை எடுத்துக்கூறி, எவ்வளவோ வாதாடி கடைசியில குந்தி தேவியிடம் இந்தக் கர்ணன் தோத்துவிட்டான்.

அவன் இருந்தா உபத்திரவம். இப்படியாவது போய்த் தொலையட்டும் என்று 'லோன்' எடுத்துக் குடுத்தேன். என் மனுசியின் நகையும் அடைவு. லோன் காசு என் மாதாந்த சம்பளத்தில கழிபடும். அதைத் தாறதா அம்மா சொல்லத் தலையாட்டினேன். வராது என்று தெரியுந்தானே!

வாற சம்பளமே குறைவு. இப்ப... ம்...

வீட்டு நிலைமை வரவர மோசமானதாலும், மகனொருத்தன் இருக்கிறானா செத்துப் போனானா என்று பார்க்க வராததாலும் அங்கே போனேன்.

வீடு முந்தினதிலும் வடிவா எடுப்பாக இருந்தது. தம்பியால இல்லை. மச்சான்மாரால.

அப்பா தான் வந்து வரவேற்றார். நான் காசு வேணுமென்று வெட்டொன்டு துண்டிரண்டா சொன்னன். அதுவரை எட்டியும் பார்க்காத அம்மா,

'உன்னட்ட காசு வாங்கினது நான்தான். ஆனா எனக்கில்லை; தம்பிக்கு. நீ அவனிட்ட கேக்கிறதை விட்டுட்டு இஞ்ச வந்து நிண்டு கத்துறாய்.....? முகத்திலை அடிச்சமாதிரிப் பதில் வந்தது.

கத்துறேனா? நானா? குடுத்ததைத்தானே கேட்கிறன்.

மறுபேச்சில்லாமல் வாயிருந்தும் ஊமையா உடன் பிறந்த உதவாக்கரையைத் திட்டித் தீர்த்தபடி வீடு திரும்பினேன்.

அந்தக் கழுதை வெளியிலையும் போகேல்லை. மேலையும் போகேல்லை. கொழும்பில் நின்று சுத்துறான். ஏஜென்சி ஏமாத்தினானோ? இல்லை இவன் தான் பேய்க்காட்டுகிறானோ?

ஆரம்பத்தில காய்ந்த எங்கட இரண்டு வயிறோட இப்ப மற்ற நாலு வயிறும் சேர்ந்து கொண்டன. இப்ப என் சொத்து எனக்குக் கழுத்த நீட்டின வளும், எங்கட மகிழ்ச்சியான உறவின் நாலு சின்னங்களும், இந்த வீடு வளவுந்தான்.

இந்த லட்சணத்தில்..... இப்ப... ..

நினைக்க எனக்கு அழுகிறதோ சிரிக்கிறதோ என்று தெரியேல்லை.

மன்மதராயன் நடத்தின சுயம்வரங்களில் அம்மாவுக்குப் பிடிச்ச பெண் - சம்பிரதாயப்படி - அவனைச் சேர்ந்து வாழ வைக்க வேணுமாம். அவனுக்கு இப்ப இதுதான் இல்லாத குறை இனி என்பாலும் பொறுப்பை உணருவானா? நாய் வாலை நிமித்த ஏலுமோ?

அம்மா இந்த வளவை ஈடு வைக்க சொல்லும்போது என் மனுசி 'உள்ளதையும் ஈடுவச்சிட்டு எப்பிடி மீளுறது? ஆபத்து அந்தரத்துக்கு என்ன செய்யிறது? இதை மட்டும் கேக்காதைங்கோ மாமி, எங்களால ஏலாது' என்று மென்மையாக, ஆனால் உறுதியாகச் சொன்னாள்.

எனக்கு ஒரே சந்தோஷம். என் தர்மபத்தினியே இதைச் சொன்னது? ஆச்சரியம்! அம்மாகூட எதிர்பாக்கேல்லை. வாயில வந்தபடி கத்திவிட்டுப் போனா.

கொஞ்சம் யோசியுங்கோ. எப்பிடி ஈடுவைக்கிறது? பிறகு ஏலத்தில் போக ஆறு பேரும் நடுரோட்டிலை நிக்கிறதே?

நான் என்ன வீட்ட விக்கவா சொல்லுறன்... வளவை ஈடு வைக்கத்தானே சொல்லுறன். சொந்தத் தம்பிக்குச் செய்தா என்ன குறைஞ்சே போவான். பிறகு தம்பி மீட்டுக் கொடுப்பான்தானே.

என் சொல்லுக்கு எல்லாம் தலையாட்டின அவனை, எப்பிடி எதிர்த்துப் பேசப் பழகிட்டாள் பாவி...

அதுசரி, நான் அவனைப் படிப்பிக்க எவ்வளவு செலவு செய்தேன். இப்ப எல்லாத்தையும் மறந்து போட்டு மனுசிக்குத் தாளம் போட்டுக்கொண்டு திரிகிறான்.

எல்லா வீட்டிலுந்தானே கடைசிப் பிள்ளைக்குச் செல்லங்குடுக்கினம். உலகில் இல்லாத அதிசயத்தைக் கண்டவன் மாதிரி பெரிசா... அலட்டுகிறான்.

அவனிட்டக் காசில்லாட்டா எல்லாம் முடிஞ்சமாதிரியே. இப்ப ஊரே வியக்கிறபடி முடிச்சுப் போட்டன் தானே?

சின்னவனும் மனுசியும் இப்ப எவ்வளவு சந்தோசமா வாழுகினம் தெரியுமே?

★ ★ ★

தம்பி கூறுகிறார்:

சந்தோஷம்.....ம்...

வீட்டில எவ்வளவு செல்லமாக இருந்தேன்: நான் வைச்சதுதான் சட்டம். ஒரு சின்ன வேலை செய்திருப்பனே? சாப்பிட்ட ப்ளேட் கூட கழுவுறதில்லை. எனக்கு எதுபிடிக்குமே அதுதான் செய்வேன். மற்றவையும் செய்யவேணும் இல்லாட்டா எனக்கும் அவைக்கும் தொடர்பில்லை.

எப்ப கல்யாண வாழ்க்கையில் காலெடுத்து வைச்சேனோ அப்பவே என் சுதந்திரம் பறிக்கப்படுகிறதாக உணர ஆரம்பிச்சன். ஆரம்பத்தில என் இஷ்டம்தான்.

பிறகு...

கடைக்குப் போறதில் தொடங்கினது. உடுப்புகள்- என்னுடையதுதான்- தோய்க்கிறதோட நில்லாமல் வீட்டு வேலையில் சரிபாதியும் என் தலையில்...கட்டினவள் வேலைக்குப் போயிடுவாள்... நான் வீட்டில தனிய இருந்து முழிக்கவேணுமாம்.

ஒரு நிமிசங்கூட ஒரு இடத்தில இருந்து பழக்கமில்லாத எனக்கு இது எப்படிச் சரிப்பட்டு வரும்? அவளின் சொல்லைக் கேட்டு நான் நடக்கிறதே? மரியாதை என்னவாகும்? ரெட்டுவிடும் என்று வெளிக்கிட்டுடுவன்... ம்... இருந்தால்எல்லோ கெடுகிறதுக்கு.

அவளோட கதைக்காமல் விட்டுப்பார்த்தேன்... எவ்வளவுகாலத்துக்கு முடியும்?

வீட்டில் சட்டதிட்டம்- அவள் போடுறதுதான் - கூடி விட்டுது. குடிக்கக்கூடாது. கண்டபடி சுத்தக்கூடாது, நேரத்தோட வீட்டிற்கு வரவேணும், சரிபாதி வேலை செய்யவேணும் எப்படியாவது முயற்சிசெய்து வேலை தேடவேணும்.

அப்பப்பா ..

அவள் தான் வேலை செய்யிற இடத்தில வாங்கித்தந்தாள். என்னால முடியுமே? எனக்கு விருப்பமுமில்லை. 'உனக்கு குறைஞ்ச வேலை செய்யமாட்டன்' என்று சொல்லிவிட்டன்.

என்னத்த விட்டாலும் குடியையும், சுற்றலையும் விட்டு நான் வரேல்ல, அது முடியுமே?

புகுந்த வீட்டில சண்டை பிடித்துக்கொண்டு கரைச்சல் தாங்காமல் பிறந்த வீட்ட போற பொம்பிளையளைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீங்கள். நான் ஆம்பிளைதான். எண்டாலும்...

வேலைசெய்ய முடியாமலும், பிறந்தவீட்டிலை அனுபவிச்ச சொகுசுகளை புகுந்த வீட்டிலை எதிர்பார்த்து கிடைக்காமலும், மனுசியைப் பயப்படுத்தவும் அடிக்கடி அம்மாட்ட போயிடுவன்

என் துணைவி ஒருநாளும், எனக்கு வேலைவெட்டி இல்லை எண்டதை குத்திக் காட்டிறதில்லை. ஆனா, பழக்க வழக்கங்களை மாத்தச்சொல்லி நச்சரிப்பாள்.

நான் பிறந்த வீட்டிலை செய்தமாதிரி அதிகாரத்தை நிலைநாட்டப் பார்த்தேன். முடியேல்லை. என்ன இருந்தாலும் அவளுக்கு பொறுமையும், நிதானமும் அதிகந்தான்.

என் சுதந்திரத்திலை பிறர் தலையிடுகிறதே நான் விரும்பிறேல்லை. ஒருநாள் ஆத்திரத்திலை மனுசியப்போட்டு அடிச்சுப்போட்டன்.

இனியும் சேர்ந்து வாழ ஏலாது எண்ட நிலைக்கு வந்த பிறகு அம்மாவிடமே போயிட்டேன். அவளின்வீடு எப்பிடி மட்டும் குடிச்சுக் கும்மாளமிட்டேன்.

போட்டாத்தான் தத்துவம் பிறக்குமென்று சொல்லுவினம். எனக்கு ஒரு மண்ணும் வராது. எல்லாம் முடிஞ்ச பிறகுதான்.

'ஓம்... எல்லாமே முடிஞ்ச பிறகுதான் புத்தியே வந்திருக்கு. என்ன பிரயோசனம்? வெறும் சுடலைஞானந்தான்.

இப்பநான் என்ன செய்யிறது?

அம்மாவிடம் போனால்.....

அவளை ஏசி ஏசி எங்களைச் சேர்த்து வைக்கப் பார்த்தாரமல் எனக்கு வேறு கல்யாணம் பேசுவா... குடிகாரனுக்கேன் குடித்தனத்தை?

என் வாழ்க்கை சீரழியிறதுக்கு நான்தான் காரணம். தட்டிக்கேக்க ஆளில்லாட்ட தம்பி தண்டப் பிரசண்டம் என்று என்றைக்கோ அண்ணா சொன்னது ஞாபகம் வருகுது. சின்ன வயசில் அம்மா கொடுத்த இடம் இப்பிடி முடிஞ்சிருக்கு. ஆனா இன்னுந்தான் அம்மா தான்விட்ட பிழையை உணர்கிறாயில்லை.

நான் திருந்திட்டேன் என்று சொல்லி மனுசியிட்ட போனா அது என் ஆண்மைக்கு அழகில்லை. அதோட அவள் இவ்வளவு நாளும் என்னோட பட்டது போதும். குரங்கின்ர கையில பூமாலையைக் கொடுத்து கோபுரத்திலை ஏத்தி விட்டமாதிரி என்னட்ட அவளைத் தந்து இவ்வளவு வசதியும் வந்து...

ம்...அதை அநுபவிச்சு மனைவியோட மகிழ்ச்சியா இருக்க என்னால் முடியேல்லே! எனக்குத் தெரியேல்லே வேலை ஏதாவது இருந்தாலும் பரவாயில்லை...

வேலை பட்டதாரியளே வேலை இல்லாமல் இருக்கும் போது படிப்பே ஏறுத எனக்கு.....

கடவுளே! கூலி வேலை செய்யவும் பழக்கமில்லை... இதுகளெல்லாம் சின்ன வயசிலே பழகி பக்குவப்பட்டிருக்க வேணும். என் இந்த நிலைக்கு நான் மட்டும்தான் காரணமா?

இல்லை... அம்மாவுந்தான் பெரிய பிழைவிட்டுட்டா. அப்பவே திருத்தி நடத்தியிருந்தால் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதுக்கு?

அண்ணட்ட போனால்...

நிச்சயமாக உதவுவார். அவர் மறுத்தாலும் அண்ணி மறுக்கமாட்டா. ஆனா... சின்ன வயதில் இருந்தே அண்ணா என்னால் எவ்வளவு கஷ்டப்பட்டவர்? பணக்கஷ்டத்திலும் மனக்கஷ்டந் தானே கொடியது! அந்தப் பாவம் இப்ப என்னை இப்பிடி அலைக்கழிக்குது. எனக்காக தான் பட்ட கடனை அழிக்க அண்ணியின்ரை நகைகளை வித்ததோட அந்தக் குழந்தைகளு மெல்லவோ வாடினதுகள்.

இப்ப அவை மனநிறைவோட வாழுகினம். என்னாலே சரிஞ்ச வாழ்க்கைக் கோபுரத்தை, குருவி கூடு கட்டுகிற மாதிரி கொஞ்சங் கொஞ்சமாக மறுபடி கட்டி எழுப்பினம்.

இந்த நேரத்திலை சிவபூசையில் கரடி நுழைஞ்ச மாதிரி நான் ஏன் வீணாப் போவான். அண்ணா, நிச்சயமாக இனி நான் உனக்கு ஒரு கஷ்டமும் தரமாட்டனண்ணா. தரமாட்டேன்.

அம்மாவால் எனக்கு பேசப்பட்ட விலைக்கு சம்பந்தி வீட்டார் தந்ததிலை இப்ப இந்த கார்தான் மிச்சம். இதை ஆதாரமாக வைச்சுத்தான் இனி என் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டவழிதேட வேணும்.

என்னைப் போல வீட்டுக்கும் பிரயோசனமில்லாமல்: நாட்டுக்கும் பிரயோசனமில்லாமல்ரோட்டுக்குப்பாரத்தை குடுக்கிற பொறுப்பை உணராத போக்கிலிகளுக்கும்; பிள்ளையளை வளர்க்கிறதிலை வேற்றுமை காட்டுகிற பெற்றோருக்கும் என் வாழ்க்கை ஒரு நல்ல பாடமாக அமையட்டும். ★

- மாவை ரதி -

முருகனை வணங்கினால் பழவினைகள் தீரும்

தாரகன், சிங்கன் சூரன் ஆகியோர் அவுணர்கள். அவர்கள் தேவர்களை இடர்ப்படுத்தி அளவில்லாத துன்பங்களைச்செய்தார்கள்; முருகப் பெருமான் அவர்களை அழித்து தேவர்களுக்குப் பெருவாழ்வு அருளினார். இதனை உணர்த்துவதே சூரன்வதையாகும்.

அகங்காரம் அழிந்த வரலாறே சூரன் வதையாகும். அகங்காரமே ஆத்மீகத்தின் நெடும்பகை. நான் என்னும் மூலைப்பு ஒழிந்த இடமே ஞான உதயம். மனிதநெஞ்சத்தில் இடையறாது உள்ளிப்பெருகி நிற்கும் அல்லற்பெருநோயாம் அகந்தைக்கு ஆண்டவன் அருள் ஒன்றே மருந்து. இதை உணர்த்துவதே கந்தபுராணம்.

சிவமூர்த்தி பதினொரு உருத்திரர்களை, பதினொரு ஆயுதங்களாக்கி, சிவசக்தியை வேற்படையாக்கி, திருமுருகனிடம் தந்தார். அத்துடன் இலக்கத்தொன்பது வீரர்களுடனும் இரண்டாயிரம் பூதகணங்களோடும் முருகப்பெருமானை போருக்கு அனுப்பிவைத்தார்.

முருகப்பெருமானோடு முட்டிமோதி நின்றமையால் அவரை முன்னெதிர்ப்பு காணும் பேறு சூரனுக்குக் கிடைத்தது. பலகாலம் தவமிருந்துபார்க்கவேண்டிய பரம்பொருளை பகைத்துநின்றமையால் பாலவடிவில் கண்டு பரவசமுற்றான் சூரன். ஆனால் தான் ஒருவீரன், சூரன் என்ற மானஉணர்ச்சி அவனை முருகப்பெருமானுக்கு அடிபணிந்து வாழத் தடுக்கின்றது! அவன் முருகப்பெருமானோடு முடிவில்லாத போர்செய்தான்.

இறுதியில் முருகப் பெருமான் தமது திருப்பெருவடிவத்தை சூரனுக்குக் காட்டியருளினார். திருப்பெருவடிவத்தைக் கண்ட சூரன் தப்புவதற்காக பல மாயவடிவங்களைக் கொண்டான். இறுதியாக அவன்கொண்ட வடிவமே மாமரவடிவமாகும். முருகப்பெருமான் அதனை தமது வேற்படையினால் இருகூறுக்கினார். அந்த இருகூறுகளும் சேவலும் மயிலுமாக மீண்டும் முருகனிடம் போரிடவந்தன. மயில் வாகனமாகக்கொண்டருளினார். சேவல் முருகனுடைய கொடியின் சின்னமானது. மாமரத்தை அறுத்தமையினால் முருகனை 'கொக்கு அறுத்தகோ' எனலாம். சேவல் கூவுவதும் இதனையே உணர்த்துவதாகும்.

தீமையை ஒழிப்பதன்றித் தீயரை மாய்ப்பதல்ல. திருமுருகன் செயல். தீயரைத் திருத்தித், திருந்தி வாழச் செய்வதே உயர்ந்த நோக்கமாகும். அதனையே சூரனுக்குப் பெருவாழ்வு அளித்ததன்மூலம் அறிவுறுத்தியுள்ளார் முருகப்பெருமான். முருகன் திருவடிகளைத் தியானித்தால் எமது பழவினைகள் எல்லாம் நீங்கிப்போகும்,

- சி. பரமேஸ்வரி -

பாலைவனத்தில் ஒரு பசுமை

31.10.88 இல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் செல்வி ஆரணி சற்குணத்தின் நாட்டிய அரங்கேற்றத்தைக் காண ரசிகர்கள் நிரம்பிவழிந்தனர்.

அதில் நானும் கலந்துகொள்ள 2 மணிக்கே சென்று அமர்ந்துவிட்டேன்.

முதல் நிகழ்ச்சியான அலாரிப்பில் இருந்து தில்லான வரை விறுவிறுப்பாக இருந்தது.

கலாஷேத்திர முத்திரைகள் நீயுரைப்பாய், நேற்றந்தி ஆகிய பதங்களில் மிளிர்ந்தன.

சம்பிரதாய உருப்படிகளில் ராகமாலிகா சப்தம் பிரமாதம்.

செல்வி ஆரணி தனது திறமையை இம்மூன்றிலும் வெகுவாகப் பதித்துக் காட்டியமை பாராட்டிற்குரியது.

அவரின் குரு, திருமதி சாந்தினி சிவநேசன் தனக்கே உரிய அடக்கமான முறையில் நட்டுவாங்கம் கம்பீரமாகச் செய்தது அழகாக இருந்தது

இவ்வளவு இக்கட்டான நிலைமையிலும் தன்னம்பிக்கையுடன் மேடையில் தாளம் பிசகாமல் கணீர் என்ற தாள ஒலிக்கு ஏற்ப நர்த்தகியை ஆட்டிவைத்த செயல் எல்லோராலும் செய்யக்கூடியதன்று.

நல்ல குரு செல்வி ஆரணிக்கும் கிடைத்தது அவரின் பாக்கியம்'

பக்கவாத்தியங்கள் இன்றைய நிலைமையிலும் தம் திறமையை மேடையில் காட்டினார்கள்.

திருமதி ஞானகுமாரியின் குரல் தேனாமிர்தம்.

'நீ இந்த மாயம்' வர்ணம் பல சங்கதிகளுடன் பாடிய திருமதி பராசக்தியின் குரல் கானாமிர்தம்.

மிருதங்க வித்துவான் திருமகேந்திரன் அவையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவேயில்லை நர்த்தகியின் அடவுகளும், ஆசிரியையின் தாளமுமே அவருக்கு முக்கியமாக இருந்தன என்பது அவர் மேடையில் அமர்ந்திருந்த விதமே நன்கு பிரதிபலித்தன.

திரு குமாரசுவாமியின் வயலின் இசை இவற்றுக்கெல்லாம் சளைத்ததல்ல.

சுருக்கமாகச் சொல்லப்போனால் திரு. மௌனகுரு கூறியதுபோல் நீண்ட பாலைவனத்தில் இப்போதுதான் சிறு பசுமை தெரிகிறது.

இதுபோல் இனிமேலும் தெரியாதா?

இனி அவையைச் சற்று பார்ப்போமா? அங்கு பாரதியின் வரிகள் நினைவுக்கு வந்தன.

'கலக மானிடப் பூச்சிகள்' மேடையில் நடராஜருக்கு பூசை நடைபெறுகிறது. ஒரு பூச்சிக்காவது எழுந்து நிற்க வேண்டும் என்ற நினைவே வரவில்லை.

அதைத்தான் விடுங்கள்.

இடைவேளைகளில் எல்லாம் இசைமாரி பொழிந்ததே அதைக்கூடவா அவர்கள் செவிகள் கேட்க மறுத்தன?

சரமாரியான குண்டுச்சத்தங்களும், ஷெல்ச்சத்தங்களும் கேட்டுப் பழகிப்போன செவிகளுக்கு இவைகள் சற்றுப் பழக்கப்படவேண்டியவைதான்.

மு. வரதராஜன் கூறியதுபோல் 'பாடகனே. பேச்சாளனே அவையின் நாடித்துடிப்பில் தங்கியிருக்கிறான்.

— கலையரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி ரேகன் சினிமாவில் ரேகனாக நடிக்கப்போகிறார்!

ரேகன்

அமெரிக்க ஜனாதிபதி ரேகன் மீண்டும் சினிமாவில் நடிக்கப்போகிறார்.

அதுவும் ரேகனாகவே நடிக்கப் போகிறார். அவரது மனைவி நான்சியும் இப்படத்தில் அவரது மனைவியாக நடிக்கிறார்.

இப்படத்திற்கு 'தம்ப் அப்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

ரேனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல சில ஆண்டுகளுக்கு முன்பு முயற்சி நடந்தது தெரிந்ததே. ஹான் ஹிச்சி என்பவன் ரேகனை நோக்கி ஆறுமுறை சுட்டான். இதில் முதலாவது குண்டு ரேகனின பத்திரிகைத் துறை செயலாளராக இருந்த ஜிம் பிராடி மீது பாய்ந்தது.

தலையில் குண்டு பாய்ந்து ஜிம் பிராடி சாய்ந்துவிட்டதைக் கண்டு அவர் இறந்தே விட்டார் என்று கூட டெலிவிஷன் செய்திகள் கூறின. ஆனால் ஜிம் பிராடி இறக்கவில்லை.

மருத்துவமனைக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டார். அவரது மண்டையில் அறுவை சிகிச்சை அவரது மூளை பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டார்கள் படாதபாடுபட்டனர்.

அவர் பிழைப்பதற்கு '10க்கு 1' என்ற அளவுக்குத் தான் வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டது.

ஆனால் மனஉறுதி படைத்த ஜிம் பிராடி பிழைத்துவிட்டது மட்டுமின்றி தமது வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியும் பெற்றார்.

அந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவம் சாதாரணமாக இப்போதும் அவரால் தமது இடதுகையை பயன்படுத்த முடியாது. வலதுபுறம் ஊனமாகி உணர்ச்சியே இல்லாமல் போய்விட்டது.

இருந்தாலும் அவர் மனம் தளரவில்லை. சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி நடமாடுகிறார். வாரத்துக்கு ஒருமுறை தமது அலுவலகத்துக்குச் சென்று தபால்களைப் பார்க்கிறார்.

ரேகனின் பத்திரிகைத் துறை செயலாளராக அமெரிக்க அரசு அவரைத் தொடர்ந்து பதவியில் வைத்திருக்கிறது.

வீரமும் துணிச்சலும் மிக்க ஜிம் பிராடியின் வாழ்க்கையைச் சினிமா படமாகத் தயாரிக்க முன்வந்திருக்கிறார் டேவிட் பட்நாம் என்னும் பிரிட்டிஷ் பட அதிபர்.

ஒன்றரைக் கோடி பிரிட்டிஷ் பவுண்கள் செலவில் இந்தப் படம் தயாராக உள்ளது.

ரோபர்ட் போல்ட் என்னும் ஹாலிவுட்டின் பிரபல கதாசிரியர் இப்படத்திற்கான திரைக்கதையை எழுத இருக்கிறார். ஜான் ஷாக்மென் என்னும் பிரபல நடிகர் ஜிம் பிராடியாக நடிப்பார் என்று தெரிகிறது.

இப்படத்தில் ரேகன் வேடத்தில் ரேனையே நடிக்க வைக்கவேண்டுமென்று விருப்பப்பட்டார் பட அதிபர் பட்நாம்.

இதற்காக அவரும் கதாசிரியர் ரோபர்ட் போல்ட்டும் கடந்த பெப்ரவரி மாதத்தில் வெள்ளை மாளிகைக்குச் சென்று அதிபர் ரேனைச் சந்தித்துப் பேசினார்கள்.

ரேனுடன் சுமார் 40நிமிட நேரம் பேசினார்கள். இந்த சந்திப்பிற்கு ஜிம் பிராடியே ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் பிறகு ரேனே படஅதிபர் பட்நாமுக்கு டெலிபோன் செய்து தமது ஒப்புதலைத் தெரிவித்தார்.

இந்தப் படம் 1990 ஆம் ஆண்டுவாக்கில் தயாராக உள்ளது. அப்போது தாம் தமது அரசியல் பொறுப்புக்களிலிருந்து விலகி ப்ரீயாக இருக்கக்கூடும் அப்போது நடித்துத் தருவதாக ரேகன் என்னிடம் கூறினார்.

இப்படி பட அதிபர் பட்நாம் தெரிவித்தார்.

ரேகன் இதற்கு முன்பு ஹாலிவுட் நடிகராக இருந்தவர் என்பது தெரிந்ததே.

53 படங்களில் அவர் நடித்திருக்கிறார்.

அவர் நடித்த கடைசிப் படம் 'தி கில்லர்ஸ்' இது 1964 ஆம் ஆண்டில் வெளிவந்தது. ★

குறட்டைக்கு புதிய மருந்து

குறட்டை ஒரு பிரச்சினை. குறட்டை விடுபவர்களுக்கு அல்ல – மற்றவர்களுக்குத் தான்.

குறட்டை விடுபவர்கள் அவ்வப்போது வெவ்வேறு ஸ்தாயியில், வெவ்வேறு ஸ்ருதியில் குறட்டை விட்டபடி ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருப்பர்.

அதே அறையில் உறங்கும் மற்றவர்களுக்கு இதனால் உறக்கம் கெடுவதுண்டு.

சிலர் விடுகிற குறட்டை 'இரண்டு வீட்டுக்கு' கேட்கும். கணவன் பலத்த குறட்டை விடுகிறவராக இருந்தால், மனைவி ஆரம்பத்தில் வேறு வழியின்றிச் சகித்துக் கொள்ள வேண்டியவராகி, நாளாவட்டத்தில் அதற்குப் பழகிப்போய் விடுகிறார்.

குறட்டையை நிறுத்த நடைமுறையில் எவ்வளவோ உபாயங்கள் கூறப்பட்டதுண்டு. ஆனால் இவை நிரந்தரத் தீர்வை அளிப்பவையல்ல.

இப்போது யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த மருந்தியல் நிபுணர் ஒருவர் குறட்டைப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண தாம் ஒரு மருந்தைத் தயாரித்துள்ளதாகக் கூறுகிறார். அவர் பெயர் பிரான்ஜோ காஜ்ஃபெஸ் (Franjo Kajfez). யூகோஸ்லாவியாவில் மிலிஜ்னு என்னுமிடத்தில் நதிக்கரையிலுள்ள தமது கோட்டையில் அவர் இந்த மருந்தைத் தயாரித்துள்ளார். இந்த மருந்துக்கு அவர் வைத்துள்ள பெயர் 'போகோஸ்லீப்'

பன்னிரெண்டு வகையான இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தமது மருந்தைப் பயன்படுத்தினால் குறட்டை நிற்கும் என்றும், அதே நேரத்தில், இந்த மருந்தினால் பாதகமான விளைவுகள் எதுவும் ஏற்படாது என்றும் அவர் கூறுகிறார்.

குறட்டை விடுகின்ற சுமார் 1000 பேருக்கு அவர் இந்த மருந்தைக் கொடுத்துப் பரிசோதித்தார்.

அவர்கள் சுமார் 70 நாள்களுக்கு இந்த மருந்தைப் பயன்படுத்திப்பார்த்தனர்.

580 பேருக்குக் குறட்டைப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்ந்தது.

ஒரு சிலரிடம் இந்த மருந்து பலிக்காமல், முன்னைப் போலவே ஆனந்தமாகக் குறட்டை விடுகின்றனர்.

குறட்டைக்காரர்களின் மூக்கிலும், தொண்டையிலும் உள்ள சளிப்படலம் குறிப்பாக அவர்கள் மல்லாந்து உறங்கும்போது வறண்டு போவதாகவும், இந்த வரட்சி கடுமையாகும் போது அவர்கள் வாய்வழியாகச் சுவாசிக்க ஆரம்பிக்க ஜோரா குறட்டை விட ஆரம்பிப்பதாகவும், காஜ்ஃபெஸ் கருதுகிறார். தமது மருந்து இவ்விதம் வறட்சி ஏற்படுவதைத் தடுக்கும் என்கிறார் அவர்.

அவர் விரைவில் யூகோஸ்லாவியாவில் இந்த மருந்தை விற்பனைக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளார்.

காஜ்ஃபெஸ் சுவிட்சர்லாந்தில் உள்ள 50 மருந்து ஆராய்ச்சியாளர்களின் தலைவராகச் செயல்படுபவர். எனினும், அவர் மிலிஜ்னுவில் உள்ள தமது சொந்த ஆராய்ச்சிக்கூடத்தில் இந்த மருந்தை உருவாக்கினார்.

ஒரு பிரபல அமெரிக்க நிறுவனம் உட்பட பல வெளிநாட்டு மருந்துக் கம்பெனிகள் அவரிடமிருந்து லைசென்ஸ் பெற்று இந்த மருந்தைத் தயாரிக்க ஆர்வம் காட்டியுள்ளன. ★

அக்டோபர் புரட்சியின் போது லெனின் நடத்திய சாகஸம்

ரஷ்ய நாட்டில் அக்டோபர் புரட்சி நடந்த சமயம்...

புரட்சி வீரர் லெனினை ஜார் மன்னன் அரசு தேடிக் கொண்டிருந்தது.

பீற்ரோ கிராடில் லெனின் வந்து இறங்கியதாக அரசுக்குத் தகவல் கிடைத்தது.

அவர் அங்கிருந்து தப்ப முடியாதபடி ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு பொலீஸ்காரர்கள் காவல் நின்றார்கள்.

வழக்கமாக வரும் மனிதர்களைவிட்டு, புதிதாக வருபவர்களைக் கைது செய்யும்படி பொலீஸ்காரர்களுக்கு அரசு உத்தரவிட்டிருந்தது.

லெனின் ஒளித்திருந்த வீட்டிற்கு முன்பாகவும் இரண்டு பொலீஸ்காரர்கள் நின்றிருந்தனர்.

லெனின் தம் கோட்டை அணிந்துகொண்டு கையில் ஒரு குடையுடன் வெளியே வந்தார்.

லெனின் உருவப்படம் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

எனினும் லெனின் ஒன்றும் அறியாதவர்போல் உல்லாசமாகத் தம் குடையைச் சுழற்றிக்கொண்டும் ஏதோ பாடிக்கொண்டும் பொலீஸ்காரர்களைக் கடந்துசென்றார்.

முதலாவது பொலீஸ்காரர்: 'இந்த ஆளைப்பார்த்தால் லெனின் மாதிரிஇல்லை?'

இரண்டாவது பொலீஸ்காரர்:

'அடமுட்டாளே! லெனின் இப்படியா இருப்பார்? கடுகடு என்று இருக்குமேஅவர் முகம், இப்படி உல்லாசமாகப் பாடிக்கொண்டு திரிய அவருக்கு என்ன பைத்தியமா?'

இப்படி இரண்டு பொலீஸ்காரர்களும் பேசிக்கொண்டிருக்கும்போதே லெனின் நிதானமாக பக்கத்துச் சந்தில் நுழைந்துமறைந்தார். ★

உல்லாசப் பயணிகள்

ஐரோப்பாவுக்குச் செல்லும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

14 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

காரணம், 'ஏன்' னின் பெறுமதி அதிகரிக்கப்பட்டதே ஆகும். (-ச)

பலூன் சாதனை

பலூனில் உலகைச்சுற்றிச் சாதனை நிகழ்த்த இங்கிலாந்தைச் சேர்ந்த ஜூலியன் நோட் முன்வந்திருக்கிறார்.

இவர் 'ஹீலியம் சாஸ்' நிரப்பப்பட்ட இராட்சத பலூனில் எந்த இடத்திலும் இறங்காமல் உலகைச் சுற்ற திட்டமிட்டுள்ளார்.

இம்மாதம் மத்தியில் அவர் தன்னுடைய பயணத்தை கலிபோர்னியாவில் உள்ள அமெரிக்கக்கடற்படைத்தளத்தில் இருந்து தொடங்குகிறார்.

12 ஆயிரத்து 200 மீற்றர் உயரத்தில், 18 நாட்களில் 40 ஆயிரத்து 235 கிலோ மீற்றர் தூரம் பறந்து உலகைச் சுற்றிவிடலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். ★

நெப்போலியனின் பல் துலக்கும் 'பிரஷ்'

நெப்போலியன் பயன்படுத்திய பல்துலக்கும் பிரஷ்' இலங்கைப்பணத்தில் 6 லட்சம் ரூபாய்க்கு கடந்த வாரம் ஏலம்போனது.

அதை வாங்கியவரின் பெயர் வெளியிடப்படவில்லை.

தங்கமுலாம் பூசப்பட்ட அந்த பிரஷ் மேற்குஜேர்மனியில் உள்ள மியூனிச் நாட்டில் ஏலத்துக்கு வந்தது. ★

வானவெளி ஆராய்ச்சியில் நவ சீனா

வானவெளி ஆராய்ச்சியில் சீனாவும் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு எடுத்துச் சென்று பூமியைச் சுற்றிப் பறக்கவிடக்கூடிய ரொக்கட்டுக்களை தயாரிப்பதில் சீன விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

தற்சமயம் லோஸ்மார்ச் 2, லோஸ் மார்ச் 3 ஆகிய ரொக்கட்டுக்களைத் தயாரிப்பதில் சீனா ஈடுபட்டுள்ளது.

கட்டணம் கொடுத்தால் மற்றநாடுகளின் செயற்கைக் கோள்களையும் இந்த ரொக்கெட்டுக்கள் விண்வெளிக்கு எடுத்துச்செல்லும்.

அதோடு, வானவெளியில் மிதக்கும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது ★

அமெரிக்காவிலும் இராமாயணம்

இராமாயணத்தை அமெரிக்காவில் நாடகமாக நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ரோனாவைச் சேர்ந்த எழுத்தாளர் ஆப்ரே மேனன் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கிறார்.

இந்திய தூரதர்ஷனில் ராமாயணத் தொடர் ஒளிபரப்பாகி பிரபலமடைந்தது தெரிந்ததே. ★

அமெரிக்காவில் வெங்காயம்

அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் இருதய நோய், ஜலதோஷம், ஆஸ்த்மா, புற்று நோய் ஆகியவற்றுக்குப் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

அவற்றை அமெரிக்க மக்களுக்கு அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

அம்மருந்துகள் அவர்கள் தயாரித்தவை அல்ல.

நம்மூர் காய்கறி வகைகளே.

இருதயநோய்:

தினமும் ஒரு வெங்காயம் சாப்பிடுங்கள். இரத்தத்தில் உள்ள கொழுப்புச்சத்துக் குறையும். தீங்கற்றது.

ஜலதோஷம், ஆஸ்த்மா

மிளகுரசம் மாமருந்து ஒரு நாளைக்கு மூன்று தடவை குடித்தால் சளி பறந்து விடும். இதற்கு மிஞ்சிய மருந்து கிடையாது. ★

இமாலயத்தில் 'பாக்டீரியா'

பெரும் தொல்லையாக உள்ள பூச்சிகளைக் கொல்லக் கூடிய புதிய பக்டீரியாக்களை அமெரிக்க விவசாய இலாகாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மண்ணில் கண்டுபிடித்துள்ளனர்.

உலகெங்கிலும் இருந்து மண் மாதிரிகள் (Ramples) சேகரிக்கப்பட்டு ஆராயப்பட்டன. அப்போது 70 க்கும் மேற்பட்ட புதிய மண் பக்டீரியாக்கள் (Bacillus Thuringineiss) கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் மூன்று ரகப் பக்டீரியாக்கள் குறிப்பிட்ட பூச்சிகளை, இப்போதுள்ள இரசாயன பூச்சி ஒழிப்பு மருந்துகளைப் போல அதே அளவுக்குக் கொன்றுவிடுவதாகப்பரிசோதனைகள் காட்டியுள்ளன.

இந்த பக்டீரியாக்கள் பல விடங்களில் மண்ணில் சாதாரணமாக அடங்கியுள்ளன என்று ஆய்வுகள் காட்டியுள்ளதாக அமெரிக்க விவசாய இலாகா பூச்சியல் நிபுணர் ரஸ்ஸல் ட்ராவர்ஸ் (Russel Travers) கூறினார். இமயமலையில் சுமார் 6 கிலோ மீட்டர் உயரத்தில் — கிட்டத்தட்ட பூச்சிகளே இல்லாத அளவிலான உயரத்தில் விஞ்ஞானிகள் பாக்டீரியாக்களைக் கண்டுபிடித்து உள்ளனர்.

இவை கம்பளிப்பூச்சி, கொசு, வண்டு ஆகியவற்றைக் கொல்லக்கூடியவை.

புதிய பக்டீரியாக்கள் ஏற்கனவே அறியப்பட்டு வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படுகிற பக்டீரியாக்களை விட 10 மடங்கு அதிகத் திறமையுடன் பூச்சிகளைக் கொல்கின்றன. பூச்சிகளிடம் இவற்றைப் பயன்படுத்திச் சோதனைகள் நடத்திய பிறகு இவை பொது உபயோகத்துக்கு வரும் என்றும் அந்த நிபுணர் குறிப்பிட்டார். ★

பஞ்சாமிர்தம் பலமடங்கு அமிர்தம்

ஆங்கிலமொழியில் ஆஸ்திரேலிய பெண்களுக்கு வந்த கோபம்

ஆஸ்திரேலியப் பெண்களுக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது.

ஆங்கில மொழியில் பெண் இனம் ஒதுக்கப்படுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆஸ்திரேலியப் பத்திரிகைகள், விளம்பர நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆண் ஆதிக்கம் நிலைநாட்டப்படுவதை எதிர்த்துப் பெண்கள் போர்க்கொடி ஏற்றியுள்ளார்கள்.

அவர்களுக்கு உதவ ஆஸ்திரேலியாவின் தொழிற்கட்சி அரசும் முன்வந்துள்ளது.

அரசு அலுவலகங்களில் பாவிக்கப்பட வேண்டிய வார்த்தைகள் பெண்களைப் புறக்கணிப்பவையாக அமையக்கூடாது என்று அரசு கூறியுள்ளது.

இதனை வலியுறுத்தி 400 பக்க 'ஸ்டைல் மனுயல்'(Style Manual) ஒன்றை அரசு ஊழியர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது.

பெண்ணைப் புறக்கணிக்கும் ஆங்கில சொற்றொடர்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் தடை விதிக்கப்பட்ட சொற்றொடர்களும் அவற்றிற்குப் பதிலாகப் பாவிக்கப்பட வேண்டிய புதிய சொற்றொடர்களும் வருமாறு;

தடைசெய்யப்பட்டவை	—	பாவிக்கப்படவேண்டியவை
Man hole	—	Access hole அல்லது Utility hole
Mankind	—	Humanity
Man-hours	—	Labour hours
No man's land	—	Neutral territory அல்லது wilderness
Man - eater	—	Human eater
Man - in the street	—	Average Citizen
One - man Show	—	One - person show
One-man, One vote	—	One person, one vote

புதிய சொற்றொடர்களைப் பாவிக்கத் தவறும் விளம்பர நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சட்டம் கொண்டு வரப்படும் என்று அரசு வேறு எச்சரிக்கை விடுத்துள்ளது. ★

'சமாதான அரண்மனை'

உலகிலேயே சமாதானம் பற்றிய பேச்சுவார்த்தை நடத்தவும் மாநாடு நடத்தவும் ஒரு அரண்மனையைக் கட்டினார்கள்.

அதற்கு சமாதான அரண்மனை என்று பெயரும் வைத்தார்கள்.

அது எங்கே இருக்கிறது என்று தெரியுமா?

நாம் அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோமே ஐ நாவின் சர்வதேச நீதிமன்றம் உள்ள ஹேக் என்ற நகரைப் பற்றி.

அந்த நகரில் தான் இந்த சமாதான அரண்மனை உள்ளது.

தற்போது இதே அரண்மனையில்தான் சர்வதேச நீதிமன்றமும் இயங்குகிறது.

நெதர்லாந்து நாட்டில் உள்ளது ஹேக் நகரம். இது பதின்மூன்றும் நூற்றாண்டில் ஒரு சிறுகிராமமாக இருந்தது. எனவே வேட்டைக்குச் செல்பவர்கள் கொஞ்சநேரம் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக காட்டிற்கு அருகிலுள்ள இந்தக் கிராமத்துக்கு வந்தார்கள்.

சிறுகிராமம். கூடவே அமைதியான சூழ்நிலையும் இந்த இடத்தில் இருந்ததால் இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் எல்லாநாட்டுப் பிரதிநிதிகளும் அடிக்கடி கூடி மாநாடு நடத்தினார்கள்.

இதற்காக ஒரு பெரிய மண்டபமும் தேவைப்பட்டது; பணமும் தேவைப்பட்டது.

இந்தநேரத்தில் அமெரிக்காவைச்சேர்ந்த பெரும் பணக்காரர் அண்ட்ரூ கார்னகி என்பவர் தன்னுடைய செலவில் ஒருபெரிய அரண்மனையையே இங்கு கட்டினார்.

சமாதானப் பேச்சுக்கள் நடக்கும் அரண்மனை என்பதால் சமாதான அரண்மனை என்று பெயர் வைக்கப்பட்டது. ★

சிறுவர் நடத்தும் 'வங்கி'

சிறுவயது முதலே சேமிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தி வரும் வேளையில், அமெரிக்கா, புளோரிடா மாநிலத்தில் உள்ள தெற்கு மியாமி நகரில் சிறுவர்களுக்காக சிறுவர்களாலே நடத்தப்படும் வங்கி ஒன்று சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டு செய்தி நம்மை வியக்க வைக்கிறது.

இந்த வங்கியில் பணிபுரியும் காசாளர், கணக்காளர், முகாமையாளர் அனைவருமே சிறுவர்கள் தான்.

'டுவஜ் லெப்' எனப்படும் இந்த வங்கியின் தலைவராக ரிச்சர்ட் பெல் என்ற சிறுவன் பொறுப்பு ஏற்றுள்ளார். ★

கண்ணதாசனின் கவிமொழிகள்!

★ மரங்களை விட மனிதன் உயர்ந்தவனா? இல்லை! மரங்கள் இறந்தபிறகும் அவற்றை நீண்ட நாட்கள் வீட்டில் வைத்து இருக்க முடியுமே?

★ காதல் உன்னதமானது என்று முதன் முதலில் சொன்னவனே, அதில் தோல்வி கண்டவனாகத்தான் இருந்திருப்பான்.

கண்ணதாசன்

★ 'தந்தி' அடிக்கின்ற ஊருக்குப் போய்ச்சேரும். 'வதந்தி' சொன்னவனிடமே வந்து சேரும்.

★ மலரைப்பார், கொடியைப் பார், வேர் எப்படி இருக்கும் என்று பார்க்க முயற்சிக்காதே! அதைப் பார்க்க முயன்றால் மலரையும் கொடியையும் நீ பார்க்க முடியாது!

★ சிந்தனை செய். நிச்சயமாகப் பலனிருக்கும் என்று தெரிந்தால் பிறரை நிந்தனை செய்.

★ வீழ்த்தியவன் ஜாக்கிரதையாக இல்லை என்றால் வீழ்ந்தவனுக்குத் தான் வெற்றி.

★ வாழவேண்டும் என்று நினைக்கின்றவனுக்கு என்ன வேண்டும்? எந்த விமர்சனத்தையும் தூக்கி எறியும் உள்ளம் வேண்டும்.

★ அளவுகடந்த துன்பங்களை அனுபவித்தவன், தன் வாழ்க்கை வரலாற்றை 'உள்ளது உள்ளபடி' எழுதினால் உலகமே பயங்கரமாகக் காட்சியளிக்கும்.

★ கல்லிலே நார் உரிக்க முடியுமா? என்று சிலர் கேட்கிறார்கள் ஏன் முடியாது. 'அரசியல்' என்பது என்னவாம்.

★ ஒருவனைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் அவனைப் புகழ்ந்து பேசி விடக்கூடாது. பல வருட காலம் நம்பிக்கையாக இருந்த ஒருவரைத் திடீரென்று சந்தேகிக்கக் கூடாது.

– கவிஞர் கண்ணதாசன்

Digitized by Muthulingam Foundation. muthulingam.org | vaivahanam.org

கம்பியூட்டரின் தோற்றமும் வளர்ச்சியும்

- உலகேஸ்வரன் முரளீதரன் -

ஆரம்ப காலத்தில் எமது முன்னோர்கள் எண்களைக் கணிப்பதற்குத் தமது இரண்டு கைகளிலுமுள்ள விரல்களையே பயன்படுத்தினர்.

கணிப்பதற்குரிய எண்களினது எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்கக் கைவிரல்களுடன் சேர்த்து சிறு கூழாங்கற்களையும். தடிக்குச்சிகளையும் உபயோகிக்கலாயினர்.

விரல்களை எண்ணும் வழக்கம் இப்போதும் சிறுபிள்ளைகளிடம் எண்களைக் கூட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

கணித்தலை இலகுவாக்கிய முதலாவது குறிப்பிடத்தக்க கருவி யாதெனில் அதுவே கணக்கிடும் மணிச்சட்டம் (Abacus) ஆகும். இக்கருவி எண்கணிதச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் கருவியாக இருந்ததுடன் இது இப்பொழுதும் குழந்தைகளுக்கு ஆரம்பகாலக் கணிதப் பயிற்சி அளிக்கும்] கருவியாக ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கருவியானது இப்பொழுதும் கூட சீனா, ஜப்பான், ரஷ்யாவிலுள்ள வர்த்தகர்களால் கணக்குகளை சரிபார்ப்பதற்கு கணணிகளைவிட அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1600 இல் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கணிதவியலறிஞரான 'ஜோன் நப்பியர்' (John Napier) என்பவர் மடக்கைகளை உருவாக்க இம்மடக்கை வாய்ப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட எலும்புகளாலும், மரத்தாலான உருளைகளினுலுமான கணித்தற்பொறி ஒன்றினை உருவாக்கினர்.

இப்பொறியானது பெரிய இலக்கங்களின் பெருக்கல் பிரித்தல்களை இலகுவாக செய்வதற்கு உதவியது. இது 'நப்பியரின் எலும்புப்' பொறி (Napier's Bone) எனப்பட்டது.

முதலாவது கண்டுபிடிப்பு

முதலாவது குறிப்பிடத்தக்க கணித்தலுக்குரிய பொறியைக் கண்டுபிடித்தவர் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த 'பிளெய்சி பாஸ்கல்' (Blaise Pascal) ஆவார். இவர் புத்தகங்களின் துணையின்றிக் கணிக்கக்கூடிய ஓர் பொறியினை உருவாக்கினர்.

இவர் இதனை உருவாக்க ஏதுவாக இருந்த நிகழ்ச்சி யாதெனில் இவரது தந்தை வரி அறவிடும் இலாகாவில் கடமையாற்றிக்கொண்டிருந்ததால் அவர் நீண்ட நிரல்களில் எழுதப்பட்டிருந்த இலக்கங்களைக் கூட்டுவதில் தலையை உடைத்துக்கொண்டிருப்பதைக் கண்டு மனம் சங்கடப்பட்டார்.

தந்தையினது வேலைப்பழுவைக் குறைக்க எண்ணித் தனது 19 வது வயதில் பற்களைக்கொண்ட சில்லுகளான ஓர் கணித்தற்பொறியை 'பாஸ்கல்' உருவாக்கினர்.

கணித்தற் பொறிகளின் வளர்ச்சியில் இக்கண்டுபிடிப்பானது ஓர் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகக் கருதப்படுகிறது.

இதன் பின்னர் 'வில்ஹெம் லெய்ப்னிட்ஸ்' (Wilhelm Leibnitz) பாஸ்கலின் பொறியினைவிட சற்று திருத்தங்கூடிய அமைப்பொன்றினை உருவாக்கினர். இது நேரடியாகக் கணிதக் கணிப்புகளைச் செய்ய உதவிற்று, வர்த்தக முக்கியத்துவம் காரணமாக இப்பொறியானது மக்களிடையே பிரபல்யமடைந்தது.

1800 ஆம் ஆண்டில் தான் கம்பியூட்டரின் வரலாற்றிலே முதலாவது அத்தியாயமே ஆரம்பமாயிற்று. அப்பொழுது நெப்போலியன் ஆட்சி நடாத்திக்கொண்டிருந்த காலத்தில் 'சாள்ஸ் பாபேஜ்' (Charles Babbage) என்ற வானசாஸ்திர நிபுணர் தனது கணிதச் சிக்கல்களை இலகுவாகத் தீர்ப்பதற்கு ஓர் பொறியினை அமைக்க விரும்பினர்.

அப்போது நீராவியே வர்த்தக நோக்கங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தவனுல் அதனைக் கொண்டு இயங்கக்கூடிய பொறியொன்றினை வடிவமைக்க எண்ணிய இவர் தனது ஆராய்ச்சியின்போது பட்ட கஷ்டங்கள் எண்ணிலடங்கா.

போதிய பணவசதி இன்மையாலும்; தனது ஆராய்ச்சியைக் கண்டு தூற்றுவோரே மிகுதியாகக் காணப்பட்டதனுலும் மிகுந்த மனவேதனையடைந்தார். எனினும் தனது அயராத முயற்சியினுல் 1822 இல் மாறுபட்ட இயந்திரம் (Difference Engine) ஒன்றின் மாதிரியை அமைத்தார்.

இதற்காக 1823 இல் அரசாங்கம் இவருக்கு விருது வழங்கிக் கௌரவித்தது. எனினும் இவரால் இதனை முழுமையாக வடிவமைக்க முடியாமற் போயிற்று. 'பாபேஜ்' இதனை இடையில் கைவிட்டு எண்களையும், தகவல்களையும் சேகரித்து வைக்கக்கூடிய சாதனங்களைக் கொண்ட ஆராய்வு இயந்திரம் (Analytical Engine) ஒன்றை உருவாக்கினர்.

இதில் பல அம்சங்கள் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது. இதனுலேயே பாபேஜ் இன்றைய கம்பியூட்டர்களின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

'பாபேஜின்' ஆராய்ச்சிக்கு வலது கரமாக இருந்து இவருக்கு உதவியவர் அவரது வளர்ப்புமகளான 'லவ்லேஸ்' (Lovelace) என்பவராவார். 'பபேஜுக்கே' தெரியாத பல விடயங்களை அவரது இயந்திரத்தில் லவ்லேஸ் சரியான தகவல்களைக் கொடுத்து அதனை இயங்க வைத்தார்.

19 ஆம் நூற்றுண்டில்

19 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவில் 'ஹேர்மன் ஹொலரித்' (Herman Hollerith) என்பவர் துளையிடப்பட்ட அட்டைகளை (Punched Cards) கொண்டு இயங்கக்கூடிய நிரற்படுத்தும் இயந்திரம் (Tabulating Machine) ஒன்றை உருவாக்கினர்.

இது நிமிடத்திற்கு 200 அட்டைகள் வீதம் துளையிட்டது. 1890 இல் இதனைப் பயன்படுத்திய குடிசன மதிப்பீட்டுக் கூட்டுத்தாபனம் 1 வருடத்தில் கணிக்க வேண்டிய மக்கள் தொகை எண்ணிக்கையை 4 மாதங்களிலே கணித்து முடித்தது.

1896 இல் (Tabulating Machine Company) என்ற பெயரில் 'ஹேர்மன் ஹொலரித்' நிறுவிய இந்த ஸ்தாபனம் இன்று I. B. M. (In'er--national Business Machines Corporation) என்ற பெயருடன் விஸ்தரிக்கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளது. இன்று I. B. M. ஐயும் அது உற்பத்தி செய்யும் கம்பியூட்டர்களையும் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

'மின்னியக்க பொறி'களின் கண்டுபிடிப்பு கம்பியூட்டரின் வளர்ச்சியின் அடுத்த கட்டமாகக்காணப்படுகிறது. இதில் முதலாவது குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பானது 1937 ல் 'ஹொவார்ட் ஐக்கன்' (Howard Aiken) இன், மார்க் 1' (Mark 1) என்ற மின்னியக்க பொறியின் கண்டுபிடிப்பாகும்.

இது 8 அடி உயரமும் 55 அடி நீளமும் உடையதாயிருந்தது. இது 10 எண்களைக் கொண்ட இலக்கங்களை பெருக்குவதற்குப் 10 இலும் குறைவான நேரத்தையே எடுத்தது. மார்க் 1 எழுநூற்று ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட பகுதிகளையும் மிக நீளமான இழைகளையும் உள்ளடக்கியிருந்தது.

1964 இல் உருவான கம்பியூட்டர்

இதனை அடுத்து 1946 இல் 'ஜோன் மோக்லியும்' (John Mauchly) 'பிரெஸ்ப எக்கேர்ட்டும்' (Presper Eckert) முதலாவது முழுவதும் மின்னியக்கத்தாலான இலக்கக் கம்பியூட்டரை உருவாக்கினர். இது எனிஅக் (Eniac) என அழைக்கப்பட்டது.

இது ஏனைய பொறிகளை விடப் பல முன்னேற்றமான இயல்புகளைக் கொண்டிருந்தது. இதனுல் 1 செக்கனுக்கு நூறுக்கும் மேற்பட்ட கணிப்புக்களைச் செய்ய முடிந்தது. வாயு நிரப்பிய குழாய்கள் (Vaccum tubes) இங்கு பயன்படுத்தப்பட்டன.

இது 1500 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவையும் 15,000 க்கு மேற்பட்ட குழாய்களையுடையதாயும் 30 தொன்கள் நிறையுடையதாயும் இருந்ததெனில் இதன் பருமனை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றதா?

காலஞ் செல்லச் செல்ல கம்பியூட்டரின் பருமனைச் சிறுப்பித்து அதன் வேகத்தையும், சக்தியையும் மனிதன் பெருப்பிக்க எண்ணினுன். இதன் அடிப்படையில் 1952 இல் பாரியளவில் தகவல்களை சேகரித்து வைக்கக்கூடிய எட்வாக் (Edvac) என்ற கம்பியூட்டரை 'ஜோன் நியூமான்' (John Neumann) அமைத்தார். இது மனிதனின் துணையின்றி கணித்தல் வேலைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது.

கம்பியூட்டரின் முதலாவது சந்ததி Univac 1 என்ற (Universal Automatic Computer) கம்பியூட்டரின் உற்பத்தியுடன் 1946 இல் மோக்லியினுலும் எக்கேர்ட்டினுலும் பென்சில்வானியா பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 1951 இல் உருவாக்கப்பட்டது.

இது பின்னர் குடிசனமதிப்பீட்டுக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டது. முதலாவது சந்ததி கம்பியூட்டர்களின் உற்பத்தி 1959 ம் ஆண்டுவரை நீடித்தது.

இரண்டாவது சந்ததி கம்பியூட்டர்களின் காலம் 1959 முதல் 1965 வரை காணப்படுகின்றது. இங்கு குழாய்களுக்குப் பதிலாக திரான்ஸிஸ்டர்கள் (Transistors) பயன்படுத்தப்பட்டன.

திரான்ஸிஸ்டர்கள் சிறியவையாகையால் கம்பியூட்டர்களும் 1 வது சந்ததி கம்பியூட்டர்களை விட சிறியவையாகவும்; வேகங்கூடியவையாகவும்; உணர்திறன் கூடியனவாகவும்; குறைவான வெப்பத்தைப் பிறப்பிப்பவையாகவும் காணப்பட்டன.

மேலும், இங்கு காந்தக நாடாக்களினதும் (Magnetic-tape) தட்டுகளினதும் (Disks) பயன்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. கம்பியூட்டருக்குத் தகவல்களை வழங்கும் செய்திகளை பெறும் வழிகள் விருத்தியாக்கப்பட்டன.

மேலும், இங்கு கம்பியூட்டர்களுக்குரிய பொதுவான சில மொழிகள் பயன்பாட்டில் வந்தன. விஞ்ஞான நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் Fortran மொழி 1957 இலும் வர்த்தக நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் Cobol மொழி 1961 இலும் Basic மொழி 1964 இலும் அறிமுகப்படுத்தப்பட்டன.

கம்பியூட்டரின் 3வது சந்ததி 1965 இற்குப் பின் ஆரம்பமாயிற்று. இங்கு திரான்ஸ்சிஸ்டர்கள் நீக்கப்பட்டு பலபகுதிகளாலான இணைந்த சுற்றுக்கள் (Integrated Circuits) பயன்படுத்தப்படலாயின.

இதனுல், இங்கு கம்பியூட்டர்களின் வேகம் மேலுமதிகரித்தன; பல்வேறு செயற்பாடுகளை ஒரே நேரத்தில் செய்யக்கூடிய தன்மை; திருத்தம் அதிகரித்தது; விலை குறைக்கப்பட்டது; பருமன் குறைக்கப்பட்டது; தகவல்களைச் சேகரிக்கும் அளவு கூட்டப்பட்டது. இக்கால கட்டத்தில் பல புதிய கம்பியூட்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது IBM 360 ஆகும்.

1970 இல் கம்பியூட்டர்

1970 ஆம் ஆண்டின் போதிருந்து கம்பியூட்டரின் நான்காவது சந்ததி நடைமுறையிலிருந்து வருகிறது. இக்கால கட்டத்தின் போது பாரிய அளவு இணைந்த சுற்றுக்களின் பயன்பாடும், மைக்ரோ (Micro) கம்பியூட்டர்களின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்கது. அல்டெயாரே (Altair) 1வது மைக்ரோ கம்பியூட்டராகும். இதன் பின்னர் குறிப்பிடத்தக்க சிலவற்றில் Commodore உம் அண்மையில் IBM உம் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துடன் 1வதாக உருவாக்கப்பட்ட தனிப்பட்ட (Personal) Computer Apple 1 ஆகும். இதனை விட திருத்தக்கூடிய பல வசதிகள் கொண்டதாக அண்மையில் Apple II அமைக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்திலேயே கம்பியூட்டர்க்கழகங்கள் (Computer Clubs) மக்களிடம் கம்பியூட்டர் பற்றிய அறிவை வளர்ப்பதற்காகவும் ஆர்வமுள்ளவர்களுக்குத் தகவல்களை வழங்குவதற்காகவும் பரந்தளவில் அமைக்கப்பட்டன.

கம்பியூட்டர் விளையாட்டு

மேலும், சிறார்களினது அறிவு விருத்திக்காகவும் ஏனையோரது ஓய்வுநேரப் பயனுள்ள பொழுதுபோக்கிற்காகவும் கம்பியூட்டர் விளையாட்டுக்கள் (Computer games) கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வாறு வளர்ச்சியின் உச்சப்படியையடைந்துள்ள கம்பியூட்டரானது இன்று விஞ்ஞான, பொறியியல் நோக்கங்களுக்கும்; வர்த்தக, காரியாலய உபயோகத்திற்கும்; வைத்திய, விளையாட்டு, கல்வி, ஓய்வுநேரப் பொழுதுபோக்குத்துறைகளிலும் அரசாங்க, இராணுவ துறைகளிலும் விரைவான தீர்வுகளுக்காகவும், திருத்தமான தகவல்களைப் பெறுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அசுர வேகத்தில் இயங்குகின்ற கம்பியூட்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இதே அசுர வேகத்தில் இவற்றின் வளர்ச்சியும் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இதனுல் பல நன்மைகள் உண்டாகின்றபோதிலும், தீமைகளும் உருவாவது தவிர்க்கமுடியாததாகும்.

★

கண்களில் மை இடுவது பற்றி...

மின்னக் கண்கள்:

அளவில் சின்னக் கண் பெரிய கண்களாகத் தெரிய வேண்டுமென்று, கண் மையை அதிக அளவு உபயோகப்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. புருவத்திற்கும் – கண் இமைக்கும் இடையே உள்ள இடைவெளியைப் புருவத்தின் வடிவத்தால் கூடுதலாக்கி, மேல் இமைமீது லேசாக மைதீட்டினுல் கண்களின் அளவு மாறுதல்படும்.

கனமான இமைகள்கொண்ட கண்கள்:

'குவளைக் கண்கள்'— இம்மாதிரி கண்களின் உட்புறத்தில் மேலும், கீழும் லேசாக மை தீட்டவேண்டும். மைக்கோடு கண்களின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரையில் இருக்கவேண்டும். புருவத்திற்கும், கண்களுக்கும் நடுவிலிருக்கும் இடைவெளியில் லேசான 'தளிர்ரேஞ்' கலர் 'ஐ-ஷடோ' என்பதும் அழகுசாதனத்தை உபயோகப்படுத்தலாம். தோல் நிறத்தைப் பொறுத்து 'ஐ-ஷடோ' உபயோகப்படுத்துவதை நிர்ணயிக்கவேண்டும்.

அகலமான கண்கள்:

கண்களின் உட்புறத்தில் மட்டும் லேசாக மைதீட்டவேண்டும். கடைவிரையில் வரவேண்டிய அவசியமில்லை; உடல்நிறத்திற்கு ஏற்றவாறு கண்களின் மேற்புறத்தில் 'ஐ-ஷடோ' அழுத்தமான நிறத்திலிருந்தால் கண்கள் பிரதானமாகத் தெரியும்.

உள்ளடங்கிய கண்கள்:

கண்களின் வெளிப்புறத்தில் மேற்பகுதியில் கண் மை சற்று அதிகமாகத் தீட்டி, கண்ஓரம் வரை எடுத்துச் செல்லவேண்டும். 'ஐ-லைனர்' கொண்டு மெல்லியகோடு ஒன்றை கண் மீது வரைந்தால் கண்களின் உள்ளடங்கிய தோற்றம் மாற்றமடையும்.

உருண்டையான இரண்டு கண்களுக்கும் இடையே அதிக இடைவெளி உள்ள கண்கள்:

அதிகமாக மைதீட்டாமல் இருப்பது நலம். மேலும் கீழுமாக கண்களின் காதோர பகுதியில் மட்டும் மைதீட்டலாம். 'ஐ லைனரா'ல் மேலே கனமானகோடு தீட்டலாம்.

— வாணி கமலஹாசன்

முளைப் பயறுச் சோறு

அரிசி	– 2 கண்டு
கரட்	– ½ கிலோ
லீக்ஸ் அல்லது பொன்னுங்காணி	– ¼ கிலோ
பச்சைப்பயறு	– ¼ கிலோ
வெங்காயம்	– ¼ கிலோ
பச்சைமிளகாய்	– 2
சீரகம்	– ½ டீஸ்பூன்
நெய்	– 1 டீஸ்பூன்
மஞ்சள் பொடி	– அளவாக
உப்பு	

செய்முறை

பச்சைப் பயறை முதல் நாளே தண்ணீரில் ஊற வைத்துக் கொள்ளவேண்டும். நன்றாக ஊறிய பயறைத் துணியில் கட்டி முளைக்கவைக்கவும்.

சோறு அவிந்து வரும்போது அதற்குள் மஞ்சள், நெய், உப்பு இவற்றைப் போட்டு வடித்தால் சோறு ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் பூமாதிரி வரும்.

ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணை சிறிதளவு விட்டு

பச்சைமிளகாய், வெங்காயம், கருவேப்பிலை றம்பை போட்டுத் தாளிக்கவும்.

துருவிய கரட், சிறிதாக வெட்டப்பட்ட லீக்ஸ், முளைப் பயறு இவற்றில் அளவாக உப்புத் தண்ணீர் விட்டுக் கிளறித் தாளித்த பாத்திரத்தில் போட்டு 5 நிமிடங்கள் அவியவிடவும்.

நீர்த்தன்மை முழுவதும் வற்றிய பின் நெய் விட்டுக் கிளறவும்.

சிறிது நேரத்தால் இறக்கி வைக்கவும். முதலில் ஆறவிட்ட சோற்றை இவற்றுள் கொட்டிக் கிளறிப் பரிமாறலாம்.

பெரியவர்களும் குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள் சத்துள்ள உணவும் ஆகும். ★

பொஸ்பரஸ் கண்டுபிடிக்கப்பட்டது எப்படி?

ஐரோப்பிய சரித்திரத்தின் மத்திய காலத்தில் நடந்தது இது. 'ஹம்பர்க்' என்னும் ஜேர்மன் நகரத்தில் 'ஹென்னிந் பிரான்டு' என்ற வர்த்தகன் வாழ்ந்து வந்வான்.

அவன் தனது வர்த்தகக் காரியங்களில் மிகத் திறமைசாலியாகத் திகழ்ந்தான்.

ஆனுல் இரசாயனத்தைப் பற்றிய அறிவு அவனுக்கு மிகக் குறைந்த அளவே இருந்தது.

ஆனுல் அவனுலும் கூட திடீர் பணக்காரனுகிவிட முயல வேண்டும் என்ற சபலத்தைத் தடுக்க முடியவில்லை? இது சுலபமென அவனுக்குத் தோன்றியது.

ஆண்டுகள் கடந்தன. வர்த்தகர்களின் பேச்சுக்களின் பிரான்டின் பெயர் அடிபடுவது வர வரச் குறைந்து போயிற்று.

அவர் அப்பொழுதெல்லாம் என்ன செய்துகொண்டிருந்தார்? பலதரப்பட்ட தாதுக்களையும், கஷாயங்களையும் கரைத்தார், கலந்தார், காச்சினுர், சலித்தார். அவரது கைகளில் அமிலங்களும், காரங்களும் பட்டு வெந்து ஆறுத புண்களை ஏற்படுத்தின

ஒருநாள் மாலை அந்த முன்னுள் வர்த்தகரை அதிஷ்டம் தேடி வந்தது. அவரது சோதனைக் குடுவையின் அடியில் பனியைப் போன்ற வெண்மையான பொருளொன்று தங்கியது.

அது வேகமாக எரிந்து கனத்த மூச்சடைக்கும் புகையை உண்டாக்கியது. அது மட்டுமோ, புதுமையிலும், புதுமையாக அப்பொருள் இருளில் ஒளிர்ந்தது. அதன் குளிர்ந்த ஒளியானது. பிரான்டு தனது பழைய இரசாயன நூல்களைப் படிக்கக் கூடிய அளவு பிரகாசமாக இருந்தது.

(அச்சமயத்தில் அவருடைய வர்த்தக கடிதங்களும், ரசீதுகளும் இருக்க வேண்டிய இடத்தை மேற்கூறிய நூல்களல்லவா அடைத்துக் கொண்டிருந்தன.)

இவ்வாறுக தற்செயலாக பொஸ்பரஸ் என்ற தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது. பொஸ்பரஸ் என்ற பெயர் கிரேக்கச் சொல்லான 'ஒளி தாங்கி' என்ற சொல்லிலிருந்து ஏற்பட்டது.

தொகுப்பு:-
—அ. கெனத்
பரியோவான் கல்லூரி.

பிரான்ஸிஸ் பேகன்

பிரான்சிஸ் பேகன், இவர் ஆங்கிலேய தேசத்தைச் சேர்ந்த தத்துவ அறிஞரும் விஞ்ஞானியும் ஆவர்.

இயற்கை பற்றிய உண்மைகளை அறிவதற்கு அனுபவ முறைகளான அவதான முறைகளும், பரிசோதனை முறைகளும் அவசியம் என்பதனை நியாயப்படுத்தியவர்.

தொகுத்தறி முறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். இம்முறையானது பல தனிப்பட்ட உண்மைகளை அவதானிப்பதன் மூலம் நிகழ்வதான முடிவினைப் பெறும் ஓர் முறையாகும்.

உதாரணமாக நான் சாப்பிட்ட ஆப்பிள் பழங்கள் எல்லாம் இனிப்பானவை; ஆகவே ஆப்பிள் பழங்கள் இனிப்பானவை.

இயற்கையை விளக்குவதற்கான மெய்க்குறிப்புக்கள்' என்னும் நூலை வெளியிட்டவர்.

தொகுத்தறி முறையின் தந்தை எனப் போற்றப்படுகிறார் பிரான்சிஸ் பேகன். ★

தொகுப்பு:
—ம. கியூமன்.

எங்கள் வீட்டுப் பூனைக்குட்டி

எங்கள் வீட்டுப் பூனைக்குட்டி
இனிய நல்ல பூனைக்குட்டி
பட்டுப் போன்ற பூனைக்குட்டி
பழக நல்ல பூனைக்குட்டி

ஆளில்லாத வேளை பார்த்து
அடுக்களை செல்லும் பூனைக்குட்டி
பால் இருக்கும் சட்டியை
பதுங்கித் தேடும் பூனைக்குட்டி

மியாவ் மியாவ் என்றே கத்தும்
மீசைக்காரப் பூனைக்குட்டி
இரவு நேரம் என்றதும்
எலிகள் பிடிக்கும் பூனைக்குட்டி

மெதுவாய் மெத்தையில் ஏறியே
இதமாய் தூங்கும் பூனைக்குட்டி
வள் வள் சத்தம் கேட்டதும்
வாலைச் சிலிர்க்கும் பூனைக்குட்டி

சுறுப்பு வெள்ளைப் பூனைக்குட்டி
காலைச் சுற்றும் பூனைக்குட்டி
எங்கள் வீட்டுப் பூனைக்குட்டி
இனிய நல்ல பூனைக்குட்டி.

—கௌரி. நடராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பட உலகில் நட்சத்திர ஆதிக்கம் எப்படி உருவானது?

1941 - ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சோவியத் யூனியன் மீது ஹிட்லரின் ஜேர்மனி திடீர்த் தாக்குதலைத் தொடுத்தது.

ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான்... இந்த மூன்று ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உலகந் தழுவிய தொழாபாசிஸ்ட் எதிர்ப்புக் கூட்டு உருவாகியது:

எம். ஜி. ஆர்.

திரைப்பட வரலாற்று ஆய்வாளர்களான பி. டி. கார்காவும், ஜான் டோயலும் 'Indian Cinema Surer Ba--zaar' நூலில், இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் திரைப்பட உலகம்பற்றி பல தகவல்களைக் கூறியுள்ளனர்.

பி. டி. கார்கா கூறியிருக்கிறார்:

'ஜப்பானியர்களின் முதலாவது குண்டு கல்கத்தாவில் விழுந்தபோது திடீரென்றும் தலைமோகவும் காட்சி மாறியது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை

ரஜனிகாந்த்

அரசாங்கம் இறுக்கியது. இறக்குமதியில் புதியகட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஒரு திரைப்படத்தின் சராசரி நீளம் 11 ஆயிரம் அடியாக மட்டுமே இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் எல்லாத் திரைப்படங்களின் தயாரிப்பையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள, லைசென்ஸ் வழங்கும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.

பெரிய நகரங்களில் நாளொன்றுக்கு மூன்று காட்சிகளும் சிறிய நகரங்களில் இரண்டு காட்சிகள் மட்டுமே திரையிடப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டது.

தயாரிப்பும் திரையிடலும் இவ்வாறு முறைப்படுத்தப்பட்டபொழுது பொழுதுபோக்குக்கான தேவை மிகப் பெரிய அளவில் வளர்ந்தது.

முன்னெப்போதையும்விட, மக்களிடம் செலவு செய்வதற்கு அப்போது பணம் இருந்தது. வர்த்தகத் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள் இந்த நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டன.

மனக்கற்பிதமான உணர்வுகளைக் கிளரச் செய்யும் படங்களையும், அற்பமான சாகஸப் படங்களையும், ஆதாரமற்ற சரித்திரப் படங்களையும் மலிவான ரஸனைக்குத் தீனி போடத் தயாரிக்கத் தொடங்கின.'

ஜான் டோயல் எழுதியிருக்கிறார்: 'சாகஸ வியாபாரிகளிடமும் கள்ளச்சந்தைக்காரர்களிடமும் திடீரென பணத்தை உலகப்போர் குவித்தது. இந்தப் பணம் சட்டபூர்வமானதல்ல; இந்தப் பணத்தை அதிகாரபூர்வமாகவோ, பகிரங்கமாகவோ வேறு எங்கும் முதலீடு செய்ய முடியாது. இந்தப் பணம் திரைப்பட உலகில் கொட்டப்பட்டது.

முதலீடு செய்யப்பட்ட தொகைக்கு வெவ்வேறு கணக்குச் சொல்லக் கூடிய வாய்ப்பு சினிமா உலகில் சுலபமாகக் கிடைத்தது.

சினிமாப் படங்களில் பெருந் தொகையான பணம் கொட்டப்பட்டது. அதில் பெரும்பகுதி நட்சத்திரங்களிடம் கொட்டப்பட்டது.'

பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் வட்டி வியாபாரம் செய்துகொண்டிருந்த பலர் இரண்டாம் உலகப்போர் காரணமாகப் பெட்டி பெட்டியாக பணத்தோடு தாயகமான தமிழகத்துக்குத் திரும்பி வந்தனர். திரை உலகில் புகுந்தனர்.

அவர்களால் தமிழ் சினிமா உலகிலும் 'நட்சத்திர முறைமை' (Star System) உருவாக்கப்பட்டது

1934 ஆம் ஆண்டில் தனது முதல் படம் 'பவளக்கொடி' யில் நடிப்பு ஊதியமாய் ரூபா ஆயிரம் வாங்கியவர் எம். கே. தியாகராஜ பாகவதர்.

> தமிழ்ப்படவுலகில் நட்சத்திர ஆதிக்கம் இப்போது நிலவுகிறது.
>
> எம். ஜி. ஆர்., சிவாஜி ஆதிக்கம் ஒரு காலத்தில் இருந்தது.
>
> பின்னர் ரஜனிகாந்த், கமலஹாசன் ஆதிக்கம் நிலவியது. இப்படியே நட்சத்திர ஆதிக்கமுறை போகிறது.
>
> இரண்டாம உலகமகாயுத்த காலத்தில் எப்படி இந்த ஆதிக்கமுறை உருவானது?
>
> அதை விளக்குகிறது இந்தக் கட்டுரை. தகவல்: அறந்தை நாராயணன்.

இரண்டாம் உலகப்போர் உச்சக்கட்டத்தை எட்டிக் கொண்டிருந்தது. 1941 ஆம் ஆண்டு வெளிவந்த 'அசோக் குமார்' படத்திற்காக தியாகராஜ பாகவதர் பெற்ற நடிப்பு ஊதியம் ரூபா ஒரு லட்சம்.

தான நடிக்க வேண்டுமானால் பதாசம் சிவன் பாடல்களை எழுதவேண்டும் இளங்கோவன் வசனங்களை எழுத வேண்டும் என்ற நிபந்தனைகளைப் படத்தயாரிப்பாளர்களிடம் விதிக்கின்ற வல்லமை பெற்ற (Super Star) ஆக பாகவதர் உயர்ந்துகொண்டிருந்தார்.

சென்னையிலிருந்து தி. மேனகன்

படத்திற்குப் படம் வெவ்வேறு புதுக் கதாநாயகிகளையும் தன்னோடு நடிப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டார்.

நடிப்பதற்கு மட்டும்தான் பாகவதர் புதுப் புது முகங்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்என்பதில்லை. பின்னணி பாடுவதற்கும் அவர் புதுமுகங்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார் அவர்களில் குறிப்

சிவாஜிகணேசன்

பிடத்தக்கவர்கள் இருவர். ஒருவர் திருமதி எம். எல். வசந்தகுமாரி, இன்னொருவர் குலமங்கலம் ராஜலட்சுமி' ('எம். கே. டி. பாகவதர் கதை' நூலில் எழுத்தாளர் விந்தன் தரும் தகவல் இது)

பாகவதர் போலவே இன்னொரு சூப்பர் ஸ்டாரும் இரண்டாம் உலகயுத்தக் காலத்தில் வளர்ந்து கொண்டிருந்தார். அவர் பி. யு. சின்னப்பா.

கமலஹாசன்

இருவருக்கிடையிலும் போட்டியை தயாரிப்பாளர்கள் திட்டமிட்டு, முதலீடு செய்துவளர்த்திருக்கிறார்கள். தமிழகத்தின் திரைப்பட ரசிகர்கள் 'பாகவதர் - சின்னப்பா' பெயர்களால் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்; பத்திரிகைகளும் எதிர் எதிராக நின்றிருக்கின்றன. ★

திரைக்கதை அமைப்பது எப்படி?

செலவே இல்லாத 'எடிட்டிங்' தெளிவான, திரைக்கதையில்தான்... திரைக்கதை பற்றி நீங்கள் நிச்சயம் கேள்விப்பட்டு இருப்பீர்கள்...

திரைக்கதையே திரைப்படத்தின் முதுகெலும்பு

திரைப்படமோ, திரைக்கதையாய் இருக்கும் எழுத்துக்கள் [Words] திரையில் காட்சிகளாய் [Visuals] விரிவதே.

திரைக்கதை அமைப்பது எவ்வாறு?

ஒரு நல்ல திரைக்கதைக்கு என்னவெல்லாம் அடிப்படையாகத் தேவை?

முதலில் —

ஒரு கதை எப்படிப் பிறக்கிறது?

சில விஷயங்களைக் கேள்விப்படும்போது, சில சம்பவங்களை நேரில் காணும்போது நம் மனதினைப் பாதிக்கிறது. இந்தப் பாதிப்பு நம்மை ஏதோ எழுதத் தூண்டுகிறது.....

இந்தச் சம்பவத்தில் இந்தக் கருத்தைச் சொல்லப் போகிறோம் என்று தீர்மானிக்கும் போதுதான் 'கரு' உருவாகிறது.

கரு வளர்ந்து கதையாய் மலர்கிறது.

இந்தக் கதை, திரைக்கதையாய் பரிணாமம் பெறும் போது நிறைய மாற்றங்களைச் சந்திக்கிறது...

திரைக்கதை அமைக்கும் போது காமிராவையும் எடிட்டிங்கையும் அடிப்படையாய் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது....

பேப்பரில் ஓடுகின்ற படம் தான் திரைக்கதை என்பதால் திரைக்கதையை டைரக்டர் எழுதுவதே சிறப்பாகும்..... இந்தக்கருத்தை மறுப்பவர்களும் உண்டு. உலகப் புகழ் பெற்ற 'காந்தி' திரைப்படத்தின் திரைக்கதையை அதன் இயக்குநர் எழுதவில்லை என்பது இவர்கள் வாதம்.

திரைக்கதை தனக்கென்று சில இலக்கணங்களை வைத்திருக்கிறது

ஒரு நல்ல திரைக்கதை அடிப்படையாய் என்னவெல்லாம் கொண்டிருக்க வேண்டும் என்று பேசவந்த ஓர் இயக்குநர் கீழ்க்காணும் விஷயங்களைக் குறிப்பிடுகிறார்....

1. மையப் பாத்திரம் (A Central Character).

கதையின் கருத்தாகச்சொல்லப்படுகின்ற விஷயத்தைத் தூக்கி, சுமக்கும் ஒரு மையப் பாத்திரம் கண்டிப்பாய் அவசியம். அதைச் சுற்றியே கதை சுழல்வது சிறப்பு

2. தவிப்பு நிலை [A Predicament].

பாத்திரங்கள் தர்மசங்கடமான சூழ் நிலையில் மாட்டிக் கொண்டு தவிக்க, பார்வையாளர்கள் அதற்காகப் பச்சாத்தாபப்பட வேண்டும்...

3. நம்பிக்கை [An Objective]

போராடும் பாத்திரங்களுக்குக் கடைசியில் பலன் உண்டு என்ற நம்பிக்கையில் கதை வளர்வது நலம்

4. எதிர்ப்பு நிலை [An Opponent]

நடுநாயகமான பாத்திரம் எதிர்த்துப் போராட ஓர் எதிர்ப்புச் சக்தி அல்லது ஓர் எதிரி இருப்பின் கதையில் வேகம் அதிகப்படும்.

5. முடிவு.

கதையின் முடிவு ஊகிக்க முடியாததாக ஆனால், அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும்.

மேற்கண்ட இலக்கணத்திற்குள் ஏதாவது ஓர் படத்தின் திரைக்கதையை அமைக்க வேண்டும். ★

— முல்லை செல்வராஜன்

பாதியில் நிறை

எம். ஜி. ஆர். படம் மீண்டும் தயாராகிறது

எம். ஜி. ஆர். நடிக்கத் தொடங்கி முடிவடையாமல் இருக்கும் 'நல்லதை நாடு கேட்கும்' படத்தின் படப்பிடிப்பு, மீண்டும் தொடங்குகிறது.

இதில், அ. தி. மு. க. பிரமுகர் ஜேப்பியார் நடிப்பதுடன் டைரக்டும் செய்கிறார்.

எம். ஜி. ஆர். முதல் அமைச்சர் ஆவதற்கு முன்பு நடித்து, படப்பிடிப்பு பூர்த்தியாகாமல் இருக்கும் படம், 'நல்லதை நாடு கேட்கும்'

இதன் தயாரிப்பாளர், மேக்கப் நிபுணர் கே. நாராயணசாமி.

இந்தப் படத்தைத் தொடர்ந்து தயாரிக்கும் வேலை தொடங்கி உள்ளது.

அண்ணா தி. மு. கழக (ஜானகி அணி) சென்னை மாவட்டச் செயலாளரும், பட அதிபருமான ஜேப்பியார் இந்தப் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாவதுடன், கதை, திரைக்கதை எழுதி டைரக்டு செய்கிறார்.

டி. ராஜேந்தர் டைரக்டராக அறிமுகமான 'வசந்த அழைப்புகள்' உட்பட 6 படங்களை ஏற்கனவே தயாரித்தவர், ஜேப்பியார்.

(எ - 4)

சொற்சிலம்பம்



போட்டி இல. 91

சொற்சிலம்பம் இல: 91
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: .....
விலாசம்: .....
.....

— இங்கே வெட்டுக —

முடிவு திகதி: 16 – 11 – 1988

(வலது பக்க மேல் மூலைச் சதுரத்தை இலக்கம் 4 ஆகக் கொள்ளவும்.)

இடமிருந்து வலம்:

1. அதிசயம், 5. கறுப்பு நிறமானது, 6. கலப்பை, 7. அகாலமரணம். 8. ஆபத்துக்காலம், 9. மரம், 10. பிள்ளைகளில் ஒன்று. 11. இரைச்சல், 13. துன்பம், 14. கல்லீரலில் சுரக்கும் நீர், 16. மதிப்பு, 17. கோண அளவின் அலகு.

மேலிருந்து கீழ்:

1. நகைச்சுவைக்கவி, 2 மலர்ச்சி, 3. நீர் போன்ற பொருள், 4. இரண்டு, 6. தூண்டுகல், 7. நெருக்கம், 10. பார்வதி, 11. மெலிவு 12. பிரணவமொழி 13. அணைந்துபோ, 15. சிரம்.

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அசடு வழிந்தது!

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் காத்து நின்றேன். பருத்தித்துறை பஸ்ஸை எதிர்பார்த்து; சுமார் அரை மணி நேரமாக எந்த ஒரு பஸ்ஸுமே வரவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு பையன் உரத்த குரலில் கூவினான்.

'கோப்பாய் ... நீர்வேலி... சிறுப்பிட்டி... புத்தூர்... அச்சுவேலி போறவர்கள் வாங்கோ வான் வெளிக்கிடப் போகுது'

இனி என்ன செய்வது வானிலாவது போவம் பஸ் வராதுபோல இருக்கு என்று எண்ணி வான் தரிப்பு நிலையத்துக்கு சென்றேன். என்னைத் தொடர்ந்து பலரும் வந்தனர்.

வானில் ஏறும் முன் முன்னால் இருந்த புத்தகக்கடையில் ஒரு தமிழ் தினசரியையும் வாங்கிக் கொண்டேன்.

வானில் பயணம் செய்யும் போது வீண் நேரத்தைக் கழிக்காது பத்திரிகையைப் படிக்கலாம் அல்லவா? என் பின்னால் இரண்டு இளைஞர்கள் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அவர்களைத் திரும்பிப்பார்த்தேன். வெளிநாட்டால் வந்தவர்கள்போல் இருக்கவேண்டும். விலை உயர்ந்த சேட்டும் காற்சட்டையும் அணிந்திருந்தார்கள். அத்துடன் மைனர் சங்கிலியும் கழுத்தில் மின்னிக் கொண்டிருந்தது. போதாதற்கு மேல்நாட்டு சென்ட் வாசனை மூக்கைப்பிடுங்கியது.

என் முதுகைச் சுரண்டினார்கள். திரும்பி என்ன வேணும் என்று கேட்டேன்.

'தீப்பெட்டி இருக்கா'

'நான் புகைப்பதில்லை'

'நோ சிமோக்கிங்! கன்றிமான்' என்று ஒருவன் ஆங்கிலத்தில் கூறினான். இருவரும் சிரித்தார்கள்.

'தமிழ்ச்சட்டம்பியர் உதுகளுக்கு அனுராதபுரத்துக்கு அங்காலை தெரியாது.' என்று ஒருவன் கூற இருவரும் சிரித்தார்கள்.

என் சால்வையையும் வேட்டியையும் தேசிய சட்டையையும் பார்த்து அவர்கள் தமிழ்ச்சட்டம்பி என்று என்னை கணித்துக்கொண்டார்கள்.

அவர்கள் ஆங்கிலத்தில் தொடர்ந்து உரையாடினார்கள். நான் கையில் வைத்திருந்த தமிழ்த் தினசரியை படித்துக்கொண்டிருந்தேன்.

பத்திரிகையைப் படித்தாலும் என் காதில் அவர்கள் உரையாடல் விழுந்தது.

'இந்தத் தமிழ் வாத்திமார் கிணற்றுத் தவளைகள். மச்சான்! எப்போது இவர்கள் திருந்தப் போகிறார்களோ. வெளிநாடுகளில் ஆசிரியர்கள் எப்படியெல்லாம் நடக்கிறார்கள். புகைக்கிறார்கள், குடிக்கிறார்கள் இங்கை என்னவென்றால் இவர்கள் தங்களை பிரம்மாக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றவன் ஆரம்பித்தான். எல்லாம் அவசர அவசரமாகப் படித்த ஸ்போக்கின் இங்கிலீசுதான்.

'அது மட்டுமே மச்சான் திருநீற்றுப்பட்டை சந்தனப் பொட்டு அரிங்கம் அரிங்கம்' என்றான். இருவரும் ஏக்காளமாகச் சிரித்தார்கள்.

என்னால் அவர்கள் அட்டகாசத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை அவர்கள் பேசிய ஆங்கிலத்தை ஒரு ஆங்கிலேயன் கேட்டிருந்தால் அவர்களைக் கொலை செய்திருப்பான் அல்லது தானாவது தற்கொலை செய்திருப்பான். பாவம் 'இராணி மொழி' அந்த இளைஞர்களின் வாய்க்குள் அகப்பட்டு படுவதை எண்ணி எனக்குள் வருத்தப்பட்டேன்.

'கோப்பாய் நீர்வேலி சிறுப்பிட்டி புத்தூர் அச்சுவேலி, வான்காரப் பையன் வானுக்கு வெளியே நின்று உரத்த தொனியில் கத்திக் கொண்டு நிற்கிறான்- ஆள் சேர்ப்பதற்கு. பையனை ரைம்கீப்பர் நெருக்கிறான் வானை எடுக்கும்படி.

'என்ன அண்ணை ஒரு கொஞ்சம் பொறுங்கோ; வெறும் வானைக் கொண்டு போறதே' பையன் முணுமுணுக்கிறான்.

பின்னால் இருந்தவர்கள் எங்கோ ஒரு தீப்பெட்டியைப் பெற்று சிகரெட்டை பற்ற வைத்துக்கொண்டார்கள். சிகரெட் புகையை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

- நீர்வை இரதி -

அவர்கள் விட்ட புகை வான் எங்கும் வியாபித்திருந்தது. மற்றவர்கள் இருக்கும் இடத்தில் புகைத்து இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற நாகரீம் கூட அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

'வாத்தியாரிட்டை பேப்பரை வாங்கு பார்ப்பம்' என்றான் ஒருவன்.

'போடா தமிழ்ப்பத்திரிகை [illegible] தமிழ்ப் பத்திரிகை [illegible] படிக்கிறதில்லை [illegible] பத்திரிகைகள் என்றான் எவ்வளவு உலக விடயங்களை அறியலாம். நியூசன்ஸ்'

'நீ சொல்வது சரிதான் மச்சான்.

'சரிசரி வானை எடு' என்று ரைம்கீப்பர் நெருக்க நடத்துனர் பையனும் 'ரைட் ரைட்' என்று சொல்ல வானும் புறப்பட்டது.

அப்போது ஒரு பையன் ஓடி வந்து வானில் ஏறிக் கொண்டான். என்னைக் கண்டதும் 'குட்மோனிங் சேர். எங்கே இந்தப் பக்கம்' என்றான்.

'இப்போ உன் படிப்பு எப்படி மெடிசின் எத்தனையாம் ஆண்டு'- என்று கேட்டேன். சேகர் என்னிடம் படித்த மாணவன். இப்போது யாழ்ப்பாணக் கம்பசில் மெடிசின் செய்கிறான்.

'ஐயா இது இறுதியாண்டு உங்களிடம் கற்ற ஆங்கில அறிவு இன்று பல்கலைக்கழக படிப்புக்கு பெரும் உதவியாக உள்ளது. இப்போது எங்கே போகிறீர்கள்.'

'ஆங்கில வகுப்பு ஒன்று இருக்கிறது ரியூட்டறிக்கு படிப்பிக்கப்போகிறேன்' என்றேன். பின்னால் இருந்த இளைஞர்களைத் திரும்பிப் பார்த்தேன் அவர்கள் இருவரும் அசடுவழிய முகத்தைத் திருப்பிக்கொண்டனர்.

(யாவும் கற்பனை)

கருக்கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிகூட புனிதராக அருளிய யேசுபிரான்

சிமியோன் ஒரு நாள் இயேசுவைத் தன்னுடன் உணவருந்த அழைத்தான். இயேசுவை அன்பு செய்த காரணத்தால் அல்ல, வெறும் விருந்தைப் பிரியத்தால் அவ்வாறு செய்தான்.

எனவே இயேசு வீட்டுக்கு வந்ததும், பாலஸ்தீன நாட்டில் பழக்க வழக்கத்திலிருந்த நட்பு அடையாளங்கள் (பாதங் கழுவுதல், பரிமளத் தைலம் பூசுதல்) எதையும் அவன் செய்யவில்லை.

விருந்து நடந்துகொண்டிருந்தபோது பெரிய பாவியான ஒரு பெண் இயேசுவை அணுகி மண்டியிட்டாள்.

தனது பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்காக வந்திருந்தாள். அவளது உள்ளம் துக்கத்தால் நிரம்பி கண்ணீர் சொரிந்தது அழத் தொடங்கினாள்.

அவள் சிந்திய கண்ணீர்த் துளிகள் இயேசுவின் பாதங்களை நனைத்தன. பிறகு அப்பெண் தனது கூந்தலால் அவரது பாதங்களைத் துடைத்து முத்தமிட்டு விலையுயர்ந்த வாசனைத் தைலத்தை அவற்றின்மேல் பூசினாள்.

சிமியோன் அப்பெண் செய்ததைப் பார்த்து முணுமுணுத்தான். 'இவர் ஓர் இறைவாக்குரைஞராய் இருந்தால் இப்பெண் யாரென்று அறிந்து பெரிய பாவியாகிய அவள் தன்னைத் தொடுவதற்கு அனுமதித்திருக்கமாட்டார்.'

அவனது எண்ணத்தை அறிந்த இயேசு 'சிமியோன்! ஒருவரிடம் இருவர் கடன்பட்டிருந்தனர். ஒருவன் 500 வெள்ளிக் காசுகள், மற்றவன் 50. அவர்களின் எளிய நிலையை அறிந்து கடன் கொடுத்தவன் இருகடன்களையும் தள்ளுபடி செய்தான். அந்த இருவரில் யார் அவனை அதிகம் அன்பு செய்வார்?' என்று கேட்டார்.

'யாருக்கு அதிகக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதோ அவன் தான்' என்றான்.

'சரியாய்த் தீர்ப்பிட்டுள்ளாய். இப்பெண்ணைப் பார். பெரும் பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டதால் உன்னை விட இவள் என்னை அதிகம் அன்பு செய்கிறாள். நீ என் பாதங்களைக் கழுவவில்லை, முத்தி செய்யவில்லை, அவற்றின்மீது வாசனைத் தைலம் பூசவில்லை. இவளோ தன் கண்ணீரால் என் பாதங்களைக் கழுவி, வாசனைத் தைலம் பூசினாள்.'

பின்னர் அப்பெண்ணை நோக்கி 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்றார் இயேசு.

அங்கே இருந்தவர்கள் 'பாவங்களை மன்னிக்க இம்மனிதன் யார்?' என்று எண்ணினர்.

இயேசு அவளை நோக்கி 'உன் விசுவாசம் உன்னை மீட்டது. சமாதானமாய்ப் போ' என்றார். தன் உள்ளத்தில் இயேசுவின்பால் அன்பும், நன்றியுணர்வும் நிரம்பியவளாய் அவள் வீடு திரும்பினாள்.

தூய்மையான வாழ்வு வாழ்ந்து புனிதை பட்டமும் பெற்றாள். — புனித மரியமதலேனாள்.

ஆம், பெரிய பாவி கூடப் புனிதராக மாறலாம்.

– 'நற்கருணை வீரன்' நூலில் இருந்து. ★

கடவுளை அடைய சம்பிரதாயம் எதற்கு?

பரிபூரண உண்மையை உணர்ந்து, கடவுளை உணர்வதற்குத்தானே மதம்...? என்றுகேட்டான் ஒரு சீடன் பகவான் ராமகிருஷ்ணரிடம். 'ஆம்' என்றார் பகவான்.

அப்படியானால் பூஜை, புனஸ்காரம் நெற்றியில் திருநீறு, குங்குமம் அணிதல், ஆசார அனுஷ்டானங்கள் என்பன வெறும் சம்பிரதாயங்கள்தானே...? என்றான் சீடன். உண்மை, உண்மை என்றார் பகவான். 'அப்படியானால் இந்த வீண் சம்பிரதாயங்களை விட்டுவிட்டுக் கடவுளை உணர்தல் மட்டும் செய்தால் என்ன...?' — என்று மீண்டும் கேட்டான் சீடன்.

பகவான் இராமகிருஷ்ணர் தெய்வீகமாகப் புன்னகைத்தார்.

'சரியாகக் கேட்டாய்' என்று அவனைப் பாராட்டுகிற மாதிரிப் பார்த்துவிட்டு சீடனிடம்,

'சரி நான் பதில் சொல்லும் முன் சில கேள்விகளைக் கேட்கிறேன் பதில் சொல்' என்று கேட்கத்தொடங்கினார்.

'நெற்பயிரைப், பார்த்திருக்கிறாய் அல்லவா...?'

ஓ...! என்று தலையாட்டினான்.

'அது நெல்லை ஊன்றினால் தானே முளைக்கிறது... இல்லையா...?'

'இதிலென்ன சந்தேகம்'

'சரி...செடியாக முளைக்கிறதே அது நெல்லுக்குள் இருக்கும் அரிசியிலிருந்து தானே முளைக்கிறது.? அரிசியை மூடியிருக்கும் உமியில் இருந்துஇல்லையே...?

'அரிசிதான் முளைவிகிடுறது.

'சபாஷ்' அப்படியானால் அரிசியை ஊன்றினால் போதாதா...? நெல்லை ஏன் ஊன்றுகின்றோம்...?

கேள்விகேட்டுசீடன் மெவுனமானான்.

பகவான் கருணை பொங்கச் சிரித்தார்.

பரஹம்சர்

நெற்பயிர் அரிசியில் இருந்துதான் வருகிறது. ஆனால் அரிசியை ஊன்றினால் பயிராகாது. உமிமூடிய அரிசியை, அதாவது நெல்லை ஊன்றினால் தான் முளைவிடும். அதுபோல் தான் சம்பிரதாயங்களும் தெய்வத்தை உணர்கிற தத்துவங்களும். தத்துவத்தைக் கடைப்பிடித்து தெய்வத்தை அறிவதுதான் இலட்சியம்.

ஆனாலும் பூஜை,பக்தி,அனுட்டானங்கள் ஆகிய சம்பிரதாயங்களின் பாதுகாவலில் தான் தத்துவங்களைக் கடைப்பிடிக்க இயலும். தெய்வத்தை உணர இயலும். சம்பிரதாயங்களை புறக்கணிக்கிற பக்குவம் எளிதில் கிடைக்காது. அதை அடைவதற்கு சில சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும்' என்றார் பகவான்.

சீடன் வெட்கித் தலை வணங்கி, காலில் விழுந்து ஆசிபெற்றான்.

– 'இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்'– என்ற நூலில் இருந்து. ★

மார்க்கங்களின் தலையாய நோக்கம் என்ன?

இறைவன் உருவாக்கிய இயற்கை நெறிகளுக்கு முழுமையாகக் கட்டுப்படுவது இஸ்லாம் எனக் குறிக்கப்படுகிறது.

'இஸ்லாம்' என்றாலே, இறைநாட்டத்திற்காக முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதாகும்.

இஸ்லாம் அமைப்புத்திட்ட இயற்கை இலக்கணங்களை இறைத்தூதராம் நபிகள்பெரு

- எம்.ஏ.லத்தீப் -

மானார் (ஸல்) அவர்களின் நடைமுறை எனும் இலக்கியத்திற்குஒப்பவாழ்க்கையை அமைத்துக்கொள்வது இஸ்லாம் என அறியப்படுகிறது.

இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை இறைவனுக்காக இறைவனை வழிபடுதல் மட்டுமன்று.

உண்மையில், மார்க்கத்தைப் பேணுவது இறைவழிபாட்டிற்கு மட்டுமின்றி மனித மேம்பாட்டுக்காகவும் ஆகும்.

மனிதாபிமானத்தை முழுமையாக மனிதன் பேணிட வேண்டும். இதுதான் மார்க்கங்களின் தலையாய நோக்கம்.

மனிதவாழ்வைப் பீடித்துள்ள நிலையான நோய்களில் பசியும் பட்டினியும் ஒன்றாகும்.

இல்லாதார் மட்டுமின்றி, இருப்போரும் பசிப்பிணியின் கொடுமையை அறிந்துஅதனை மனித வாழ்வில் இருந்து நீக்குவது நன்னெறிகளில் எல்லாம் தலையாய நெறி.

இதனை உணர்த்தும் சாதனம்தான் நோன்பு ஆகும். ★

ஒளிமிக்க உடல் நலத்திற்கு வழி

நடைப் பயிற்சியை மேற்கொள்ள இயலாதவர்கள், சில உடற் பயிற்சிகளையேனும் அல்லது ஆசனங்கள், பிராணாயாமங்களையேனும் செய்ய வேண்டும்.

அவர்கள் கூடியவரையில் மிகவும் குறைந்த உடைகளை உடுக்கவேண்டும். கூடியவரையில் மிகுந்த அளவில் தங்களின் உடம்புகளின் மீது காற்றுப்படும்படியாகச் செய்ய வேண்டும்.

உடல் நலத்தைப் பேணுவதற்கு உதவும் இரண்டாவது முக்கியமான இயற்கை சக்தி தண்ணீர். படுக்கையிலிருந்து எழுந்த உடனே பல் துலக்கியவுடன் நாம் ஒரு குவளை நிறையத் தண்ணீரைப் பருக வேண்டும். இது மலத்தை வெளியேற்ற உதவுகிறது.

குளிர்ந்த நீரில்

அடுத்து முக்கியமானது குளிர்ந்த நீரில் குளிப்பது; அதையும் கூடிய வரையில் காலைநேரத்தில் முடித்துக் கொள்ளவேண்டும். குளித்த பிறகு ஒரு துண்டினால் உடம்பை நன்றாகத் துடைத்துக்கொள்ளவேண்டும். உணவுக்கு அரை மணி நேரத்திற்கு முன்பு ஒரு கிண்ணம் வெந்நீரைப் பருகுவது நல்ல உடல் நலத்தைப் பேணுவதற்கு மிகவும் உதவுகின்றது.

உடல் நலத்தைப் பேணுவதற்கு உதவும் மூன்றாவது முக்கியமான இயற்கைச்சக்தி வெயில். தாவரங்களின் உலகும் விலங்குகளின் உலகும் வளர்ச்சி பெறுவதற்கு மிகவும் இன்றியமையாதது வெயில்.

கதிரவனின் ஒளியைப் போதிய அளவு பெறாத செடிகளும், மரங்களும் வளர்ச்சி குன்றிப் போகின்றன. காலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் நம் உடம்பின்மீது படுமாறு உடம்பைத் திறந்து வைத்தால் கதிரொளியிலிருந்து நாம் மிகுந்த உயிர்ச்சத்தைப் பெறுகிறோம்.

கதிரவனின் ஒளி

பணிசெய்யும் இடங்களில் போதியளவு வெளிச்சம் இருக்கவேண்டும். கதிரொளி உள்ளே நுழைய அனுமதிக்கும் வகையில் வீடுகளில் கதவுகளும், ஜன்னல்களும் திறந்துவைக்கப்படவேண்டும்.

குளிர் காலத்தில் கூட கதவுகளும், ஜன்னல்களும் திறந்து வைக்கப்படவேண்டும். போதிய உடைகளால் நம் உடம்பைப் போர்த்திப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். உடை எப்போதும் இலகுவாகவும் தளர்த்தியாகவும் இருக்கவேண்டும்.

உடல் நலத்தைப் பேணுவதில் உணவும் ஒரு முக்கியமான காரணமாகும்.

மனிதனது மிகவும் இயற்கையான உணவு பச்சைக் காய்கறிகள், பழங்கள், கிழங்குகள், பால் அதாவது சமைக்கப்படாத உணவு.

புல், பச்சை இலைகள், பழங்கள் ஆகியவற்றை உண்டு வாழும் விலங்குகள் மனிதனைக்காட்டிலும் வலிமையாய்ந்து விளங்குகின்றன.

உணவுகளைச் சமைப்பதினால் உணவுப் பொருள்களில் உள்ள பல முக்கியமான உயிர்ச்சத்துக்கள் நீங்கிவிடுகின்றன. ஆதலால் சம்பிரதாயமாகச் சமைக்கப்படும் உணவுகளிலிருந்து நாம் நமக்குத் தேவையான உயிர்ச்சத்தைப் பெறமுடியாது. ★

தொகுப்பு:
க. கனகராசா.

உங்களிடம் இருக்க வேண்டியது என்ன?

இருக்க வேண்டியது:-
தூய்மை, நீதி, நேர்மை

ஆள வேண்டியது:-
கோபம், நாக்கு, நடத்தை.

பெறவேண்டியது:-
அன்பு, தைரியம், மென்மை

கொடுக்க வேண்டியது:-
இல்லாதவர்க்கு ஈதல், துன்புறுவோருக்கு ஆறுதல், தகுதியானவருக்குப் பாராட்டு,

அடைய வேண்டியது:-
ஆன்ம சுத்தம், முயற்சி, உள்ள மகிழ்வு,

தவிர்க்க வேண்டியது:-
துன்பம் செய்தல், முரட்டுத்தனம், நன்றி இல்லாமை.

– திருக்குர் ஆன்.

ஆங்கிலத் தட்டெழுத்து விசைப்பலகை மாற்றப்படுமா?

'சுமார் 50 வருடங்களுக்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆங்கிலத் தட்டெழுத்துமுறை விரைவில் மாறுதலான தட்டெழுத்தாளர்களுக்கும், கம்பியூட்டர் இயக்குனர்களுக்கும் உதவக்கூடியவகையில் உருவாக்கப்படவுள்ளது' இது அமெரிக்க தொழுவலகத் திறனாய்வு வல்லுநர்களின் கருத்தாகும்.

தற்போது நடைமுறையில் உள்ளதும் நம்பகரமானதும் என நாம் எண்ணிக்கொள்ளும் Qwert முறை ஒரு நூற்றாண்டுக்கு முன் கண்டுபிடித்த முறையாகும். ஆனால் இம்முறை தற்போது அபிவிருத்தி அடைந்த விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கமைய கம்பியூட்டர் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடியமுறையில் அமையவில்லை என கம்பியூட்டர் முறை விற்பன்னர்கள் கருத்துத் தெரிவிப்பதோடு அவர்கள் மிகவும் விரைவானதும் திறமையானதும் ஆன ஒரு முறையைத் தேடுகிறார்கள். 'தற்போதைய காலத்திற்கு ஏற்வாத விசைப்பலகை முறையினால் கம்பியூட்டர் அபிவிருத்தி தடைப்படுகிறதென்றே சொல்ல வேண்டும். அடுத்த பரம்பரை இயக்குனர்கள் கட்டாயமாகப் புதியதோர் முறையைப் பயில வேண்டும்' இது கம்பியூட்டர் துறை விற்பன்னர் ஒருவரின் கருத்தாகும்.

ஒரு நாளில் 16 மைல்கள்

'சாதாரண தட்டெழுத்தாளர் ஒருவரின் விரல்கள் ஒரு நாளில் 16 மைல்கள் செல்கின்றன' எனக் கருத்துத் தெரிவிக்கும் அமெரிக்கத் தொடர்புடைய டிவோரக் சர்வதேச சம்மேளனத்தைச் சேர்ந்த வேர்ஜினியா ரசல்; தங்களது முறையில் விரல்கள் கிட்டத்தட்ட 1 மைல் மட்டுமே அசைந்து அதே அளவு வேலைகளைச் செய்கின்றன எனக் கூறுகின்றார்.

வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பேராசிரியராகக் கடமையாற்றிய ஆகஸ்ட் டிவோரக் என்பவர் ஆங்கில எழுத்துக்களில் ஆராய்ச்சி செய்து அதன் விளைவுகளைக் கொண்டு தட்டச்சு விசைப்பலகை ஒன்றை அமைத்தார். இவ்விசைப் பலகை 1937 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அமைக்கப்பட்டது. இவ் விசைப்பலகையின் நடு வரிசையின் இடது பக்கத்தில் A, E, I, O, U என்ற 5 உயிர் எழுத்துக்களும் வலது பக்கத்தில் நாளாந்த பாவிப்பில் அனேகமாக உபயோகிக்கும் 5 மெய் எழுத்துக்களும் உண்டு. 'இப்பத்து எழுத்துக்களைக் கொண்ட விசைகளைக்கொண்டு ஆங்கில மொழியில் உள்ள 70 வீதமான சொற்களைத் தட்டெழுத்தில் பொறிக்கலாம்' எனத் தெரிவிக்கிறார் வேர்ஜினியா ரசல். அத்துடன் இவ்விசைப்பலகை மூலம் வழமையானதைவிட 35வீதம் விரைவாகப் பொறிக்கலாம் எனவும் அவர் கூறுகிறார்.

டிவோரக் தனது முறையைப் பிரபலமாக்கத் தட்டச்சுப் பொறித் தயாரிப்பாளரின் உதவியை நாடினார். ஆனால் அது உடனடியாகச் சாத்தியமாகவில்லை.

- க. வ. சிவச்சந்திரன் -

அவர் 1975 ஆம் ஆண்டு இறந்தபோது ஒரு சிலரே அவரது விசைமுறையைப் பின்பற்றினார்கள். குறைந்தளவு எண்ணிக்கையான இவ் விசைப்பலகையைக் கொண்ட தட்டச்சுப்பொறிகள் தயாரிக்கப்பட்டன.

இப்போது கம்பியூட்டர் துறை அபிவிருத்தியை முன்னிட்டு 'டிவோரக் சர்வதேச சம்மேளனம்' அமெரிக்கக் கம்பியூட்டர் தயாரிப்பாளர்களை, அவர்களது உற்பத்திச் சாதனங்களில் 'டிவோரக் விசைப் பலகையினை' பொருத்தும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

டிவோரக் முறை

'டிவோரக்' முறைப் பாவிப்பாளர்கள் 1980 இல் 5000 பேர் ஆகவும், 1985 இல் 1 லட்சம் பேர் ஆகவும் இருந்தனர். தற்போது இம்முறை ஹொப்டே பின்வருமாறு கூறுகிறார்.

'வாடிக்கையாளர்கள் Qwert விசைப்பலகை முறையை மாற்றும்படி வேண்டுகோள் விடுக்காததால் பல நிறுவனங்கள் தொடர்ந்தும் Qwert விசைப்பலகையைக் கொண்ட தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கின்றன'

'Qwert முறையைப் பாவிக்கும் அலுவலகங்களில் வேலை செய்வதற்காக நாம் புதிய தட்டெழுத்தாளர்களைப் புதிய விசைப்பலகையில் பயிற்றுவிக்கலாம்' எனக் கருத்துத் தெரிவிக்கிறார் பிரையன் பியர்ஸ் என்பவர். இவர் லௌபரோ பல்கலைக்கழகத்தில் பிரிட்டிஷ் விசைப்பலகைகளை ஆராய்ந்து செய்து வராகக் கடமை புரிகிறார்.

குவெர்ட் முறை மறைந்து விடுமா?

டிவோரக் முறையிலான தட்டச்சை அமெரிக்காவில் பாவிக்கும் நிறுவனங்கள், அதிகளவு வேலையைக் குறைந்தளவு தட்டெழுத்தாளரின் எண்ணிக்கையுடன் பெற்றுள்ளன எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

'ஒரு தட்டச்சாளரைப் புதிய விசைப்பலகையில் (டிவோரக்) இருவார காலத்தில் மீளப்பயிற்சியளிக்கலாம். ஆனால் நிறுவனங்களுக்கு இது கூடிய காலம். அநேக நிறுவனங்கள் ஏற்கனவே லிகிதர்களுக்குக் கூடுதல் வேலைகளைக் கொடுத்திருப்பதால் மீளப் பயிற்சியளிப்பது என்பது சாத்தியமாகாது' எனக் கருத்துத் தெரிவிக்கிறார் அமெரிக்க 'பனோசனிக்' நிறுவனத்தைச் சேர்ந்த பிராங் மாசி என்பவர்.

Qwert முறை 1873 ஆம் ஆண்டு பிரபல தட்டச்சு யந்திரத் தயாரிப்பாளர்களான றெமிங்டன் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பாக எழுத்து விசைகள் A, B, C, D, E என்ற வரிசைப்படி ஒழுங்கு படுத்தியிருந்ததாகத் தெரிகிறது.

115 ஆண்டுகளாகப் பாவிப்பில் இருந்து வரும் Qwert தட்டெழுத்து விசைப்பலகை முறை அழிந்து விடுமா? என்ற கேள்விக்குக் காலம்தான் பதில் சொல்லும். ★

தெய்வமே! என் உருவை மாற்றிடாயோ?

கல்லாக எனைப்படைத்த கடவுள் தன்னைக்
கண்டாலிந் நேரமவர் கால்கள்பற்றி
எல்லாமாய் இருக்கின்ற இறைவா என்னை
ஏற்றுக்கொள் இப்பிறவி வேண்டாமென்பேன்
பொல்லாத செயல்களுக்கா எனைப் படைத்தாய்
போதுமப்பா அவமானம் போதும் போதும்
கல்லாத மக்களின் சைப்பொம்மையாகி
கண்ணீரே வாழ்க்கையதாய் கொண்டுவிட்டேன்.

கூட்டத்தைக் குழப்புதற்கா நான் பிறந்தேன்
குருதிப்பலி எடுப்பதற்கா நான்வளர்ந்தேன்
ஓட்டத்தில் இருக்கின்ற பஸ்ஸைக் காரை
உடைப்பதற்கா இறைவனெனைப் படைத்தாரிங்கே?
பாட்டத்தில் எனைப்போட்டு பஸ் நிறுத்தி
பாய்ந்து கொள்ளை அடிக்கும் பெரும்பாவியரின்
கேட்டத்திற் குதவிடவா நான்வளர்ந்தேன்
தெய்வமே என்னுருவை மாற்றிடாயோ!

சிறுவர்க்கு எனைக்கண்டால் கொண்டாட்டந்தான்
தெருவினிலோ வழியினிலோ நிற்கும் நாயை
குறுகுறுத்த கைகளினால் எனையெடுத்துக்
குறிபார்த்து அடித்திடுவர் குளறும் நாய்கள்
நறுங்கனிகள் மரத்தினிலே பழுத்திருந்தால்
நானதற்கு நமனுவேன் வீட்டுயன்னல்
மறுபிறவி எடுத்திடவே செய்வாரிந்த
மைந்தரினால் படுந்துன்பம் போதும் போதும்!

— ஆனந்தி சிவஞானசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியல் கடலில் 'வழி தவறிய படகுகள்'

நாவலர் தலைமையில் உள்ள நால்வர் அணி நிலைமை எப்படி இருக்கிறது?

இந்த அணிக்கு ராமாவரம் தோட்டத்துக்கும் பாதை தெரிகிறது.

புதுடில்லிப்பட்டினத்துக்கும் வழி தெரிகிறது.

ஆனால்.....

ராமாவரம் தோட்டத்து அன்னையாரோ 'என் பிள்ளைகளே வருக! வருக!' என்கிறார்.

அங்கே அவரைச் சூழ்ந்து நிற்கும் சிலரோ, 'துரோகிகளே தூரப்போங்கள்' என்கிறார்கள். புதுடில்லி பட்டினத்துக்காறர்களோ 'சத்திய மூர்த்தி பவனுக்கு வருக! வருக!' என்று நால்வர் அணியை அழைக்கின்றனர்.

தனியாகப் போனால் பணியாளர் வேலை செய்யவேண்டி வருமோ? என்று நால்வர் அணியினர் சிந்திக்கின்றனர்.

ராமாவாரம் தோட்டத்துக்குச் சென்று அன்னை ஜானகி அணியோடு சேர்ந்தால் மதிப்பும் மரியாதையும் உண்டு என்று எண்ணுகின்றனர்.

ஆனால் இன்றைய நிலவரப்படி காங்கிரஸ் கட்சியுடன் உடன்பாடு காண ஜானகி அணி தயாரில்லை.

நால்வர் அணி மட்டும் காங்கிரஸுடன் உடன்பாடு காணமுடியுமா?

முடியும்! இருபது, இருபத்தைந்து இடங்களைக் காங்கிரஸ் விட்டுக் கொடுக்கக் கூடும்.

ஆனால் நால்வர் அணி ஏற்றுக் கொள்ளுமா? ஏற்றுக் கொண்டால் என்ன நடைபெறும்?

ஜெயலலிதா

தமிழ்நாடு தேர்தல்கூட்டு பற்றி ஜானகி அணிக்குள் குத்து வெட்டு?

மார்கழி நெருங்குகிறது! தேர்தல் ஜுரம் தமிழ்நாட்டில் தொடங்கி விட்டது.

தேர்தல் கூட்டு பற்றி மீண்டும் பரவலாகப் பேசப்படுகிறது.

அ. தி. மு. க. ஜானகி அணி யாருடன் கூட்டு வைக்கும் என்பது சொல்ல முடியாத ஒரு விஷயமாகி விட்டது.

ஜானகியின் வலதுகரமான முன்னாள் அமைச்சர் வீரப்பன் காங்கிரஸுடன் கூட்டு வேண்டாம் என்று ஆவேசமாகப் பேசி வருகிறார்.

எம். ஜி. ஆரை வைத்துப் படம் எடுத்து பின்னர் அரசியல்வாதியானவர் வீரப்பன்.

இப்போது ஜானகியை அரசியலுக்குள் நுழைப்பதற்குத் தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறார்:

நாவலர் தலைமையிலான நால்வர் அணியை 'நான்கு சகுனிகள்' அணி என்று வேறு வீரப்பன் வர்ணித்து வருகிறார்.

காங்கிரஸுடன் கூட்டா? அப்படி ஒரு திட்டம் இருப்பின் அதற்கு வைப்பேன் வேட்டு— என்று வீராவேசமாக அவர் ஆற்றிய ஒரு பேச்சின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

காமராஜர் ஆட்சியைக் கொண்டு வர நான்கு சகுனிகள் துணை போகிறார்கள்.

அவர்கள் சொல்லும் காரணம் தி. மு. க. ஜெயலலிதா அணி பதவிக்கு வரக்கூடாது என்பதே.

எங்கள் முதுகில் குத்திய துரோகிகளுடன் கூட்டுச் சேருவதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவதே மேல்.

ஜானகி

எங்களுடன் கூட்டு, யாருடன் கூட்டு? அதற்கு யார் தலைமை? என்பதுதான் கேள்வி.

ஜானகி தலைமையில் கூட்டா? அல்லது காங்கிரஸ் தலைமையில் கூட்டா?

ஜானகியை முதல்வராக ஏற்றுக் கொள்பவர்களுடனேயே அ. தி. மு. க. கூட்டுப் பற்றிப் பேசும்.

செஞ்சி கோட்டையில் ஏறி பலர்கள் எல்லாம் தேசிங்கு ராஜன் அல்ல. குடிசைக்குள் நுழைந்தவன் எல்லாம் எம். ஜி. ஆர் அல்ல. எம். ஜி ஆர். இருந்த இடத்தில் யார் இருப்பது என்பது தான் கேள்வி.

இப்படி வீரப்பன் பேசி வருகிறார். ஆனால் அவரின் தலைவி ஜானகி அம்மாளோ,

யாருடன் தேர்தல் கூட்டு என்பது பற்றி நான் தீர்மானிப்பேன். வேறு யாரும் அல்லர்— என்று கூறிவிட்டார்.

ஜானகி அணிக்குள் குத்து வெட்டா என்ற கேள்வி இப்பேச்சு எழுப்பியுள்ளது.

★

'காமராஜர் ஆட்சி அமையக் காங்கிரஸுக்கு வாக்களியுங்கள்' என்று மூப்பனார் பிரசாரம் செய்வார். ஏன்? பிரதமர் ராஜீவ் காந்தியே வந்து பிரசாரம் செய்வார்.

'ஆமாம்! காமராஜர் ஆட்சி அமைய எங்கள் கூட்டணிக்கு வாக்களியுங்கள்' என்று நால்வர் அணியும் காங்கிரஸுடன் சேர்ந்து கோஷம் போட முடியுமா?

அப்படிக் கோஷம் போட்டால் அ. தி. மு. க. தொண்டர்கள் என்ன நினைப்பார்கள்?

தோழமை உறவுக்கும் பல்லக்குத் தூக்குவதற்கும் உள்ள வேறுபாடு நால்வர் அணியினருக்குத் தெரியாதது என்ன?

எனவே தான் எந்தத்திசையில் அடியெடுத்து வைப்பது என்று நால்வர் அணி திகைத்துப் போய் நிற்கிறது.

தேர்தல் வரை யாவது 'எல்லோரும் நல்லவர்களே' என்ற எண்ணத்தில்

சென்னையிலிருந்து தி. மேனகன்

அனைவரையும் அணைத்துச் சென்றிருக்க வேண்டும் என்று இப்போது ஜெயலலிதா அணி கருதுகிறது.

பேய்க்குத் தாலி கட்டினால் சகித்துக் கொண்டு தானே போக வேண்டும்? தேர்தல் வரை பொறுமைக்குப் புகலிடம் கொடுத்து ஜெயலலிதா அணியிலேயே இருந்திருக்கலாம் — இப்படி இப்போது நால்வர் அணியினரும் கருதுகின்றனர்.

இந்த இரண்டு அணிகளுமே இன்றைக்கு வழி தவறிய படகுகளைப் போல் அரசியல் கடலில் திசை தெரியாது வலம் வந்து கொண்டு இருக்கின்றன.

நன்றி: ஜூனியர் விகடன்

தங்கக் கனவு

வெள்ளிக் கட்டிலில் படுத்துக்கொண்டு தங்கக்கனவுகள் காண்கிறார் ஜெயலலிதா.

—நாவலர் நெடுஞ்செழியன்

ராவணன் கொண்டுவரும் 'ராமராஜ்யம்'

காமராஜர் கொண்டுவந்த நில உச்சவரம்புச் சட்டத்தை ஏமாற்றிய மூப்பனார், காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவேன்' என்பது ராவணன் 'ராமராஜ்யத்தை' ஏற்படுத்துவேன் என்பதைப்போல் இருக்கிறது.

—முன்னாள் அமைச்சர் காளிமுத்து

கந்தனை வேண்டி நிற்பீர்!

நீலமார் மயில் மீ தென்றும்
நிலவிடும் முருகன் பாதம்
கோலமார் மலர்கள் கொண்டே
கும்பிட்டு வாழ்வோ மென்றும்
சீலமார் அடியார் எல்லாம்
சிறப்புடன் தொழுதே வந்தால்
ஆலமார் துன்பம் எல்லாம்
ஆதவன் பனிபோல் ஆகும்

கந்தனை வேண்டி நாங்கள்
கருதிய நோன்பு நோற்றோம்.
வந்தனை செய்தோம் பின்னர்
வழித்துணை ஆவாய் என்றே
சிந்தனை தேக்கி நாளும்
சிறுமைகள் போக்காய் என்றே
செந்தினை கொண்டே விளக்கு
சிறப்புடன் ஏற்றி வாழ்வோம்

நெஞ்சிலே கவலை தேங்கி
நிதம்நிதம் தேயும் நாளில்
துஞ்சியே மடியும் பக்தர்
துயரினைத் தீர்ப்பாய் கந்தா
அஞ்சியே தினமும் நாங்கள்
அவலங்கள் படுதல் நன்றோ
செஞ்சியே நின்னைக் கேட்டோம்
செடுதிகள் காப்பாய் என்றோ

— முருக வே பரமநாதன்

வீட்டு வளவில் இரண்டு முன்றடி வாழை

முக்னிகளில் மிகவும் இன்றியமையாததும், சத்துள்ளதும், இலகுவில் உண்டாக்கக்கூடியதும் பலவித பயன் தருவதும், மங்களகரமானதும் எல்லாமானதும் வாழைப்பழம். குழந்தைப்பிள்ளையின் பாலுணவின்பின் பதமான பக்குவமான உணவு வாழைப்பழம். குழந்தைப்பாடலில் வளவில் முற்றத்திலும் வேலியிலும் பக்கத்திலும் வாழை குலை போட்ட செய்தி தாளத்தோடு கேட்கிறது. கூத்தும் ஆடுகின்றார்கள்.

''ஆத்து வாழை குலைபோட
ஆறனும் பெண்டிலும்
கூத்தாட
முத்தத்து வாழைகு லைபோட
முத்தனும் பெண்டிலும்
கூத்தாட
வேலியில் வாழை குலைபோட
வேலனும் பெண்டிலும்
கூத்தாட
பக்கத்து வாழை குலைபோட
பக்தனும் பெண்டிலும்
கூத்தாட''

வீட்டுத் தோட்டத்தில் வாழைக்கு முக்கிய இடம் கொடுத்தல் அவசியம். அது பரம்பரையாக நின்று பயன் தருவது.

- மில்க்வைற் செய்தி

கவித்துளி

வசந்தம் வருமா?

அன்று
இன்பப் பூரிப்பில்
பள்ளி சென்று
கல்வி பயின்றேன்
அன்றெல்லாம்
என் மனதில்
சலனச் சாயலே
தோன்றவில்லை
ஆனால்
இன்று ஏன்?
நான் வாடுகிறேன்.
இது
காலம் செய்த
சோதனையா?
அல்லது
கடவுள் தந்த
தண்டனையா?
வேதனைக் களத்தின்
விளிம்பிலே
நான் நின்று
விழி நீரைத்
தெளிப்பதுதான்
என்
பொழுது போக்கு
சென்று விட்ட
வசந்த நினைவுகள்
இருளான
என் வாழ்வில்
மீண்டும் ஒரு முறை
வந்திடுமா?
இல்லையேல்
இதுதான்
எனக்குத் தண்டனையா?

– அ. நிக்ஸன்

நினைவு

உன் நினைவுகள்
என் இதயத்தை
தீயாய் சுட்டன
நான் குளிர்ச்சி பெற
அருவியைத் தேடினேன்
என் இதயம் குளிரவில்லை
அருவிதான் சூடானது.

– மத்தொனி வர்மன்

சில நேரங்களில்

சிலர் வாழ்ந்தும்
இறக்கிறார்கள்!
சிலர் வாழ்ந்துவிட்டு
இறக்கிறார்கள்!
சிலர் இறந்தும்
வாழ்கிறார்கள்!

—குமார் தனபால்

புது யுகம் காண்போம்...

காரிகையைக்
கைப்பிடிக்க
கைக்கூலி
வேண்டுவதா...?
காளையரே
சிந்தியுங்கள்!
மதிகெட்ட
மனிதர்களின்
வரட்டுக்
கௌரவத்தால்!
சீர்வரிசை
கேட்கின்ற
சின்னஉள்ளம்
படைத்தவர்கள்
சிதறிப்
போகட்டும்...!
என்தருமை
தோழர்களே
எழுந்து
வாரீர்...
புது யுகம்
காண்போம்
பொலிவுடன்
திகழ்வோம்... !

-மணித்திவு சிவனேஸ்.

நீயே சொல்லு

புதுயுகம் பிறக்குமா...?
பூபாளராகம் இசைக்குமா?
புவிதனல் அமைதி
நிலவுமா...?
பூந்திடலே நீயே சொல்லு!

– யாழினி –

அனுக்கிரகம்

இறைவாவா
தலைவா வா
எப்போதும் போல்
அல்லாதிப்போது
உன் அனுக்கிரகம்
உலகிற்குத தேவை
வல்லவரென்று
[illegible]
[illegible]
[illegible]
முழுமையாய்
[illegible]
[illegible]
[illegible]

நாளுக்கோர் புதுமை,
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்
சீமாட்டி
யாழ்ப்பாணம்

சஞ்சீவி சஞ்சிகை

03-12-1988 சனிக்கிழமை

நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை
இவற்றை
அளிப்பதுதான்
சீமாட்டி
யாழ்ப்பாணம்.
சுன்னாகம் தவிர்ந்த
ஏனைய இடங்களில்
எமது கிளைகள் இல்லை
என்பதை
அறியத்தருகின்றோம்
சீமாட்டி
Seemati

ஆன்ம தத்துவத்தை உணர்த்துவதே பிரணவத்தின் உட்பொருள் ஆகும்.

- எஸ். சங்கரன் -

முருகப்பெருமான் பிரம்மனைச் சிறை அடைத்துப் பின் தந்தை சொல்லால் சிறையினின்று மீட்டு, பின் தந்தைக்கே உபதேசித்தாரே அந்த—

பிரணவப் பொருள் தான் என்ன? 'ப்ர', என்றால் விசேஷமானது;

'நவம்', என்றால் புதுமை.

அனுபவிக்க அனுபவிக்கப் புதுப்புது விசேஷ உண்மைகளை உணர்த்துவது பிரணவம்.

என்றும் வாடாமல், காலத்தால் தேயாமல் எப்போதும் புதுமையாக இருக்கும் ஆன்ம தத்துவம்தான் பிரணவம்.

மாயா

உலகை மாயா என்று கொள்கிறோம். இதனை வேறொரு மதஸ்தர்கள் வேறு வேறு பொருள் கொள்கிறார்கள்.

ஒரு பொருள், 'மா'— ஒடுக்கம், யா — தோற்றம். தோற்றமும் ஒடுக்கமும் உடையது உலகம் என்பது பொருள்.

இந்த உலகம் எதில் தோன்றியதோ அதில் ஒடுங்குகிறது.

தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும், பரப்பிரம்மம்தான் காரணம் என்று வேதம் சொல்லுகிறது.

கடல்நீரை மாயை என்று சொல்வோமானால் அதன் வெளிதான் பிரம்மம்.

கடலில் தோன்றி, கரையில் மோதி மோதி அழியும் அலைகள்தான் உயிர்கள். ஆக உயிர்களும், உலகும் பிரம்மத்தில் இருந்து தோன்றிப் பிறகு அங்கேயே மடிகின்றன.

மூலப்பிரகிருதி

மூலப்பிரகிருதி என்பது ஆன்மாக்கள் எல்லாம் வெளிப்படுவதற்கும், எண்ணற்ற அண்டங்கள் தோன்றிப் பெருகுவதற்கும் அடிப்படையாக இருப்பது.

மூலம் என்றால் வேர்; பிரகிருதி என்றால் இயற்கை.

ஆன்மாக்கள் யாவும் மூலப் பிரகிருதியிலே அணுவடிவில் அடங்கியிருக்கின்றன,

மூலப் பிரகிருதியிலேயே அடங்கியிருக்கின்ற ஆன்மாக்களுக்குத் தனிப்பெருங்கருணையால் விடுதலை தந்து, விடிவு எடுத்துக் கொள்ள உடலும் தந்து, சிந்திக்க உள்ளமும், வாழ உலகும் தந்து ஆட்டுவிக்கிறது அருட்பெருஞ்சோதி.

தனு, கரணம், புவனம், போகம் என்ற பெயர்களில் முறையே, உடல், உள்ளுறுப்பு, உலகம், இன்பம் இவற்றை அளிக்கிறது.

பராசக்தி

இறைவனுடைய இந்தத் தனிப்பெருங் கருணையைத் தான் 'பராசக்தி' என்கிறோம்.

பராசக்தியாகிய அந்தக் கருணை வெள்ளத்தை எது தாங்க முடியும்?

மகாநதியைப் பயிர்கள் தாங்கமுடியாததால் பற்பல கால்வாய்கள் மூலம் பிரித்து வயலுக்குள் விடுகின்றோம் அல்லவா?

இதே போல் பராசக்தியாகிய கருணை வெள்ளம் பிரிந்து, பிரிந்து வந்து உயிர்களுக்கு உய்வு அளிக்கிறது.

பராசக்தியின் ஆயிரத்தில் ஒரு பங்கு ஆதிசக்தி. அதன் ஆயிரத்தில் ஒரு பங்கு ஞான சக்தியாகப் பிரிந்தது.

இதனுள் இருந்து ஆயிரத்தில் ஒரு பங்காகப் பிரிந்தது கிரியாசக்தி. இதுதான் உலகை இயக்குவது. இதனுள் ஆயிரத்தில் ஒரு பங்காகப் பிரிந்தது இச்சாசக்தி.

இச்சா சக்தியான அருள் வீழ்ச்சி, விந்து என்ற சுத்த மாயையில் விழ, அது சுழன்றது.

குடிலா சக்தி

நீர் வீழ்ச்சியானது சக்கரத்தில் விழுந்தவுடன் அது சுழன்று மின்சாரம் உண்டாவது போல் குடிலாசக்தி பிறந்தது. (வட்டமான விந்தில் இருந்து நேரான ஒரு சக்தி பிறந்ததைக் குறிக்கு முகமாகவே சுழியுடன் கோடு சேர்த்து 'உ' என்று பிரணவப் பொருளாகிய பிள்ளையார் சுழி இடுகிறோம்).

குடிலையின் வடிவமே ஓம். குடிலை விந்துவின் சுழற்சியில் இருந்து நேராகப் பிறந்த போது அதிலிருந்தே நாதம் உண்டாயிற்று.

அதாவது, இறைவனது அருள் வீழ்ச்சியானது சுத்த மாயையில் விழும்போது அது சலனத் தொடங்குகிறது.

ஆறுமுகங்கள்

அப்போது பிறந்த குடிலையில் இருந்து முத்தொழில் புரியும் மும்மூர்த்திகள் தோன்றுகின்றார்கள்.

விந்து சுழன்றது. நாதம் நேராகத்தோன்றியது.

இதுவே சுழியும் கோடும் சேர்ந்து 'உ' என்று முதலில் எழுதுகின்ற பிள்ளையார் சுழி.

பராசக்தியில் இருந்து குடிலா சக்திவரை மொத்தம் ஆறுசக்திகள் உள்ளன.

இந்த ஆறுசக்திகளே முருகப்பெருமானின் ஆறுமுகங்கள்.

மயில் தோகையை விரித்தாடும்போது தோகையில் ஆரம்பித்து கால் நுனிவரை பார்ப்போமேயானால் 'ஓ' (ஓம்) என்று தெரியும்.

உலக மாந்தரின் தாய் ஓர் ஆபிரிக்கப் பெண்

உலக மாந்தரின் தாய் எந்த நாட்டுப் பெண்?

ஆதாமும் ஏவாளும் முதலில் சந்தித்த ஈடன் தோட்டம் எந்த நாட்டில் இருந்தது?

இவை பற்றி புதிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

லண்டன் தேசிய வரலாற்று மியூஸியத்தைச் சேர்ந்த தொல்லுயிரியல் விஞ்ஞானி டாக்டர் கிறிஸ்டோபர் ஸ்ட்ரிங்கர் (Christopher Stringer) அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கற்படிவங்கள், மரபியல் பற்றிய புதிய கண்டுபிடிப்புகள் பற்றி விரிவான ஆராய்ச்சிகளை நடத்தினார்.

உலகில் உள்ள மாந்தர் அனைவரும் ஒரு பெண்ணின் வழி வந்தவர்களே. அப்பெண் ஆபிரிக்கக் கண்டத்தில் வசித்திருக்கவேண்டும்.

கறுப்பர், வெள்ளையர், பழுப்பு நிறத்தவர், மஞ்சள் நிறத்தவர் போன்ற இன வேறுபாடுகள் எல்லாம் பின்னர் ஏற்பட்டவையே.

உலக மக்கள் அனைவரும் உயிரியல் ரீதியில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.

நவீன மனிதன் ஹோமோ சேபியன்ஸ் (Homo Sapiens) எனப்படும் இனத்தைச் சேர்ந்தவன். இந்த இனம் இன்னமும் பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டதாகவுள்ளது.

இதற்கு முன்ன 'நியன்டர்தால் மனிதன்' என்ற இனம் இருந்தது.

ஐரோப்பாவில் இந்த இனம் சுமார் 3 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் நீடித்தது.

அதன் பிறகு, அதாவது 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நவீன மனிதன் தோன்றினான்.

ஐரோப்பாவில் சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வரை அந்த மனிதனிடம் 'ஐரோப்பியருக்குரிய' அம்சங்கள் தோன்றி வரலாயின.

ஐரோப்பியருக்குரிய அங்க லட்சணங்கள் நியன்டர்தால் மனிதனிடம் இருந்து வந்தவை அல்ல.

எனினும் ஆபிரிக்காவில் தான் கடைசியான பழங்கால மனிதனுக்கும் முதலாவது நவீன மனிதனுக்கும் இடையில் உண்மையான பரிணாம வளர்ச்சிச் சங்கிலியை நாம் கண்டறியமுடிகிறது.

ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஈடன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் சந்தித்துக்கொண்ட நிகழ்ச்சி, ஆபிரிக்காவில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

டாக்டர் ஸ்ட்ரிங்கரின் ஆராய்ச்சியில் மேற்கூறப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் வெளியாகியுள்ளன. (எ-4)

மகிழ்ச்சியே வாழ்வின் வளர்ச்சி

பெற்றோரின் மகிழ்ச்சியில் நாம் மனிதர்களாகப் பிறந்திருக்கிறோம். நம்முடைய உதயமே மகிழ்ச்சியின் தன்மையாக இருப்பதனால்—

நாம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தே ஆக வேண்டும்.

'நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒரே ஒரு பொருளைத் தான் கொடுக்க முடியும் என்றால், மகிழ்ச்சியைக் கொடுங்கள்' என்று சட்டனீயிடுகிறார் அமெரிக்க மனோ தத்துவ டாக்டர் சன்புரூஸ்.

மகிழ்ச்சிதான் உலகிலேயே மிகச் சிறந்தது. எப்படியென்றால் மகிழ்ச்சியைப் பலரும் பலருக்கும் கொடுக்க முடியும்.

பணத்தைவிட மகிழ்ச்சியில் பெரிய வசதி இருக்கிறது. அதனை எவரும் கடன் கேட்க முடியாது.

மகிழ்ச்சியை விலை கொடுத்து வாங்க முடியாது. அது உள்ளத்தில் உற்பத்தியாகும் ஊற்று.

ஏதாவது ஒரு செயலைச் செய்துகொண்டேயிருப்பவர்களால்தான் மகிழ்ச்சியாக இருக்கமுடியும்.

ஒன்றும் செய்யாமல் இருப்பவர்களுக்கு எதிலும் சலிப்புத்தான் ஏற்படும்.

இதன் அடிப்படையில்தான் ஆர். எல். ஸ்டீவன்சன் கூறுகிறார்.

'மகிழ்ச்சி பொங்கும் முகம் உடையவர் வந்தால்போதும் உடனே வீட்டில் புதியதோர் ஒளி உதயமாகிவிடும்.'

நாம் மகிழ்ச்சியுடன் இருப்பின் நம்முடன் இருக்கும் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கமுடியும். இது பரம்பரைச் சொத்துப்போல. தொடர் சங்கிலியாக எல்லோரிடமும் பரவிக்கொண்டே வரும்.

வாழும்பொழுது இதயத்தை மகிழ்ச்சியில் நிரப்பாவிட்டால் இறந்தபிறகுதானா மகிழ்ச்சியைப்பெறமுடியும்?

வாழ்க்கையின் அஸ்திவாரமே மகிழ்ச்சியுடன் இருக்கும்பொழுது.....

எப்படி வாழும் நிலையில் மகிழ்ச்சி இல்லாமல் போய் விடும்?

நமக்கு நாமே மகிழ்ச்சியுடன் இருக்காவிட்டால் வேறு யார் வந்து மகிழ்ச்சியை நமக்குத் தரமுடியும்?

மகிழ்ச்சி வெளியில் இல்லை நம்மிடமே உள்ளது. அது உள்ளத்திலே உருவாகுவது.

மகிழ்ச்சியாக இருந்தால் தான் நம்முடைய வளர்ச்சி வளர்ந்துகொண்டே இருக்கும். இது இல்லாவிடில் வாழ்வே சுருங்கிவிடும்.

நாம் மகிழ்ச்சியின் மன்னராக வாழ்ந்து வளம் சேர்ப்போம்.

— மெர்வின்

மயிலே ! மயிலே ! !

- கி. வா. ஜகந்நாதன் -

வடிவ எழிலார் மங்கையர்தம்
வாகார் சாயல் உனைப்போலப்
படியும் என்பார்; அணி நடையும்
பார்க்கும் நின்போல் உளதென்பார்;
அடியும் முடியும் அறியாத
அரியும் அயனும் போற்றுகின்ற
வடிவம் உனக்கு வாய்த்திருக்க
வரம்யார் கொடுத்தார் பசுமையிலே?'

வேலும் மயிலும் துணையென்றே
வேலன் அன்பர் போற்றுகின்றார்,
சாலும் இந்தப் பெருமையினைத்
தரணி வாழ்வோர் அறிவார்கள்;
காலை எடுத்து நடமாடும்
கவினைத் தில்லைக் கூத்தனிடம்
ஏலும் படிநீ பழகினையோ...?
என்னென் றுரைப்பேன் பசுமயிலே...?

தனியாய் உன்னை விட்டுவிட்டால்
தழைக்கும் தோகை வட்டமிட்டுப்
பனிமா மலையில் அப்புறத்தும்
பரவும் கடலின் அப்புறத்தும்
நவிநீ சென்றே ஆடுகின்ற
நயத்தைக் கந்தன் அலங்காரம்
கவியக் கூறும் படி கண்டால்
காட்டும் நின்வீரம் தெரிவோம்.

'உன்றன் கலாபத் தினில்; இருக்கும்
ஒளிசால் நிறங்கள் வானவில்லில்
துன்றல் இல்லை; தூயநின்றன்
சுடர்மா மேனி வடிவழகை
ஒன்றும் வகைபாடு தர்க்கா
உயர்ந்த அருண கிரிநாதர்
தொன்று கந்தர் அநுபூதித்
துதியில் சொன்னார், பெருமையன்றோ?

இமயமலையின் புதல்வியாம்
இருக்கும் உமையாள் தனக்குவமை
அடைய உன்னைப் புலவர்கள்
ஒதுவார்கள், அஃதுன்பால்
சமையும் என்ன காட்டுதற்கோர்
சான்றே அன்றோ...? அழகாகும்
சுமையைச் சுமப்பாய் நீ வாழி
சுடர்வே லவன்றன் அருள்வாழி'

வண்ணத் தோகை யினை விரித்து
மகிழ்ந்தே ஆடும் எழில் மயிலே
நண்ணற் கரிய இவ்வழகுற
நவிநீ செய்த தவம் எனனே...?
அண்ணல் முருகன் வாகனமாய்
அமையப் பெற்றாய்; அதுபோல
மண்ணில் பறவை வேந்தாக
மண்ணும் புகழுக் குவமையுண்டோ...?

உன்றன் தோகை யினின் சிறகில்
ஒன்றைத் தலையில் அணிந்து கொண்டு
மன்றல் மலரிது நாடக் கண்ணபிரான்
வளரும் தலைமேல் வைத்திருப்பான்;
தன்னும் அரலின் பகையாக்கித்
தோன்றும் நீதான் கோம்பிற்குப்
பொன்றும் வகையைச் செய்யாத
பொற்பைப் பெறுத வகைஎன்னே...?

மலர்சூழ் பொழிலே விளையாடி
மாமே கத்தைக் கண்டு விட்டால்
அலரும் மகிழ்ந் தினிய நீரால்
அடைந்தாய் நீ மழைதான் இல்லையென்றால்
உலகில் எந்த வனம் சிறக்கும்...?
ஓதும் இதனை உணர்ந்து கொண்டே
பாரும் போற்ற முகில் கண்டு
வண்ணத் தோகை பரப்புகின்றாய்.

ஓங்கா ரத்துள் விளைவென்றே.
உன்னைச் சொல்வார் கருணைஒளி;
பாங்கார் வேத முதல் சொல்
பன்னு குறள்மா பொய்யாய்
நீங்கா ராக அதனுள்ளே
திகழ்ந்து நின்றான் வேல்முருகன்;
நீங்கள் இந்த நிலைதன்னை
நீதான் எடுத்துக் காட்டுகின்றாய்

முகுந்துமூரல் என்றுமங்கை
மாரின் நகையைப் புலவர்கள்
திருந்தும் கவியில் சொன்னார்கள்;
தீய சூரன் உன்வடிவாய்
இருந்து முருகன் தனைச் சுமக்க
என்ன தவத்தைச் செய்தாயோ?
வருந்தும் வருத்தும் உன்னைக் கண்டார்
மடிந்து போகும் எனல் திண்ணம்.

பழம்பெரும் தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன் தனது 83 ஆவது வயதில் அண்மையில் காலமானார்.

'கலைமகள்' ஆசிரியராக 50 ஆண்டுகளுக்கு மேலாக அவர் பணியாற்றியவர். இறக்கும் போதும் அவரே 'கலைமகள்' ஆசிரியர்.

அன்னாரின் தமிழ்ப் பணியை நினைவுகூருமுகமாக அவர் 30 ஆண்டுகளுக்கு முன் இயற்றிய மயிலே! மயிலே!! என்ற கவிதை இங்கு பிரசுரமாகிறது.

கருத்துக் கலசம்

தமிழ்ப் பணி

உலகில் வாழும் - வழங்கும் - விளங்கும் மொழிகள் பல. அவற்றில் தொன்மை மிக்கவை சிலவே.

அவ்வாறு தொன்மை மிக்க மொழிகளில் மூத்த மொழி. – முதிர்ந்த மொழி தமிழ். அது வளம் நிறைந்தது. சிறப்புகள் மிக்கது. நன்நெறி காட்டுவது. நல்வழிப்படுத்துவது. கலை கொழிப்பது. இன்பம் ஈய்வது. அன்பை ஊட்டுவது. சமரசம் தருவது. ஆக்கம் நிறைந்தது. ஊக்கம் கொடுப்பது. வீரம் விளைவிப்பது. காதல் கனிவது. வெற்றி தருவது. இது தமிழ் அன்னையின் சிறப்பு.

''உலக மொழிகள் சுமார் மூவாயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் தொன்மை, முன்மை, எண்மை(எளிமை) ஒண்மை (ஒளிமை), இளமை, வளமை, தூய்மை, தாய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல வகைச் சிறப்புக்களை ஒருங்கேயுடையது தமிழ்மொழி. அத்தகைய சிறப்புடையது எனினும் அது அத்தகையது என்பதுஇன்றுதமிழராலும் அறியப்படவில்லை''– இப்படி தேவநேய பாணர் கூறுகிறார்.

அவரது கூற்று முற்றிலும் உண்மையானது. தமிழின் சிறப்பை தமிழரே உணரவில்லை என்பது எத்துணை மனவருத்தத்திற்குரியதொன்றாகும்?

'வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'சிறப்புற்று திகழ்ந்த உண்மையைத் தமிழர்க்கு உணர்த்தும் முயற்சிகள் உடனடியாகத் தேவை.

இந்த முயற்சியில் தமிழக அறிஞர்களுக்குப் போட்டியாக ஈழத்தமிழ்ப் பெரியோர்களும் தமது முத்திரையைப் பொறிக்க வேண்டும்.

ஓர் இனத்தின் பண்பாடு, நாகரிகம், கலாசாரம், பழக்கவழக்க முறைகள் ஆகியவற்றை — அவர்களது மொழியை ஓர் அறிகருவியாகக் கொண்டே தெளிய முடியும் என்கிறார் ஓர் அறிஞர்.

தொன்மையான மொழிகள் பல பெருமை குன்றி, செல்வாக்கு இழந்து வழக்கொழிந்து அழிந்து போயின; அல்லது எழுத்து வடிவில் நூல் வழக்கில் மட்டும் எஞ்சின.

ஆனால் தமிழ் மொழி மட்டும் சீர்பெற்று செழித்தோங்கி சிறப்புற்று வருகிறது.

எழுத்துச் சீர்திருத்தம் முதல் புதுக்கவிதை வரை பல்வேறு வகையில் தமிழ் மொழியின் சொல்நெறி மாறிவருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியின் — இனத்தின் — பண்டைய சிறப்புகளை ஆய்ந்து அறிந்து வெளிக்கொணர்வது ஒரு புறமும் —

புதுமைச் சிறப்புக்களை தமிழ் மொழியில் புகுத்துவதை ஒரு புறமும் செவ்வனே செய்யவேண்டியிருப்பது தமிழ்ப் பணிக்கான இன்றைய கடமையாகும்.

இந்த முயற்சியில் நுண்ணிய கவனமும் மிகுந்த சிரத்தையும், ஆழ்ந்த ஈடுபாடும், நிறைந்த ஆய்வும் அவசியமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org